# ஊடக பரப்புரை கருவித்தொகுப்பு

## ஜனநாயக இலங்கைக்காக ஊடகங்களை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (MEND)



# உள்ளடக்கம்


தலைப்பு

அறிமுகம் 03

பிரிவு ஒன்று

தொகுதி 1 - பரிந்துரை என்றால் என்ன? 04

தொகுதி 2 - பரிந்துரை திட்டமொன்றை உருவாக்குதல் 05

தொகுதி 3 - பிரச்சினையை அடையாளம் காணுதல் 08

தொகுதி 4 - பிரச்சினையை பகுப்பாய்வு செய்தல் / சாத்தியமான தீர்வு 10

தொகுதி 5 - பங்குதாரர்கள் மற்றும் சூழல்தொகுதி 6 - குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் 15

தொகுதி 7 - கொள்கை நிலைகள் பற்றி தெளிவுபடுத்துதல் மற்றும் கேட்டல் 21

தொகுதி 8 - தந்திரோபாயங்களைத் தெரிவுசெய்தல் 23

தொகுதி 9 - விடயங்களை உருவாக்குதல் 26

தொகுதி 10 - பரிந்துரை மூலோபாயம் ஒன்றை உருவாக்குதல் 29

தொகுதி 11 - பரிந்துரை திட்டமிடல் 32

பிரிவு இரண்டு 33

கொள்கை உருவாக்கம்

தொகுதி 1 - தகவல் சேகரிப்பு 34

தொகுதி 2 - தகவல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல் 36

தொகுதி 3 - ஆலோசனை 38

பிரிவு மூன்று 42

வளங்களை நிர்வகித்தல்

தொகுதி 1 - வளங்களின் வகைகள் 42

தொகுதி 2 - வள முகாமைத்துவ உத்திகள் மற்றும் நுட்பங்கள் : வருடாந்த திட்டத்தை கொண்டிருத்தல் 43

தொகுதி 3 - வளங்களை திட்டமிடுதல் 45

தொகுதி 4 - நிதி திரட்டுதல் 49

தொகுதி 5 – தன்னார்வ தொண்டர்களை உள்வாங்குதல் 52

தொகுதி 6 - அறிக்கையிடல் மற்றும் மதிப்பீடு 53

பிரிவு நான்கு 55

திறனுள்ள பிரச்சாரம்

தொகுதி 1 - பரிந்துரைக்கும் தொடர்பாடல் 55

தொகுதி 2 - வலையமைப்புகளை உருவாக்குதல் 61

தொகுதி 3 - பரப்புரை 64

பின்னிணைப்பு 68

# அறிமுகம்

**சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பரிமாற்றச் சபை (IREX)/ஜனநாயக இலங்கைக்காக ஊடகங்களை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் (MEND) பரப்புரை கருவித்தொகுப்பிற்கு வரவேற்கின்றோம்!**

புதிய விடயங்களை கண்டுபிடிக்கும் பயணத்தை நீங்கள் ஆரம்பிக்கவுள்ளீர்கள். இந்த கருவித்தொகுப்பில் நீங்கள் இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் விடயங்களின் விளக்கங்கள், குறிப்புகள் மற்றும் உதாரணங்கள் என உங்கள் சொந்த பரப்புரை பிரச்சாரங்களை மேம்படுத்த மற்றும் உயர்த்தவேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்வீர்கள்.

சிறந்த நடைமுறைகளை விளக்குவதற்காக இதன் உள்ளடக்கம் பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இலங்கைச் சூழலுக்கு பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சாதனத்தின் ஊடாக நீங்கள் பெறுமதியான விடயங்களை பெற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். நீங்கள் பணியாற்றும்போது கற்றுக்கொண்ட விடயங்களை வழங்குவதன் மூலம் இந்த கையேட்டில் அவற்றை சேரத்துக்கொள்ள முடியுமென நாம் நம்புகின்றோம் மற்றும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த கருவித்தொகுப்பை ஒன்றிணைக்கும்போது நாம் PACT மற்றும் Freedom House ஆகியவற்றின் வெளியீடுகளை பயன்படுத்தியமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம். நீங்கள் மூலப்பிரதிகளை படிக்க விரும்பினால் பின்வருவனவற்றில் அவற்றைப் பார்வையிடலாம்: "Politically Smart Advocacy: நிலையான அபிவிருத்திக்காக பயனுள்ள சிவில் சமூக பரப்புரைக்கான வழிகாட்டி" (PACT, 2018) மற்றும் "Advocacy in restricted spaces: சிவில் சமூக அமைப்புகளுக்கான கருவித் தொகுப்பு" (Freedom House, 2020).

## இந்த கருவித்தொகுப்பை ஏன் பயன்படுத்த வேண்டும்?

பரப்புரை செயற்பாட்டை உருவாக்குவதற்கான ஒரு அறிமுகக் கட்டமைப்பை இந்த கருவித்தொகுப்பு உங்களுக்கு வழங்கும். இந்த வழிகாட்டியை பயன்படுத்த உங்களுக்கு முன்கூட்டிய அறிவு தேவையில்லை. மேலதிக வாசிப்புக்கான பரப்புரை கள் உள்ளடங்களாக உங்களுக்குத் தேவையான சகல விடயங்களையும் இங்கு பெற்றுக்கொள்வீர்கள்.



## இந்த கருவித்தொகுப்பிலிருந்து எதிர்பார்க்கப்படுவது என்ன?

இந்த கருவித்தொகுப்பு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது:

**1) பரப்புரை திட்டமொன்றை உருவாக்குதல் 2) கொள்கையை வகுத்தல் 3) வெற்றிகரமான வள முகாமைத்துவம் 4) திறன்மிக்க பிரச்சாரம்**

தர்க்கரீதியான கற்றலை பின்பற்றுமாறு உங்களுக்கு நாம் பரப்புரை செய்கின்றோம். ஆனால், அது கண்டிப்பாக அவசியமில்லை. உங்களுக்கு அவசரமாயின், தேவையானதை தவிர்த்துவிட்டு பின்னர் திரும்பி வாருங்கள். உங்கள் அறிவை விரிவுபடுத்த எப்போதும் இது சிறந்த வழியாகும்!

# பிரிவு ஒன்று

## பரப்புரை திட்டமிடல்

## தொகுதி 1

### 1. பரப்புரை என்றால் என்ன?

**பரப்புரை என்பதை வரையறுக்க பல நபர்கள் மற்றும் அமைப்புகள் முயன்றன:**

"மக்கள் மற்றும் அமைப்புகளின் கருத்துக்கள் மற்றும் தீர்மானங்களில் தாக்கம் செலுத்தும் மூலோபாயங்கள் மற்றும் முறைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் யோசனை அல்லது காரணத்திற்கு திறன்மிக்க வகையில் உதவுவதே பரப்புரை எனப்படுகின்றது.[1]"

"சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திச் சூழலில், மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் கொள்கைகள், சட்டங்கள், விதிமுறைகள், வளங்கள் விநியோகம் அல்லது ஏனைய தீர்மானங்களை உருவாக்குதல் அல்லது மாற்றுதல் மற்றும் அத்தகைய தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதே பரப்புரையின் நோக்கமாகும்.[2]"

பரப்புரைக்கான தெளிவான வரையறையை உருவாக்குவது இலகுவானதல்ல. இதனுடன் நெருங்கியுள்ள "திறன்பட செயலாற்றும் முறையுடன்" (activism) வித்தியாசப்படுத்தி பார்ப்பது, பரப்புரையை விளங்கிக்கொள்வதற்கான ஒரு வழியாக அமையும்.

#### பரப்புரை

- யோசனை அல்லது கொள்கைக்கு ஆதரவாக அல்லது காரணத்திற்காக செயற்படுவதாகும். பொதுவாக, தீர்மானம் மேற்கொள்வோருடன் நோடியாகவும் ஆக்கபூர்வமாகவும் தொடர்புகொள்வதே இதன் இறுதி இலக்காகும்.
- பரப்புரை பெரும்பாலும் ஒரு கட்டமைப்பிற்குள் செயற்படுவதாக காணப்படுகின்றது
- பரப்புரை என்பது உறவுகள், திறன்மிக்க கொள்கைகள் மற்றும் மரியாதை போன்ற அம்சங்களைச் சுற்றி செயற்படுகின்றது
- பரப்புரையை முன்முயற்சி என்று குறிப்பிடலாம். அதாவது, ஒரு விடயத்தை அடைய முன்கூட்டியே செய்யும் விடயமாகும். இது பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன்னர் அவற்றை நீக்குவதில் கவனம் செலுத்துவதாக அல்லது எதிர்வினை அணுகுமுறை நிகழ்வுகள் நடந்தபின் அவற்றிற்கு பதிலளிப்பதை அடிப்படையாகக் கொண்டதாக அமையலாம்.

- திறன்மிக்க பரப்புரையானது பொதுவாக, அனைவரும் சிறந்த தீர்வை பெற்றுக்கொள்ள ஒத்துழைப்புடன் இணைந்து பணியாற்றுதல் (non-adversarial) அல்லது "மனதில் நின்று நிலைக்கக்கூடிய" (soft touch approach) அணுகுமுறையைக் கொண்டுள்ளது. உதாரணமாக நிதியொதுக்கீடு, வரிவிதிப்பு மாற்றங்கள், கொள்கை அபிவிருத்தி என்பவற்றைக் குறிப்பிட முடியும்

[1] Steve Buckley, Advocacy strategies and approaches: Overview (Association of Progressive Communications)

[2] Sofia Sprechman and Emily Pelton Advocacy Tools and Guidelines: Promoting Policy Change (Atlanta: CARE, 2001)



## செயற்பாடு

- அரசியல் அல்லது சமூக இலக்கை அடைய நேரடி நடவடிக்கை எடுக்கும் கொள்கை
- ிறந்த உறவுமுறை அற்ற நிலைமை மற்றும் வெற்றியளிக்காத பரப்புரை ஆகியவற்றின் பெறுபேறாகவே பெரும்பாலும் இது அமைகின்றது. அத்தோடு, பெரும்பாலும் இது ஒரு பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டது.
- இது சில சந்தர்ப்பங்களில் கேள்விக்குறிய தந்திரோபாயங்கள் அல்லது சட்டத்திற்கு புறம்பான தந்திரோபாயங்களைப் பயன்படுத்துகின்றது. (சாத்துவீகச் சட்ட மறுப்பு, வன்முறையற்ற நேரடி நடவடிக்கை)
- இது ஒரு பிரச்சினையின் எதிர்வினையாக அமையும்
- தீர்மானம் எடுப்பவர்களுடன் நேரடி தொடர்பற்ற நிலை மற்றும் உறவற்ற நிலை காணப்படுவதால், இது ஊடகங்களையே பெரிதும் நம்பியுள்ளது.
- அரசியல் ரீதியில் அழுத்தம் கொடுப்பதற்காக ஒரு பிரச்சினையின் போது விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் இலக்காகும்.

- செயற்பாடு (Activism) எவ்வாறு உணரப்படுகிறது மற்றும் ஊடகங்களில் ஆர்வலர்கள் எவ்வாறு ித்தரிக்கப்படுகிறார்கள் என்பதன் அடிப்படையில் 'செயற்பாடு' என்பது எதிர்மறையான கருத்தாக அமையலாம்.

## தொகுதி 2

### 2. பரப்புரை திட்டமொன்றை உருவாக்குதல்


### 2.1 அறிமுகத்திற்காக ஒருசில வார்த்தைகள்

சொந்த விருப்புகளுக்கு அப்பாற்பட்டதாக பரப்புரை திட்டமிடல் அமைய வேண்டும். இது உங்கள் அமைப்பை வெற்றிகரமான, அளவிடக்கூடிய முடிவுகளை நோக்கி இட்டுச் செல்லும் திட்டத்தைக் கொண்ட மற்றும் மூலோபாய செயன்முறையாகும். இந்த பிரிவானது, உங்களுக்கு பரப்புரை திட்டமிடல் சக்கரம் மற்றும் வெற்றிகரமான திட்டத்தை உருவாக்குவதற்கான படிப்படியான செயன்முறையை அறிமுகப்படுத்தும்.

## 2.2 பரப்புரை திட்டமிடல் சக்கரம்

ஒரு வெற்றிகரமான செயற்திட்டத்தை உருவாக்க ஒரு ஊடக பரப்புரை அமைப்பு முன்னெடுக்கக்கூடிய படிநிலைகளை அடையாளம் காண்பதற்கு பரப்புரை திட்டமிடல் சக்கரம் ஒரு பயனுள்ள கருவியாகும்.

### பரப்புரை திட்டமிடல் சக்கரம் ஏன் அவசியம்?






பரிந்துரை நடவடிக்கையானது சுழற்சி இயல்பைக் கொண்டதாகும். உங்களது திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்தவுடன், திட்டத்தை சீர்செய்யவும் முன்னோக்கிச் செல்லவும் கருத்துக்கோரல் மற்றும் பகுப்பாய்வுகளை பயன்படுத்துவீர்கள்.

## தொகுதி 3



## பிரச்சினையை அடையாளம் காணுதல்

நீங்கள் பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடுவதாயின், நீங்கள் எதனை அடைய விரும்புகின்றீர்கள் என்பதை முதலில் தீர்மானிப்பது அவசியம். பொதுவாக உங்களுக்கும், உங்கள் உறுப்பினர்களுக்கும் மற்றும் / அல்லது பிரிவுக்கும் முக்கியமானதாக காணப்படும் ஒரு பிரச்சினையைக் கண்டறிவது இதன் அர்த்தமாகும்.

இலங்கை ஊடகப்பரப்பில் காணப்படும் அவ்வாறான பிரச்சினைகள் சில வருமாறு:

- தகவல் அறியும் உரிமை,
- ஊடகவியலாளர்களின் வேலை நிலைமைகள்,
- உரிமம் மற்றும் பண்பலை வரிசைகளை வழங்குதல் உள்ளிட்ட ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் சட்டச் சூழல்,
- ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்படும் சிவில் மற்றும் குற்றவியல் தண்டனைகள்,
- ஆசிரியர் பீட சுதந்திரம்,
- ஊடக மூலங்களின் பாதுகாப்பு

உங்களது சொந்த சமூகத்தில் காணப்படும் முக்கியமான ஒரு பிரச்சினையை தெரிவுசெய்வது முக்கியமானது. ஆய்வு அல்லது தந்திரோபாயங்களுக்கான உதவிக்கு நீங்கள் வெளிப்புற மூலங்களை அணுகலாம். ஆனால், உங்கள் பரப்புரை திட்டத்தின் முக்கிய அம்சம், அதாவது நீங்கள் இனங்கண்டுள்ள பிரச்சினை, உள்ளூர் சமூகத்தில் காணப்படுவதாக அமைய வேண்டும்.

சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அறிந்துகொள்ளவும் அடையாளம் காணவும் கீழுள்ள வினாக்களை கேட்கலாம்.[3]

- இச்செயற்பாட்டில் வெற்றியடைந்தால், நாம் பரிந்துரைக்கும் மாற்றம் நமது சமூகத்தின் வாழ்க்கையை கணிசமான அளவு மேம்படுத்துமா? வெற்றியின் எதிர்பாராத முடிவுகள் இருக்க முடியுமா?
- பிரச்சினை மற்றும் அதன் சாத்தியமான தீர்வுகளை நிரூபிக்கும் சான்றுகள் அல்லது ஆய்வு உண்டா?
- உள்ளக அதிருப்திக்கான உண்மையான அடிப்படைக் காரணமாக அமைவது நாம் கண்டறிந்த பிரச்சினையா? பொதுமக்கள் .இப்பிரச்சினையை எவ்வாறு நோக்குகின்றனர்?
- மாற்றத்தைக் கோருவதற்குப் பிரச்சினையின் ஒருமித்த கருத்து போதுமானதா?
- உங்கள் நிறுவனத்தின் பணியுடன் இந்த பிரச்சினை தொடர்புடையதா? (அத்தோடு, நிறுவனத்திற்கு நிதி வழங்குவோருடன்)
- ஒருவேளை தோல்வியுற்றால், மாற்றத்திற்காக பரப்புரை செய்வது சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை கணிசமானளவு குறைக்குமா? தோல்வியின் சாத்தியமான எதிர்பாராத விளைவுகள் என்ன?



[3] Sofia Sprechman and Emily Pelton, Advocacy Tools and Guidelines: Promoting Policy Change (Atlanta: CARE, 2001)

## நிகழ்வு ஆய்வு 1

## கொங்கோ ஜனநாயக குடியரசிலுள்ள சட்டக் கட்டுப்பாடுகளை சவாலுக்கு உட்படுத்தல்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் சிவில் சமூக அமைப்புகளின் நிலைமை மோசமடைந்து வருகின்றது. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் பிரிவினரும் தாக்குதல் நடத்துவது, மிரட்டல் விடுப்பது, தன்னிச்சையான கைது மற்றும் திட்டமிட்ட படுகொலை போன்ற விடயங்களால் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். விமர்சனங்களை அதிகளவில் ஒடுக்கிய அரசாங்கம், சிவில் சமூகத்தின் மீது மேலும் கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டத்தை 2017ஆம் ஆண்டு முன்மொழிந்தது.

**குறிக்கோள்** : அச்சுறுத்தல், வன்முறை அல்லது அரசாங்கத்தின் தலையீடுகளின்றி சிவில் சமூகம் செயற்படுவதற்கான சூழலை உருவாக்குதல்.

**மூலோபாயம்:** சிவில் சமூகத்தை கட்டுப்படுத்தும் சட்டத்தை தோற்கடித்து, சிவில் சமூக அமைப்புகளுக்கு சமூகத்தின் ஆதரவை கட்டியெழுப்பும் வகையிலான ஒரு முயற்சியை உள்ளூர் சிவில் சமூக அமைப்பு ஆரம்பித்தது.

**தந்திரோபாயங்கள்**: தேசிய ரீதியிலான அரசியலில் செல்வாக்கு செலுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக, சட்ட வரைபை இடைநிறுத்துவதற்கு அவர்களின் ஆதரவைப் பெற உள்ளூர் மட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை குறிவைக்க சிவில் சமூக அமைப்பு முடிவு செய்தது. சிவில் சமூக அமைப்புகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் அதிகமாக காணப்படும் வடக்கு மற்றும் தெற்கு கியு ஆகிய இரண்டு மிகவும் கொந்தளிப்பான மாகாணங்களில் கவனம் செலுத்த சிவில் சமூக அமைப்பு தீர்மானித்தது. குறித்த சட்டத்திற்கு எதிரான அவர்களின் பரப்புரைகளை ஒருங்கிணைக்கும் முகமாக 2017ஆம் ஆண்டு மே மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை, 48 சிவில் சமூக அமைப்புகளுக்கு இரண்டு மாகாண தளங்களை உருவாக்குவதற்கு சிவில் சமூக அமைப்பு உதவியது. அரசாங்கத்தால் இலக்குவைக்கப்பட்ட ஆர்வலர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டுவதற்கு ஆறு கவனக் குழுக்களை (Focus groups) செயற்படுத்தினர். குறித்த கவனக் குழுக்களின் முடிவுகள், ஊடகப் பிரச்சாரங்களிலும் உள்ளூர் மற்றும் மாகாண மட்டத்தில் தீர்மானம் எடுப்பவர்களுடனான சந்திப்புகளிலும் பயன்படுத்தப்பட்டன.

**விளைவு:** சிவில் சமூக அமைப்புகளின் கூட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பதை விடுத்து, கூட்டங்களை அமைதியான முறையில் கண்காணிக்கத் தொடங்கிய பொலிஸாரின் நடத்தையில் ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்குள் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு சிவில் சமூக அமைப்பினர் ஆச்சரியமடைந்தனர். ஊடகப் பிரச்சாரத்தின் விளைவாக சிவில் சமூகத்தின் மீதான பொதுமக்களின் ஆதரவும் அதிகரித்தது. அத்தோடு, பெரும்பாலான பொதுமக்கள் தமது கடைகளையும் அலுவலகங்களையும் மூடிவிட்டு, சிவில் சமூக அமைப்பு ஏற்பாடு செய்த வன்முறையற்ற அமைதிப் பேரணிக்கு ஒற்றுமையுடன்

ஆதரவளித்தனர். உள்ளூர் மட்டத்தில் கவனம் செலுத்துவதன் மூலமும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை கொண்டிருப்பதன் மூலமும், சிவில் சமூக அமைப்பு உண்மையான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. அரசு சாரா அமைப்புகளை கட்டுப்படுத்தும் சட்ட அச்சுறுத்தல் காணப்படுகின்றது. ஆனால், அதன் ஆரம்ப முயற்சியை சிவில் சமூக அமைப்பு தோற்கடித்தது.

**நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு**

மேற்கூறப்பட்ட உதாரணத்தைக் கவனிப்போம். இந்தப் பிரச்சாரத்திலுள்ள பலவீனங்களை உங்களுக்கு அடையாளம் காண முடியுமா? தோல்வியின் விளைவு சமூகத்தில் என்னவாக இருந்திருக்கும்? ஆபத்தை குறைக்க அவர்கள் எடுக்கக்கூடிய சில படிநிலைகளை உங்களால் அடையாளம் காண முடியுமா?

இலங்கையில் இவ்வாறு ஒப்பிடக்கூடிய ஏதேனும் விடயங்களை உங்களால் குறிப்பிட முடியுமா? ஊடகங்களை எதிர்மறையாக பாதிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளதா? அதுதொடர்பாக உங்களது அமைப்பு ஏதேனும் விடயங்களை முன்னெடுத்ததா? அது வெற்றியளித்ததா? ஏதேனும் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டனவா?

## தொகுதி 4

### பிரச்சினையை பகுப்பாய்வு செய்தல் / சாத்தியமான தீர்வு

ஒரு பிரச்சினை தொடர்பாக செயற்படுவதற்கு தீர்மானிக்கும்போது, வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறு, பிரச்சினையின் வரலாறு மற்றும் சூழல், காலப்போக்கில் விடயங்கள் எவ்வாறு உருவாகியுள்ளன என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். பின்வரும் கேள்விகளை எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்:

- கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்ன?
- என்ன விடயம் வெற்றியளித்தது? ஏன்?
- வெற்றியளிக்காத விடயம் என்ன? ஏன்

வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் பற்றி நாம் யதார்த்தமாக செயற்பட வேண்டும். இதுதான் நடக்குமென நாம் தீர்மானிப்பது பயனளிக்காது.



**பகுப்பாய்வு செய்யும் போது, பின்வரும் கேள்விகள் எழலாம்:**

- அவசியமான சகல விடயங்களும் எம்மிடம் உள்ளனவா?
- எமக்குத் தேவையான மேலதிக தகவல்கள் என்ன?
- புதிய தகவல்களைச் சேகரிக்க என்ன மூலங்களை பயன்படுத்தலாம்?
- அறிவுசார் இடைவெளியை நீக்குவதற்கு என்ன ஆய்வுகளை மேற்கொள்ளலாம்?

**பிரச்சினையை பகுப்பாய்வு செய்ய முயற்சிக்கும்போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கலாம்:**

- இந்தப் பிரச்சினைக்கு பொறுப்பான அரச கொள்கைகள் ஏதேனும் உண்டா?
- இப்பிரச்சினை தொடர்பான கொள்கைகளை செயற்படுத்துவதற்கு யார் பொறுப்பு?
- தற்போதைய சூழ்நிலையில் இருந்து பயனை பெற்றுக்கொள்ளும் அல்லது தீவிரமாக பரப்புரை செய்யும் ஏதேனும் தொகுதி உண்டா?
- அதிகாரம் உள்ள கட்சிகள் எவ்வாறு கொள்கையை புரிந்து கொள்வது மற்றும் அதற்காக பரப்புரைவழங்கும் அமைப்புகளை எப்படி புரிந்துகொள்வது?

இந்தப் விடயத்தைச் சுற்றியுள்ள அரசியல் சூழலைப் புரிந்துகொள்வதும் முன்மொழியப்பட்டுள்ள தீர்வுகளும் பகுப்பாய்வின் மற்றொரு முக்கிய பகுதியாகும். அரசியல் சூழலானது யாருக்கு அதிக அதிகாரம் உள்ளது என்பதன் அடிப்படையில்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. வழக்காடலில், முறையான, முறைசாரா மற்றும் கண்ணுக்கு புலப்படாத வலு ஆகிய மூன்று வகையான அரசியல் அதிகாரங்களைப் பற்றி பொதுவாக நாம் விவாதிக்கிறோம்.

பிரச்சினையின் சூழல் மற்றும் சாத்தியமான தீர்வுகள் பற்றிய 360 பாகை புரிதலைப் பெறுவதற்கு இந்த மூன்று சக்தி மூலங்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நீண்ட கால ஓட்டத்தில் தேவையான கொள்கைத் திருத்தங்களைச் செய்த பிறகும் கூட சில நேரங்களில் பின்விளைவுகளும் இருக்கக் கூடும். பெறுமதியான பிரச்சினைக்காக குரல் எழுப்பும் போது, ஊடக சமூகத்திற்கும் பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கும் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். பொதுக் கொள்கையை வெற்றிகரமாக மாற்றி இருந்தாலும் கூட சிலசமயங்களில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டமிடப்படாத அல்லது எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும்.

முன்னோக்கிச் செல்லும் அனைத்து படிமுறைகளையும் திட்டமிடுவதற்கு, விடயம் பற்றிய பூரண புரிதலைப் பெறுவது அவசியம்.

# நிகழ்வு ஆய்வு 2

இலங்கையில் குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் எப்போதுமே மிகவும் சர்ச்சைக்கு உள்ளாகிவந்துள்ளன. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது அமுலாக்கப்பட்டு, 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னரும் சட்டப் புத்தகங்களில் வைக்கப்பட்டுள்ள இந்தச் சட்டங்கள் ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவதூறுச் சட்டங்கள் தனிநபர் நற்பெயரைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட, 1970 களில் இருந்து அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பத்திரிகை ஆசிரியர்களைத் துன்புறுத்துவதற்கும் ஊடகங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கவும் அதனைப் பயன்படுத்திவந்துள்ளன

ஊடகச் சீர்திருத்தத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக 1995இல் நியமிக்கப்பட்ட ஆர்.கே.டபிள்யூ. குணசேகர குழு, குற்றவியல் அவதூறு தொடர்பான தண்டனைக்கோவையின் 118, 120 மற்றும் 479 ஆகிய பிரிவுகளை நீக்குமாறு பரிந்துரைத்தது. இருப்பினும், 2002 வரை அவை நீக்கப்படவில்லை.

அடக்குமுறைச் சட்டத்தை ஒழிப்பதற்காக இடைப்பட்ட ஆண்டுகளில் இலங்கை ஊடக ஆர்வலர்கள் ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக பிரச்சாரம் செய்து அயராது உழைத்தனர்.

2002 ஜனவரியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பில், அரசாங்கம், சுதந்திர ஊடக இயக்கம், ஆசிரியர் சங்கம் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கம் ஆகிய மூன்று ஊடக ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து நாட்டின் கருத்துச் சுதந்திரத்தை பலப்படுத்தும் வகையிலான மறுசீரமைப்பு பொதியுடன் கூடிய பரந்துபட்ட அளவிலான



NEWSROOM

**Letter: Sri Lanka government repeals criminal defamation laws**

Jul 8, 2002

His Right Hon. Ranil Wickremasinghe
Prime Minister
Office of the Prime Minister
Democratic Socialist Republic of Sri Lanka
58, Sir Ernest de Silva Mawatha
Colombo 7
Fax: 0094 1 385670

8 July 2002

Your Excellency,

The International Press Institute (IPI), the global network of editors, leading journalists and media executives, wishes to warmly congratulate both the government and parliament of Sri Lanka on its decision to repeal the criminal defamation laws.

According to information provided to IPI, on 18 June, members of parliament unanimously voted to repeal the country's defamation laws. Enacted during British colonial rule and kept on the statute books when Sri Lanka gained its independence in 1948, the laws have been used to intimidate the media. An IPI protest dated 26 July 2001 revealed that editor-in-chief of the Ravaya newspaper, Victor Ivan, faced four outstanding criminal defamation charges. Prior to this case, there were numerous prosecutions of editors and journalists.

By repealing the defamation laws, IPI believes Your Excellency is disclosing a new commitment to press freedom in Sri Lanka. After so many years of false promises, IPI finds it deeply encouraging that the present government is making good on its promises to local press freedom organisations, in particular, the Free Media Movement, The Editors Guild of Sri Lanka and the Newspaper Society of Sri Lanka. All of these organisations have long championed the cause of press freedom, through some of the most difficult periods in Sri Lanka's history, and the government is to be applauded for acting upon the recommendations of these organisations.

Aside from the defamation laws, IPI looks forward to further changes in the Sri Lankan legislation. Indeed, IPI notes that the government has also decided to draft a Right to Information Act and is working with local media organisations on an Independent Press Complaints Commission and intends to repeal the present Press Council Act. Furthermore, IPI has been told that the Press Performance Act may also be repealed and that the government has promised to review secrecy laws.

IPI hopes the government will press ahead with these and other changes and that it will create a media environment which can be emulated by other countries in the region. Furthermore, if such changes are undertaken, IPI will actively consider the removal of Sri Lanka from the "IPI Watch List" at its board meeting in November of this year.

Congratulations once again on the progress you have made.

We thank you for your attention.

Johann P. Fritz
Director
International Press Institute (IPI)



Home>>World

Last updated at: (Beijing Time) Friday, April 26, 2002

**Sri Lanka to Repeal Criminal Defamation Law**

The Sri Lankan government has decided to repeal the criminal defamation law which provides for a two year jail term and fine for media personnel in the first week of May, local media reported on Friday.

PRINT DISCUSSION CHINESE SEND TO FRIEND

The Sri Lankan government has decided to repeal the criminal defamation law which provides for a two year jail term and fine for media personnel in the first week of May, local media reported on Friday.

Justice Minister W.J.M. Lokubandara said that the cabinet gave its approval to repeal the criminal defamation law on Wednesday.

A person subject to defamation may file a civil action for damages since the civil law of defamation will continue to remain.

"Those who feel that they have been defamed could continue to seek damages under the civil laws of this country," Lokubandara said.

The criminal defamation law has been in place since the Britishcolonial rule in the country which won its independence in 1948.

FMM welcomes repeal of criminal defamation law - IFEX
Microsoft Word - lanka94.doc (refworld.org)

https://ipi.media/letter-sri-lanka-government-repeals-criminal-defamation-laws/

இணக்கப்பாடு ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இரத்து செய்தல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்துதல், பத்திரிகை பேரவைக்கு பதிலாக சுயாதீனமான பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை நியமித்தல் மற்றும் சுயாதீனமான ஊடகப் பயிற்சி நிறுவனத்தை உருவாக்குதல் ஆகியவை அடங்கின.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் நீக்கப்பட்டமையானது, ஊடகச் சட்ட அமைப்புகள், பிரச்சினையைச் சுற்றியுள்ள அதிகாரம் மற்றும் அரசியல் சூழலை பகுப்பாய்வு செய்து தீர்வை முன்வைப்பதை நோக்கி செயற்பட்டன என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். அப்போதைய அரசியல் சூழல் மற்றும் அதிகார மாறுநிலைகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்ததன் மூலம், உள்ளூர் ஊடக அமைப்புகள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான தருணத்தை தெரிவுசெய்ய முடிந்ததுடன், இதன் விளைவாக இலங்கையின் ஊடகத்துறைக்கும் ஊடக சுதந்திரத்திற்கும் நன்மையான பெறுபேறு கிடைத்தது.

எவ்வாறாயினும், அண்மைய ஆண்டுகளில், குற்றவியல் அவதூறுச் சட்டங்களை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான அரசியல் அழுத்தம் அதிகரித்து வருகிறது. தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியால் அனுப்பப்பட்ட 11 அம்ச முன்மொழிவில், குற்றவியல் அவதூறுச் சட்டங்களை மீண்டும் அமுலாக்க வேண்டும் என்ற பரப்புரையும் உள்ளடங்கியுள்ளது

இது அதிகாரத்தின் கடைசிப்புள்ளிக்கு எம்மை மீண்டும் கொண்டுவருகிறது.

SLFP pushing hard to reintroduce criminal defamation | Sunday Observer


SLFP pushing hard to reintroduce criminal defamation

**நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு**

நாம் முன்பு கலந்துரையாடிய விடயத்திற்குச் செல்வோம். 2001ஆம் ஆண்டு நீங்கள் ஒரு ஊடக செயற்பாட்டாளராக இருந்தீர்கள் என கற்பனைசெய்து கொள்ளுங்கள். நிகழ்வு ஆய்வு தொடர்பாக கீழ்காணும் கேள்விகளுக்கு உங்களுக்கு பதில் வழங்க முடியுமா? உங்களை இலகுபடுத்த, முதலாவது கேள்விக்கான பதில் வழங்கப்பட்டுள்ளது.

- அவசியமான சகல தகவல்களும் எம்மிடம் உள்ளதா?
  - எம்மிடம் ஆரம்பகட்டமாக வரையப்பட்ட ட்டமூலங்கள், உரிமைகோரலை ஆதரிக்கும் வழக்குச் சட்டங்கள், சர்வதேச முன்னுதாரணங்கள் என்பன உள்ளன.
- எமக்குத் தேவையான மேலதிக தகவல் என்ன?
- புதிய தகவல்களை சேகரிக்க எந்த மூலங்களை பயன்படுத்தலாம்?
- அறிவுசார் இடைவெளியை நீக்குவதற்கு என்ன ஆய்வுகளை மேற்கொள்ளலாம்?
- 
- இப்போது இன்றைய நிலைக்கு வருவோம். மேலே காட்டப்பட்டுள்ள பத்திரிகை கட்டுரையின் அடிப்படையில், இந்த அளவுகோல்களைப் பயன்படுத்தி நிலைமையை பகுப்பாய்வு செய்யுங்கள்: இந்த பிரச்சினைக்கு பொறுப்பான அரச கொள்கைகள் உள்ளனவா?
- இப்பிரச்சினை தொடர்பான கொள்கைகளை செயற்படுத்துவதற்கு யார் பொறுப்பு?
  - தற்போதைய சூழ்நிலையில் இருந்து பயனை பெற்றுக்கொள்ளும் அல்லது தீவிரமாக பரப்புரைக்கும் ஏதேனும் தொகுதி உண்டா?
  - அதிகாரம் உள்ள கட்சிகள் எவ்வாறு கொள்கையை புரிந்து கொள்வது மற்றும் அதற்காக பரப்புரை வழங்கும் அமைப்புகளை எப்படி புரிந்துகொள்வது?

**உதவிக்குறிப்பு: பாரபட்சம் பிரச்சினையாக உள்ளபோது**

பாரபட்சம் முக்கிய காரணியாக இருக்கும் சூழ்நிலைகளில், உங்கள் பரப்புரை திட்டமிடலை விரோத மனப்பாங்குடன் ஆரம்பிப்பதை தவிருங்கள். பொதுவாக, அதிகாரத்தில் இருப்பவர்களைப் பற்றிய விரோத அனுமானங்களைக் கொண்டு பரப்புரை செயற்பாட்டாளர்கள் பிரச்சாரங்களை ஆரம்பிக்கும் போது, குறித்த பரப்புரையை மேற்கொள்ள சாத்தியமாக காணப்படும் கருவிகளில் பாதியை ஆரம்பத்திலிருந்தே இல்லாமல் செய்துவிடுகின்றனர். ஆக்கபூர்வமான ஈடுபாட்டின் அர்த்தமுள்ள முயற்சிகளுடன் தொடங்கும் பரப்புரை பிரச்சாரங்கள், நேரடி நடவடிக்கை மற்றும் ஏனைய விரோத தந்திரோபாயங்களில் பின்வாங்கலாம். எனினும், அந்த ஒழுங்கை மாற்றியமைப்பதும் விரோத மனப்பான்மையிலிருந்து அர்த்தமுள்ள செயற்பாட்டிற்கு மாறுவது மிகவும் கடினம்.

## தொகுதி 5

## பங்குதாரர்கள் மற்றும் சுற்றுச்சூழல்

### பங்குதாரர்கள் யார்?



அமைப்பு, குழு அல்லது வணிக செயற்பாடு எதுவும் கிடையாது. எமது அன்றாட செயற்பாடுகளின்போது நாம் பலருடன் பழகுகின்றோம். சிலர் உள்ளக ரீதியிலும் சிலர் வெளியிலும் உள்ளனர். பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள், நன்கொடையாளர்கள் என சிலருக்கு உங்கள் நிறுவனத்தில் 'நேரடி பங்கு' உள்ளது. இவர்களில் அரசியல் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இருக்கலாம். உங்கள் பரப்புரை முயற்சியில் நீங்கள் யாரை இலக்குவைக்க வேண்டும்?

### உங்களது பங்குதாரரை அடையாளம் காணுங்கள்

**படிநிலை 1: பங்குதாரர்களை வகைப்படுத்தவும்**

நேரடி: வாடிக்கையாளர்கள், உறுப்பினர்கள், பணியாளர்கள்.

நிதியியல்: நன்கொடையாளர்கள், முதலீட்டாளர்கள், பங்குதாரர்கள்.

அரச பங்குதாரர்கள்: அரசியல் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச கொள்கை வகுப்பாளர்கள், தனியார் கொள்கை வகுப்பாளர்கள், ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்

பிரதி பங்குதாரர்கள்: தொழிற்சங்கங்கள், உறுப்பினர் மற்றும் பிரதி அமைப்புகள்

(வர்த்தக சங்கங்கள், கூட்டமைப்புகள்) ஆர்வமுள்ள குழுக்கள் (அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிரச்சாரக் குழுக்கள். இவை உள்ளூர், தேசிய அல்லது

சர்வதேச ரீதியில் இருக்கலாம்)

திறன்வாய்ந்த பங்குதாரர்கள்: உணர்வுரீதியான பங்குதாரர்கள் (நண்பர்கள், குடும்பத்தினர், ஆதரவாளர்கள்), பழைய மாணவர்கள், சகாக்கள்.

ஊடகம்: உள்ளூர், பிராந்திய, சர்வதேச, ஒளிபரப்பு, பத்திரிகை, நவீன ஊடகம், பொதுமக்கள்


முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வோரையும் தொடர்புடைய சகல பங்குதாரர்களையும் நீங்கள் அடையாளம் காணவேண்டும். அத்தோடு, பிரச்சினை தொடர்பாக அவர்களுக்குள்ள ஆர்வம் மற்றும் திறந்த மனப்பான்மையை கருத்திற்கொள்க.

செயற்பாட்டிற்கான சரியான சந்தர்ப்பத்தை தெரிவுசெய்யவும். உதாரணமாக, பொருத்தமான காலக்கெடு, பாராளுமன்ற அல்லது வேறு ஏதேனும் உள்ளதா?

பங்குதாரர்களுடன் நீங்கள் கொண்டிருக்கும் உறவின் அடிப்படையிலேயே நீங்கள் திறம்பட செயற்படுவீர்கள். செயற்பாடு போலன்றி, பரப்புரை என்பது ஒரு உறவுசார் அணுகுமுறையாகும். சிறந்த பங்குதாரர் உறவுகளைக் கொண்டிருப்பதும், உங்கள் நோக்கத்திற்கு ஆதரவாக பங்குதாரர்களை நிர்வகிப்பதும், உங்கள் திட்டத்தின் வெற்றியை பெரும்பாலும் தீர்மானிக்கும்.

நாம் கதைக்கும் விடயத்திற்கு ஏற்ப பங்குதாரர்களின் முக்கியத்துவம் வேறுபடலாம். உங்கள் பங்குதாரர்களை வகைப்படுத்தக் கற்றுக்கொள்வது, கொள்கை உருவாக்கத்தில் உங்களுக்கு உதவும். பங்குதாரர்களை வரையறை செய்வது உங்கள் கொள்கை நிலைகளுக்கான பரப்புரையில் ஒரு சிறந்த கருவியாகும்.

பிரச்சினை தொடர்பான சூழலில் அவர்களின் நிலையை புரிந்துகொள்ள முயலும்போது, பங்குதாரர்களை அதிகாரம்/செல்வாக்கு மற்றும் பிரச்சினை மீது கொண்டுள்ள ஆர்வத்தின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.




அதிக செல்வாக்கு மற்றும் அதிக ஆர்வத்தை கொண்டுள்ளவர்களுக்கு, பரப்புரை செயற்பாட்டாளர்கள் முன்னுரிமை வழங்க வேண்டும்.

### நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

2002ஆம் ஆண்டுவரை, ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்படும் வரை, இலங்கையில் அவதூறு ஒரு குற்றவியல் குற்றமாக காணப்பட்டதோடு, குற்றவியல் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தெற்காசிய பிராந்தியத்தில் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நீக்கிய முதலாவதும் ஒரே நாடும் இலங்கையாகும். இலங்கையில் ஊடக சங்கங்கள் மற்றும் பரப்புரை குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான, தசாப்த கால பிரச்சாரத்தைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் திகதி நாட்டின் சட்டப் புத்தகங்களில் இருந்து குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் நீக்கப்பட்டன. சர்வதேச பத்திரிகை நிறுவனம் (IPI), சர்வதேச PEN அமைப்பு, உலக பத்திரிகைகள் சங்கம், பொதுநலவாய ஊடக ஒன்றியம் (CPU), பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ), பிரிவு XIX மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் அவதூறுச் சட்டங்கள் ஏற்படுத்தும் "மோசமான விளைவை" வன்மையாக கண்டித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் கருத்துச் சுதந்திரம் குறித்த சிறப்பு அறிக்கையாளர் உட்பட பல சர்வதேச அமைப்புகள் இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவு வழங்கின.

இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு பங்குதாரர்களாக காணப்பட்டனர்.

நேரடி: ஊடகவியலாளர்கள்

நிதியியல்: ஊடக நிறுவனங்கள்

பொதுவானது: பொதுமக்கள்

பிரதி: சர்வதேச ஊடக உரிமைசார் அமைப்புகள்

திறன்: குடும்பம், சகாக்கள்

ஊடகம்: சகல ஊடகங்கள்

இச்செயற்பாட்டிலுள்ள பங்குதாரர்களை எமது பங்குதாரர் பகுப்பாய்வு கருவியில் சேர்த்தால், கீழ்காணும் பங்குதாரர் வரைபடத்தை பெற்றுக்கொள்ளலாம்

| அதிக செல்வாக்கு மற்றும் குறைந்தளவு ஆர்வம் | அதிக செல்வாக்கு மற்றும் அதிக ஆர்வம் |
|---|---|
| எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் தலைவர்கள்<br>பாராளுமன்ற உறுப்பினர்கள் | சர்வதேச ஊடக ஆதரவு நிறுவனங்கள்<br>சர்வதேச ஊடக உரிமை ஆர்வலர்கள்<br>சர்வதேச நியமங்களை கடைப்பிடிக்க முயற்சிக்கும் அரசியல் தலைவர்கள்<br>தரநிலைகள்<br>மனித உரிமை தொடர்பில் வாதிடும் வழக்கறிஞர்கள் |
| **குறைந்த செல்வாக்கு குறைந்த ஆர்வம்**<br>பொதுமக்கள் | **குறைந்த செல்வாக்கு அதிக ஆர்வம்**<br>ஊடகவியலாளர்கள் |



## தொகுதி 6

## குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள்

பரப்புரை செயற்பாட்டில் நடைமுறை சாத்தியமான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை வடிவமைப்பது அவசியமாகும் : அரச கொள்கையில் என்ன மாற்றம் ஏற்பட்டால் இந்தப் பிரச்சினையை நிலையான முறையில் தீர்க்க முடியும்? எந்த இடைப்பட்ட நோக்கங்கள் (அல்லது சிறிய படிமுறைகள்) அனைத்து இலக்குகளையும் முன்னேற்ற உதவுகின்றன?

பரப்புரை இலக்குகளை வகுக்க எந்த கட்டமைக்கப்பட்ட வழியும் கிடையாது. உங்களது இலக்குகளை பரிசோதிக்க கீழே தரப்பட்டுள்ள கருவி பயனுள்ளதாக அமையும்.




## நிகழ்வு ஆய்வு 3

இலங்கையின் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க **தகவல் அறியும்** உரிமைச் சட்டம், 2017 பெப்ரவரி 3ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது. 1994ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 'பொது பெரமுன' கட்சிக்கு ஆதரவளித்த ஊடகவியலாளர் சங்கங்களும் சிவில் சமூக அமைப்புகளும் இவ்வாறான ஒரு சட்டத்தின் அவசியத்தை முன்வைத்த காலம் முதல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அவசியப்பாடு தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன.

சேனாநாயக்க அறிமுகப்படுத்திய போது, தகவல் அறியும் உரிமை தொடர்பான முதலாவது ஆவணம் அறிமுகமானது. இதன் தொடர்ச்சியாக, தகவல் அறியும் உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சிவில் சமூகத்தினரும் அரசாங்கத்தின் பல செயற்பாட்டாளர்களும் தசாப்த காலமாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கால அட்டவணை

**1994**

அரசாங்கத்தின் ஊடகக் கொள்கை' என்ற தலைப்பிலான அமைச்சரவைப் பத்திரத்தை போக்குவரத்து, தகவல் மற்றும் விமானசேவை அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்க அறிமுகப்படுத்தினார்

**1995**

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் சட்டங்களை சீர்திருத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஆர். கே. டபிள்யூ குணசேகர தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்க இக்குழு பரிந்துரைத்தது.

**1996**

நீதியரசர் ஏ. ஆர். பி. அமரசிங்க தலைமையிலான இலங்கை சட்ட ஆணைக்குழு, தகவல் அறியும் சட்ட வரைபை தயாரித்தது

**1998**

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை பத்திரிகை சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் தலைமையிலான ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்பு தொடர்பான கொழும்பு பிரகடனம், இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.

**2000**

2000ஆம் ஆண்டு அரசியலமைப்பு முன்வரைபில் 'தகவல் அறியும் உரிமை' பிரிவும் உள்ளடங்கியிருந்த போதும், குறித்த சட்டமூலம் ஒருபோதும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

**2004**

2004ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைபை பிரதமர் குழு உருவாக்கியது. இது அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்ற பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2010**

2010ஆம் ஆண்டு நீதியமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடவின் முயற்சியால், குறித்த சட்டமூலம் 2010இல் திருத்தப்பட்டது.

**2011**

2011ஆம் ஆண்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட திரு.கரு ஜயசூரிய, 2004இல் உருவாக்கப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்தை தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றில் சமர்ப்பித்தார். ஆனால் அது பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. பின்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) 2011ஆம் ஆண்டு வெளியிட்ட தனது இறுதி அறிக்கையில், தகவல் அறிவும் உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அரசுக்கு பரிந்துரைத்தது.

**2013**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 2013ஆம் ஆண்டு தேசிய செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடாக இதனை உள்ளடக்கியது

**2015**

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான அரசியலமைப்பு உரிமையை மக்கள் பெறுகின்றனர்

**2016**

நாட்டின் பிரஜைகளின் தகவல் அறியும் அடிப்படை உரிமைக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில், ஜூன் 23ஆம் திகதியன்று வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக, இலங்கை பாராளுமன்றம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இயற்றியது.

## ஸ்மார்ட் வழிமுறையில் இலக்கை அடைவதற்கு இது சிறந்த உதாரணமாகும்

**திட்டவட்டமானது** - முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை நடத்துவதற்கும், குற்றமிழைத்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும், அதிகாரம் கொண்ட அமுலாக்க முகவராக செயற்படும் சட்டரீதியான சுயாதீன அமைப்பை நிறுவுதல்.

**அளவிடக்கூடியது** - அடையக்கூடிய இறுதி இலக்கு என்ன என்பது குறித்த தெளிவான நோக்குடன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதாவது அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சுயாதீனமான சட்ட ஆணையத்தை உருவாக்குதல். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக அமைப்புக்களால் பரிந்துரைக்கப்பட்ட ஒவ்வொரு நபரையும் பரிந்துரைக்கும் பொருட்டு அரசியலமைப்பு சபையின் உதவி தேவைப்பட்டது.

**அடையக்கூடியது:** வள முகாமைத்துவம், வள ஒதுக்கீடு, அரசியல் அதிகார பகுப்பாய்வு மற்றும் எல்லை தாண்டிய அறிவு-பகிர்வு ஆகியவை நல்ல நடைமுறைகளாக காணப்பட்டன. இருப்பினும் நடைமுறையில் எவற்றை அடையலாம் என்பதை பற்றி மட்டுமே பரப்புரை செயற்பாட்டாளர்கள் கவனம் செலுத்தினர்.

**பொருத்தமானது** : இந்த உதாரணத்தில், குறிக்கோளை கட்டியெழுப்புவதில் பொருத்தப்பாடு முக்கிய பங்கை வகித்தது. தரமான தகவல்களை தடையின்றி பெற்றுக்கொள்ள ஊடக சமூகத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகவும் அவசியம். நேர்மையற்ற அதிகாரிகளால் இதனை தடுக்க முடியாது. தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான தகவல் பொதுமக்களிடம் இருப்பதை உறுதிசெய்ய இது உதவியது. நோக்கங்கள் நடைமுறையில் சாத்தியமாக அமைவதை உறுதிசெய்யும் வகையில் ஆணைக்குழுவும் அதனைச் சுற்றியுள்ள பொறிமுறையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

**காலத்திற்கேற்றது** : தகவல் பெறும் உரிமைக்கான நோக்கங்களை அமைப்பது காலத்தின் தேவையாக காணப்பட்டது. அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு அரசாங்கத்தின் கீழும், தகவல் உரிமை பரப்புரை செயற்பாட்டாளர்கள் தமது இலக்குகளை சிறிது சிறிதாக அடைந்துகொள்வதற்கும், உறுதியான, சரியான நேரத்தில் இலக்குகளை அமைக்கவும், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும் முன்னின்று செயற்பட்டனர். தகவல் அறியும் உரிமை தொடர்பான செயன்முறை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை கீழ்காணும் தகவல்கள் சுருக்கமாக விபரிக்கின்றன.

# தொகுதி 7

## கொள்கை நிலைகள் பற்றி தெளிவுபடுத்துதல் மற்றும் கோரல்



இதுவரை நாம் பிரச்சினையொன்றை கண்டறிந்து, அதனை பகுப்பாய்வு செய்து, செம்மைப்படுத்தி, அதனைச்சுற்றி எமது இலக்குகளையும் குறிக்கோள்களையும் கட்டமைத்துள்ளோம். இப்போது நாம் எமது கொள்கை நிலைப்பாட்டை சீராக்கி, பரப்புரை இலக்குகளை அடையாளம் கண்டு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். அத்தோடு, முன்னைய படிநிலைகளின்போது பெற்றுக்கொண்ட விடயங்களின் மீது கட்டமைக்க வேண்டும்.

மாற்றங்களை செயற்படுத்தக்கூடிய நிலையில் இருக்கும் நபர்களே எமது இலக்குகளாக அமைகின்றனர். பங்குதாரர்களை வகைப்படுத்துவது தொடர்பான பயிற்சியில் ஏற்கனவே இவர்களை நாம் அடையாளம் கண்டிருக்கலாம். இலக்குகளாக பெரும்பாலும் அரசாங்க நிறுவனங்கள் அல்லது சர்வதேச நிறுவனங்கள் அமையும். ஆனால், கலாசார பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இதில் மதத் தலைவர்களும் உள்வாங்கப்படலாம். பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்:

- குறிக்கோளின் மீதான இலக்கின் செல்வாக்கு நிலை என்ன?
- இலக்கை அடைவதற்கு காணப்படும் பிரச்சாரத்தின் நிலை என்ன?
- பிரச்சினை தொடர்பாக, இலக்கின் ஏற்றுக்கொள்ளும் தன்மை என்ன?
- இலக்கு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அல்லது பதிலளிக்க வேண்டியது யார்?

கொள்கை செயற்பாட்டாளர்களிடம், கொள்கை நிலை கோரிக்கையை முன்வைக்கும்போது அது கேட்டல் / கோரல் எனப்படும். இக்கோரிக்கைகள் தெளிவானதாகவும், உறுதியானதாகவும், சான்றுகள் மற்றும் ஆய்வு மூலம் நன்கு வரையறுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். ஸ்மார்ட் முறை மற்றும் பங்குதாரர்களின் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு எமது கோரிக்கைகளை சீர்படுத்தலாம். இலக்கின் சொந்த நோக்கங்கள் அல்லது முன்னுரிமைகளுடன் ஒருமித்து போகின்ற விடயங்கள் சிறந்த கோரிக்கைகளாக அமையும்.

**உதாரணம்**

மேலே கூறப்பட்ட அவதூறுச் சட்டத்தை இரத்து செய்த விடயம் இதற்கு சிறந்த உதாரணமாகும். சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு அதிகமாக முன்னெடுக்கப்பட்ட பிரச்சார முயற்சிகளின் பின்னர், இதன் முக்கியமான கட்டமான இச்சட்டத்தை நீக்கும் செயற்பாடு 2002ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. இதனை சாத்தியமாக்குவதற்கான இலக்குகளும் கோரிக்கைகளும் உரிய முறையில் திட்டமிடப்பட்டன.

இலங்கையின் 12ஆவது பாராளுமன்ற தேர்தல் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெற்றது. புதிதாக உருவாக்கப்பட்ட எதிரணியான ஐக்கிய தேசிய முன்னணி, 225 ஆசனங்களில் 109 ஆசனங்களை வென்று பாராளுமன்றத்தில் மிகப்பெரிய கூட்டணியாக மாறியது. தமது கட்சியின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்தது. (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்று மாவட்டங்களில் தனது சொந்த கட்சியிலும் ஏனைய சகல மாவட்டங்களிலும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தும் போட்டியிட்டது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி, ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான ரணில் விக்ரமசிங்கவை புதிய பிரதமராக ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நியமித்தார். இந்தச் சூழலில் ரணில்தான் இலக்கு. அண்மைய தேர்தலில் பெற்ற அரசியல் அதிகாரத்தின் காரணமாக, இலக்கின் மீதான தாக்கத்தின் அளவு மிக அதிகமாக இருந்தது. இதேபோன்று ஆர்வமும் அதிகமாக காணப்பட்டது: ஊடக சுதந்திரம் குறித்த முற்போக்கான சிந்தனைகள் புதிய பிரதமரிடம் காணப்பட்டன. பரப்புரை செயற்பாட்டாளர்கள் தமது நகர்வை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கான ஒரு ஆரம்பத்தை இது வழங்கியது. ஊடகவியலாளர்களே இந்த சட்டத்தால் நேரடியாக பாதிக்கப்பட்டனர். உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக பரப்புரை நிறுவனங்கள் உட்பட பிரதி பங்குதாரர்கள், தமது இலக்கான பிரதமரிடம் வலுவான கோரிக்கையை முன்வைத்தனர். நடைமுறையில் காணப்பட்ட அவதூறுச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்பதே கோரிக்கையாகும்.

## நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

மேலே குறிப்பிடப்பட்ட உதாரணத்தை பார்க்கவும். இதில் முக்கியான பங்குதாரர்கள் யார்? கோரிக்கைகள் என்ன? உங்கள் இலக்கைக் கண்டறிய தொடர்புடைய பங்குதாரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குதாரர் பகுப்பாய்வை உருவாக்கவும். இலக்குகள் மற்றும் கேள்விகளை பட்டியலிடுங்கள். உங்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் ஒரு விடயத்தை இங்கு செய்து காட்டியுள்ளோம்.

**இலக்கு:** ரணில் விக்ரமசிங்க
**கோரிக்கை:** குற்றவியல் அவதூறுச் சட்டத்தை இரத்துச் செய்வதை தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க வேண்டும்.

கீழ்காணும் வினாக்களுக்கு பதிலளியுங்கள்:

- ஒட்டுமொத்த பரப்புரை நோக்கத்துடனும் கோரிக்கை ஒத்துப்போகின்றதா?
- இது நாட்டின் தற்போதைய கொள்கைகள் மற்றும் அதிகார வரம்புடன் ஒத்துப்போகின்றதா? (இல்லாவிட்டால் தேவையான மாற்றத்தை இலகுபடுத்தக்கூடிய மேலும் உறுதியான மற்றும் நடைமுறை சாத்தியமான கோரிக்கைகளை முன்மொழிவது எவ்வாறு?)
- கோரிக்கையை முன்வைப்பதற்கு உகந்த அரசியல் காலப்பகுதி என்ன? (உதாரணமாக, தேர்தல் நெருங்கும் காலத்தில் தமது கோரிக்கைகளை முன்வைப்பது, பரப்புரை செயற்பாட்டு நிறுவனங்களுக்கு சிறந்த சந்தர்ப்பமாகும்)
- கோரிக்கையில் ஏதேனும் மறைமுக விளைவுகள் உண்டா?

# தொகுதி 8

## தந்திரோபாயங்களை தெரிவுசெய்தல்

நீங்கள் அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் விடயம் (இலக்குகள் மற்றும் கோரிக்கைகள்) மற்றும் நீங்கள் யாரை இலக்காகக் கொள்ளப்போகின்றீர்கள் என்பது தொடர்பான தெளிவை இப்போது நீங்கள் பெற்றிருக்க வேண்டும். உங்கள் இலக்கு மிகவும் பயனுள்ளதாக இருப்பதை உறுதிசெய்யவும், பொருத்தமான விடயங்களுடன் நீங்கள் தேர்ந்தெடுத்த இலக்குகளை எவ்வாறு அணுகுகிறீர்கள் என்பதைப் பற்றியதே தந்திரோபாயங்கள் ஆகும்.

பரப்புரை செயற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய பல்வேறு தந்திரோபாயங்கள் உள்ளன.

**பரப்புரை தந்திரோபாயங்களுக்கான சில உதாரணங்கள்**

- ம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்பைப் பேணுதல் (கூட்டங்கள், கடித பரிமாற்றங்கள், மின்னஞ்சல்கள்)
- வலையமைப்புகள் மற்றும் கூட்டணிகளை உருவாக்குதல்
- ிவில் சமூக அமைப்புகளை ஒன்றுதிரட்டுதல்
- ஆதரவு வழங்குமாறு மூன்றாம் தரப்பினரை கோருதல்
- உங்கள் இலக்கு யாரால் பாதிக்கப்படலாம் அல்லது ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதைக் கருத்திற்கொள்க.



**நிகழ்வு ஆய்வு 4**

மாகாணமட்ட ரீதியிலான ஊடகவியலாளர்களால் கடந்த ஒரு தசாப்த காலமாக குரலெழுப்பப்பட்டு வந்த தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஊடகத்துறை ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பானது (FMETU) நிலையான மற்றும் நடைமுறைக்குத் தகுந்த தீர்வு ஒன்றைப் பெறும் வகையில் கடந்த 2019 ஆம் ஆண்டு பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டது.

தொழிற்சங்கம் அமைத்தல், பேரம் பேசுதல் மற்றும் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல் என்பன உள்ளடங்கலான தொழிலாளர்களின் உரிமை குறித்த பயிற்சியில் பங்கேற்கும் வகையில் FMETU மாகாண ரீதியில் பல ஊடகவியளாளர்களுக்கு அழைப்பு விடுத்தது. இந்த அழைப்பு, 25 ஊடகவியலாளர்களை (அதாவது 25 மாவட்டங்களில் இருந்து) ஈர்த்தது. இதில் கலந்து கொண்ட எட்டு பேர் தொழிற்சங்கங்களை அமைத்தனர். இதைத் தொடர்ந்து, தொழில் ஆணையாளர் மற்றும் தொழிற்சங்கங்களின் பதிவாளர் ஆகியோருக்கு தொழிற்சங்க சான்றிதழ்களை, FMETU அனுப்பியது.

"தொழில்முறை ஊடகவியலாளர்கள்" எனும் தலைப்பில் உருவாக்கப்பட்ட பயிற்சி வழிகாட்டி கையேடானது, தொழில் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் அது தொடர்பிலான பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது:

- ஊடகவியலாளர் சம்பள நிர்ணய சபையில் "பிராந்திய ஊடகவியலாளர்" எனும் நிலையை தரமாக சேர்த்தல்

• ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலை மேற்கொள்ளுதல் மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் தொடர்பில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் ஆகிய உரிமைகளை கோருதல்

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காகவே இலங்கை ஊடகவியலாளர்கள் பல வருட காலமாக அரசாங்கத்தின் உதவியை நாடி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஊடக உரிமையாளர்கள் உடன்படாத பட்சத்தில் அரசாங்கம் அதனை சட்டப்பூர்வமாக்க வேண்டும் எனவும் அதனை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டும் எனவும் FMETU வலியுறுத்தியது.

அதைத் தொடர்ந்து FMETU இனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கோரிக்கைகளுக்கு இடமளிப்பதற்கான மேலதிக கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.



# ප්‍රාදේශීය ජනමාධ්‍යවේදීන් පුවත්පත් කලාවේදී පඩිපාලක සභාවට ඇතුළත් කළ යුතුයි

## ● කම්කරු ඇමැති නිමල් සිරිපාල ද සිල්වා

**අනුර ප්‍රේමලාල්**

මෙරට ජනමාධ්‍ය, ක්ෂේත්‍රයේ විශාල කාර්යභාරයක් ඉටු කරන ප්‍රාදේශීය ජනමාධ්‍යවේදීන් ද පුවත්පත් කලාවේදී පඩිපාලක සභාවට ඇතුළත් කළ යුතු බවට කම්කරු ඇමැති නිමල් සිරිපාල ද සිල්වා මහතා යෝජනා කරයි. එසේම පුවත්පත් කලාවේදී කර්මාන්තය පිළිබඳ පඩි පාලක සභාවට මෙතෙක් ඇතුළත් වී ඇත්තේ මුද්‍රිත මාධ්‍යට අයත් ජනමාධ්‍යවේදීන් පමණක් බැවින් රූපවාහිනී ගුවන් විදුලිය හා වෙබ් මාධ්‍යවේදීන් ද මීට ඇතුළත් වන ලෙසට පුවත්පත් කලාවේදී කර්මාන්තය පිළිබඳ පඩිපාලක සභා ව්‍යුහය වෙනස් කිරීමට අවශ්‍ය පියවර ගන්නා මෙන් ඇමැතිවරයා කම්කරු කොමසාරිස් ජනරාල් ප්‍රභාත් චන්ද්‍රකීර්ති මහතාට දැනුම් දුන්නේය.



ඇමැතිවරයා මේ බව කියා සිටියේ මාධ්‍ය සේවක වෘත්තීය සමිති සම්මේලනයේ නියෝජිත පිරිසක් සමග පසුගියදා අමාත්‍යාංශයේ පැවති සාකච්ඡාවකදීය. මාධ්‍ය සේවක වෘත්තීය සමිති සම්මේලනය සම්මේලනයේ ප්‍රධාන ලේකම් ධර්මසිරි ලංකාපේලි මහතා ප්‍රමුඛ සෑම දිස්ත්‍රික්කයක්ම නියෝජනය කරමින් ප්‍රාදේශීය මාධ්‍යවේදී නියෝජිතයන්ගේ සහභාගිත්වයෙන් මෙම සාකච්ඡාව පැවැත්විණි.

මෙහිදී ප්‍රාදේශීය මාධ්‍යවේදීන් ඉල්ලා ඇමැතිවරයාගෙන් ඉල්ලා සිටියේ තමන්ට කිසියම් ආකාරයක වෘත්තීය තත්ත්වයක් ලබාදීම සඳහා රජයට මැදිහත් වන ලෙසත්, එසේම තමන්ගේ වෘත්තීය හා අනාගත ආර්ථික සුරක්ෂිතතාවය වෙනුවෙන් කිසියම් ආකාරයක සමාජ ආරක්ෂණ වැඩ පිළිවෙළක් ඇරඹීම සඳහා රජයට මැදිහත් වන ලෙසයි.

තවදුරටත් මෙහි දී කරුණු පැහැදිලි කළ මාධ්‍ය සේවක වෘත්තීය සම්මේලනයේ ප්‍රධාන ලේකම් ධර්මසිරි ලංකාපේලි මහතා කියා සිටියේ, ප්‍රාදේශීය මාධ්‍යවේදීන් මෙන්ම ආයතනගත මාණ්ඩලික මාධ්‍යවේදීන්ගේ ද විශේෂයෙන් පෞද්ගලික ජනමාධ්‍ය ආයතනවල සේවය කරන මාධ්‍යවේදීන්ගේ අනාගත සුරක්ෂිතතාවය සඳහා නිශ්චිත සමාජ ආරක්ෂණ වැඩ පිළිවෙලක් නොමැති බැවින් ඒ පිළිබඳවද අවධානය යොමු කරන ලෙසයි.

මෙම අවස්ථාවට කම්කරු අමාත්‍යාංශයේ ලේකම් මාපා පතිරණ මහතා, කම්කරු කොමසාරිස් ජෙනරාල් නීතිඥ ප්‍රභාත් චන්ද්‍රකීර්ති මහතා, අමාත්‍ය මාධ්‍ය ලේකම් හා පුවත්පත් කලාවේදීන්ගේ පඩි පාලක සභාවේ නියෝජිත උපුල් ජනක ජයසිංහ මහතා සමඟ ජ්‍යෙෂ්ඨ ප්‍රාදේශීය මාධ්‍යවේදීන් වන කරුණාරත්න ගමගේ, ඩග්ලස් නානායක්කාර, පී.සසිකරන්, අසිත වීරවර්ධන, ක්‍රිෂ්නි ඉෆාම් මහත්මිය, සමන් දිසානායක, ඇතුළු ප්‍රාදේශීය මාධ්‍යවේදීහු රැසක්ම එක් වූහ.

## நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

இந்த பிரச்சாரத்தில் FMETU பயன்படுத்திய உத்திகளின் எண்ணிக்கையை பட்டியலிட முடியுமா? அரசியல் பின்னணியில் இந்த வெற்றிக்கு பங்களித்த காரணிகள் யாவை? இதனை நீங்கள் எவ்வாறு வித்தியாசமாக முன்னெடுப்பீர்கள்? இந்த பிரச்சாரத்தை நீங்கள் மேற்கொள்வீர்களாயின், எவ்வாறான தந்திரோபாயங்களை பயன்படுத்துவீர்கள் என்பதை அடையாளம் காண முடியுமா?

## நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

அவதூறுச் சட்டத்தை இரத்துச் செய்வது பற்றிய உதாரணத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பரப்புரை செற்பாட்டை முன்னெடுக்கும் அமைப்புகள் பயன்படுத்தும் பல தந்திரோபாயங்களை நாம் அடையாளம் காணலாம்.

பின்வரும் பகுதியிலுள்ள தகவல்கள் இன்னும் கூடுதலான தந்திரோபாயங்களை அடையாளம் காண வழிவகுக்கின்றது

குற்றவியல் அவதூறுச் சட்டம் இரத்து செய்யப்பட்டதை சுதந்திர ஊடக இயக்கம் வரவேற்றுள்ளது - IFEX

**– IFEX**

(FMM/IFEX) – The following is an FMM press release: The Free Media Movement warmly congratulates the government of Prime Minister Ranil Wickremesinghe and the Sri Lankan parliament, who unanimously passed an act of parliament on June 18, 2002, that repealed criminal defamation laws from the statute books. This is the first major legislation in over [...]

(FMM/IFEX) – The following is an FMM press release:

The Free Media Movement warmly congratulates the government of Prime Minister Ranil Wickremesinghe and the Sri Lankan parliament, who unanimously passed an act of parliament on June 18, 2002, that repealed criminal defamation laws from the statute books.

This is the first major legislation in over two decades to strengthen freedom of expression in Sri Lanka. The FMM has been campaigning for nearly a decade to have the repressive legislation, introduced during the British colonial rule, abolished. The campaign was later supported by both the Editors' Guild and the Publishers' Association. International organisations such as the Commonwealth Press Union, The World Association of Newspapers, the International Press Institute, the Committee to Protect Journalists and ARTICLE 19 have strongly supported the campaign by the three Sri Lankan media organisations to repeal laws constraining freedom of expression and establish a legal and institutional framework that guarantees freedom of expression in a democratic environment.

Since the 1970s, successive governments have used this law to harass newspaper editors and impose serious constraints on the media.

At a meeting with Prime Minister Ranil Wickremesinghe in January, the government and representatives of the three media organisations, the FMM, the Editors' Guild and the Publishers' Association, reached an agreement on a wide-ranging reform package to strengthen freedom of expression in the country. The package includes abolishing laws that curtail freedom of expression, introducing a right to information act, replacing the Press Council with an independent Press Complaints Commission and setting up an independent media training institute. Most of the details with regards to setting up the institutions have been finalised in subsequent meetings with the secretary to the prime minister and secretary to the Ministry of Mass Communications.

The Free Media Movement hopes that the government will implement the rest of the reform package without delay.

Sunanda Dshapriya
Convenor Free Media Movement
20 June 2002

**இது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது**

- ம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்பைப் பேணுதல் (கூட்டங்கள், கடித பரிமாற்றங்கள், மின்னஞ்சல்கள்). உதாரணம் - ட்டத்திருத்தங்கள் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சருடன் கலந்துரையாடுதல்

- வலையமைப்புகள் மற்றும் கூட்டணிகளை உருவாக்குதல் - தனியொரு நிறுவனத்தை விட, ஒரு வலையமைப்பை உருவாக்குவது, எமது பரப்புரை செயற்பாட்டு முயற்சிகளின் பெறுபேற்றை அதிகரிக்கும்

- ிவில் சமூக அமைப்புகளை ஒன்றுதிரட்டுதல் - ஒரே மாதிரியான இலக்குகள் மற்றும் நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்களை ஒன்றுதிரட்டலாம்

- ஆதரவு வழங்குமாறு மூன்றாம் தரப்பினரை கோருதல்

# தொகுதி 9

## கருத்துக்களை உருவாக்குதல்



திறன்வாய்ந்த பரப்புரை பிரச்சாரங்கள் பல்வேறு தரப்பினருக்கு தெளிவான முறையில் விடயங்களை முன்வைக்கின்றன : பொதுவான கருத்துக்கள் பிரச்சாரத்தின் நோக்கத்தை வரையறுக்கும் அதே சந்தர்ப்பத்தில், பரந்தளவிலான சமூகத்தை அல்லது பொதுமக்களை இலக்குவைக்கின்றன. இலக்கு நோக்கிய கருத்துக்களை பொறுத்தவரை அவை குறிப்பிட்ட பங்குதாரர்களிடம் கோரிக்கையை முன்வைக்கின்றன. கருத்துக்களை உருவாக்குவதற்கு முன்பாக, உங்கள் குறிக்கோள்களையும் கோரிக்கைகளையும் அடையாளம் காண்பதையும், அதனை யாரிடம் தெரிவிக்க விரும்புகின்றீர்கள் என்றும் (இலக்குகள்), அதனுடன் இலக்குகளை எவ்வாறு ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளீர்கள் (தந்திரோபாயங்கள்) என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

இரண்டு வகையாக கருத்துக்கள் உள்ளன : அவை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கருத்துக்கள் ஆகும்.

### முதன்மை கருத்துக்கள்

முதன்மை கருத்துக்களே முக்கியமான விடயங்கள் ஆகும். இது பரந்துபட்டது, அனைவரையும் ஈர்க்கும், எளிமையானது மற்றும் தெளிவானது. ஒட்டுமொத்த பரப்புரை பிரச்சாரத்தையும் ஒன்றாக வைத்திருக்கும் கருப்பொருளும் இதுவே.

அடிப்படை கேள்விகளுக்கான பதிலை முதன்மை கருத்துக்கள் வழங்கும்:

- பரப்புரை செயற்பாட்டாளர்கள் யார்?
- எந்த விடயத்தை மாற்றவேண்டுமென அவர்கள் பரப்புரை செய்கின்றனர்?
- அவர்கள் முன்மொழியும் மாற்றுத்திட்டம் என்ன?

## இரண்டாம் நிலை கருத்துக்கள்

முன்மொழியப்பட்ட மாற்றத்தை **இரண்டாம் நிலை கருத்துக்கள்** விளக்குகின்றன மற்றும் நியாயப்படுத்துகின்றன. இலக்கு பார்வையாளர்களின் தேவைகள், உணர்வுகள் மற்றும் விருப்பங்களை இலக்காகக் கொண்டு இரண்டாம் நிலை கருத்துக்கள் காணப்பட வேண்டும்.

## முதன்மை கருத்துக்களுக்கான உதாரணம்

தணிக்கை மற்றும் தண்டனை வழங்கப்படாமையின் பின்னணியில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கருத்து தெரிவித்தல் தொடர்பான உதாரணங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும். நியாயமற்ற தணிக்கை மற்றும் தண்டனை வழங்கப்படாமைக்கு எதிரான சட்டத்தை ஊக்குவிப்பதில் ஊடக பரப்புரை அமைப்புகள் மிகவும் சக்திமிக்கவை. ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பான சூழலை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் ஒத்துழைப்புடன், சுதந்திர ஊடக இயக்கம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள கீழேயுள்ள கட்டுரையில், பிரகீத் எக்னெலிகொடவின் வழக்கில் தண்டனை வழங்கப்படாமல் தாமதமாகின்றமை தொடர்பாக விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

இது பொதுமக்களை இலக்காகக் கொண்ட ஒரு முதன்மைக் கருத்து என்பதோடு, பிரச்சினை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


10 November 2020

**Challenging impunity for crimes against media in Sri Lanka**

**Against the backdrop of killing, arrest and harassment of journalists, media freedom organisations continue to campaign against the scourge of impunity in Sri Lanka, writes Ruki Fernando.**



*Sandya Eknaligoda , a human right activist and wife of missing journalist Prageeth Eknaligoda along with other journalists protesting in front of the Fort Railway Station, marking 100 days of the disappearance of the journalist Prageeth Eknaligoda in 2010. Credit: Sarah Kellapatha*


Dozens of journalists have been killed, abducted or have disappeared in the past two decades in Sri Lanka, with 2005-2010 being the most dangerous. According to Journalists for Democracy in Sri Lanka (JDS) 44 journalists and media workers were killed or disappeared during this period. Disturbingly,

இலங்கையில் ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களுக்காக தண்டனையின்மை சவாலுக்குரியது - IFJ

## இரண்டாம் நிலை கருத்துக்களுக்கான உதாரணம்

ஒரு குறிப்பிட்ட பார்வையாளர்களை இலக்காகக் கொண்ட கருத்துக்கள் இரண்டாம் நிலை கருத்துக்கள் எனப்படும். மிகவும் திட்டவட்டமான ஒரு நோக்கத்திற்காக இது கட்டமைக்கப்படுகின்றது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுரையிலும் தண்டனை வழங்கப்படாமை குறித்த அதே பிரச்சினை, ஆனால் வேறு கோணத்தில் மற்றும் வித்தியாசமான நோக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தண்டனை வழங்கப்படாமை குறித்து ஒரு பரந்துபட்ட கோணத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிடுகின்றது. தண்டனை வழங்கப்படாமை மற்றும் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பது பற்றிய அடிப்படை அறிவைக் கொண்ட மக்களுக்கு இக்கட்டுரை மிகவும் பொருத்தமானது



AI Index: ASA 37/3541/2021
14 January 2021

**THE UN HUMAN RIGHTS COUNCIL MUST STEP UP EFFORTS TO ADVANCE ACCOUNTABILITY FOR SERIOUS VIOLATIONS IN SRI LANKA**

Amnesty International urges the United Nations (UN) Human Rights Council (HRC), when it meets for its 46th session (22 February – 19 March 2021), to establish an international accountability mechanism to continue to monitor and report on the human rights situation in Sri Lanka, and to collect, preserve and assess evidence of gross human rights violations.

As this paper details, such a mechanism is critical in the face of the continued deterioration of the human rights situation on the ground, including: increased attacks on human rights organizations, media, and members of the Muslim community; backsliding on the limited progress made on the implementation of HRC resolution 30/1, including on accountability; and Sri Lanka's announcement they are disengaging from the 30/1 process altogether.

We hope to see states work towards such an appropriate response, in line with the clear recommendations of the UN Office of the High Commissioner for Human Rights (OHCHR), when the HRC meets for its 46th session.

**CONTINUED DETERIORATION OF THE HUMAN RIGHTS SITUATION ON THE GROUND**
Over the past few years – and the past year in particular – we have witnessed an alarming crackdown on civic space in Sri Lanka, with increased targeting and intimidation of human rights defenders,[1] journalists,[2] and lawyers.[3] Among others, Amnesty International has documented the harassment of New York Times journalist Dharisha Bastians,[4] the arbitrary detention of blogger Ramzy Razeek (amid deteriorating health),[5] and lawyer Hejaaz Hizbullah,[6] and has followed the ongoing criminal investigation against writer Shakthika Sathkumara.[7] The real threat of reprisals is already having a chilling effect. Lawyers, journalists and criminal investigators who pursued accountability for human rights violations have already fled the country. Under new directives, law enforcement officers have arrested social media commentators for criticizing officials in relation to the government's COVID-19 response.

The Secretary-General's latest report on reprisals against human rights defenders cooperating with the United Nations noted that, "OHCHR received continued allegations of surveillance of civil society organizations, human rights defenders and families of victims of violations, including repeated visits by police and intelligence services, questioning organizations about, *inter alia*, their staff and activities related to the UN."[8] The report noted that a number of Sri Lankans who have travelled to Geneva to attend sessions of the HRC have been subjected to questioning and surveillance.

The issue of "reprisals against judicial and other professionals who try to prosecute human-rights related cases involving State officials," highlighted in the 2015 OHCHR Investigation on Sri Lanka report, also remains a huge challenge. More than 700 law enforcement officials with the Criminal

1

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து அறிக்கையிடுவதற்கும், மொத்த மனித உரிமை மீறல்களின் ஆதாரங்களை சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையை வலியுறுத்தும் வகையில் சர்வதேச மன்னிப்புச் சபை



## இரண்டாம் நிலை கருத்துக்களை உருவாக்கும்போது, பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்

- யாரை இலக்குவைக்கின்றீர்கள்? (தனிநபர் அல்லது தனித்துவமான குழுவை மேற்கோள் காட்டுங்கள்)
- அந்த இலக்கின் விருப்புகள் மற்றும் அவற்றை எவ்வாறு பரப்புரை பிரச்சினையுடன் இணைக்க முடியும்?
- பிரச்சினை பற்றி இலக்கு ஏற்கனவே கொண்டுள்ள அறிவு என்ன?
- பிரச்சினையை எதிர்க்கவோ அல்லது ஆதரிக்கவோ இலக்கு எந்த நிலையைக் கொண்டுள்ளது?
- பிரச்சினையின் மீதான இலக்கின் செல்வாக்கு நிலை என்ன?
- இலக்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை (கோரிக்கை) என்ன?

உதவிக்குறிப்பு - ஒரு எச்சரிக்கை சொல்

எந்தவொரு பிரச்சார தகவல்களும் உண்மையிலேயே தனிப்பட்டவை இல்லை. தனிப்பட்ட வகையில் தொடர்பாடப்படும் எந்தத் தகவலும் பின்னர் ஒரு நேரம் பகிரங்கமாக்கப்படலாம். எனவே, இலக்குவைத்து அனுப்பப்படும் தகவல்களாக இருந்தாலும், அதுவும் பொதுமைத் தகவல் எல்லையுடன் இயைந்து சீரமைக்கப்பட வேண்டும் என்பதோடு, சிறந்த சான்றுகளை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். தனிப்பட்ட "உரையாடல்கள் மற்றும் தகவல்தொடர்புகள், உரிய தரப்பினரைத் தவிர ஏனையோரிடம் பகிரப்பட்டால், அது பிரச்சாரத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதை பிரச்சார செயற்பாட்டாளர்கள் எப்போதும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். மிகைப்படுத்தல், தரவுகளை பெருப்பித்தல் அல்லது அப்பட்டமான பொய்யுரைத்தல் என்பவற்றில் இருந்து விலகி இருக்க வேண்டும்..

## தொகுதி 10

### பரப்புரை மூலோபாயம் ஒன்றை உருவாக்குதல்

ஒரு பிரச்சாரத்தின் நோக்கங்கள், இலக்குகள் மற்றும் தகவல்களை ஒத்திசைக்கப்பட்ட முனைவாக ஒருங்கிணைக்கும் திட்டமே ஒரு பரப்புரை செயற்பாட்டாளரின் மூலோபாயமாகும். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பரப்புரை செயற்பாட்டின் மூலோபாயம் என்பது, நோக்கங்களை குறுகிய காலம், இடைக்காலம் மற்றும் நீண்ட காலம் என வகைப்படுத்தி, அமுலாக்க வேண்டிய தந்திரோபாயங்களைக் கோடிட்டுக் காட்டுவதாகும். வலுவான மூலோபாயங்கள் தர்க்க ரீதியில் வடிவமைக்கப்பட்டிருக்கும். இதனால் ஆரம்ப நோக்கங்கள், தடைகளை குறைத்து பிற்கால நோக்கங்களை அடைவதற்கான படிகளை உருவாக்குகின்றன. ஒரு பிரச்சாரத்தின் இலக்குகள், நோக்கங்கள், குறிக்கோள், கேள்விகள் மற்றும் தகவல் அனுப்புதல் போன்றவை குறித்த முடிவுகளை எடுப்பதற்கான அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவதே பரப்புரை செயற்பாட்டு மூலோபாயத்தின் நோக்கமாகும். இந்த கட்டமைப்பானது உள்ளூர் அரசியல் சூழலைக் கருத்திற் கொண்டு அமைவதோடு அபாயங்களைக் குறைக்க உதவும். தெளிவான ஒரு மூலோபாயமானது, ஒரு பிரச்சாரத்திற்கு மாறுபடும் அரசியல் சூழ்நிலைகளால் மேலெழக்கூடிய எதிர்பாராத சவால்களை கையாள உதவும்.



### நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

கொங்கோ ஜனநாயகக் குடியரசு தொடர்பான ஒரு ஆய்வை மீண்டும் பார்ப்போம். இந்த நிகழ்வு ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள தந்திரோபாயங்களுடன் தொடர்புடைய கோரிக்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் அபாயங்களை உங்களால் பெயரிட முடியுமா?

## கொங்கோ ஜனநாயக குடியரசிலுள்ள சட்டக் கட்டுப்பாடுகளை சவாலுக்கு உட்படுத்தல்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் சிவில் சமூக அமைப்புகளின் நிலைமை மோசமடைந்து வருகின்றது. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் பிரிவினரும் தாக்குதல் நடத்துவது, மிரட்டல் விடுப்பது, தன்னிச்சையான கைது மற்றும் திட்டமிட்ட படுகொலை போன்ற விடயங்களால் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். விமர்சனங்களை அதிகளவில் ஒடுக்கிய அரசாங்கம், சிவில் சமூகத்தின் மீது மேலும் கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டத்தை 2017ஆம் ஆண்டு முன்மொழிந்தது.

**குறிக்கோள்** : அச்சுறுத்தல், வன்முறை அல்லது அரசாங்கத்தின் தலையீடுகளின்றி சிவில் சமூகம் செயற்படுவதற்கான சூழலை உருவாக்குதல்.

**மூலோபாயம்** : சிவில் சமூகத்தை கட்டுப்படுத்தும் சட்டத்தை தோற்கடித்து, சிவில் சமூக அமைப்புகளுக்கு சமூகத்தின் ஆதரவை கட்டியெழுப்பும் வகையிலான ஒரு முயற்சியை உள்ளூர் சிவில் சமூக அமைப்பு ஆரம்பித்தது.

**தந்திரோபாயங்கள்**: தேசிய ரீதியிலான அரசியலில் செல்வாக்கு செலுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக, சட்ட வரைபை இடைநிறுத்துவதற்கு அவர்களின் ஆதரவைப் பெற உள்ளூர் மட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை குறிவைக்க சிவில் சமூக அமைப்பு முடிவு செய்தது. சிவில் சமூக அமைப்புகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் அதிகமாக காணப்படும் வடக்கு மற்றும் தெற்கு கியு ஆகிய இரண்டு மிகவும் கொந்தளிப்பான மாகாணங்களில் கவனம் செலுத்த சிவில் சமூக அமைப்பு தீர்மானித்தது. குறித்த சட்டத்திற்கு எதிரான அவர்களின் பரப்புரைகளை ஒருங்கிணைக்கும் முகமாக 2017ஆம் ஆண்டு மே மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரை, 48 சிவில் சமூக அமைப்புகளுக்கு இரண்டு மாகாண தளங்களை உருவாக்குவதற்கு சிவில் சமூக அமைப்பு உதவியது. அரசாங்கத்தால் இலக்குவைக்கப்பட்ட ஆர்வலர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டுவதற்கு ஆறு கவனக் குழுக்களை (Focus groups) செயற்படுத்தினர். குறித்த கவனக் குழுக்களின் முடிவுகள், ஊடகப் பிரச்சாரங்களிலும் உள்ளூர் மற்றும் மாகாண மட்டத்தில் தீர்மானம் எடுப்பவர்களுடனான சந்திப்புகளிலும் பயன்படுத்தப்பட்டன.

**விளைவு:** சிவில் சமூக அமைப்புகளின் கூட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பதை விடுத்து, கூட்டங்களை அமைதியான முறையில் கண்காணிக்கத் தொடங்கிய பொலிஸாரின் நடத்தையில் ஒப்பீட்டளவில் குறுகிய காலத்திற்குள் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு சிவில் சமூக அமைப்பினர் ஆச்சரியமடைந்தனர். ஊடகப் பிரச்சாரத்தின் விளைவாக சிவில் சமூகத்தின் மீதான பொதுமக்களின் ஆதரவும் அதிகரித்தது. அத்தோடு, பெரும்பாலான பொதுமக்கள் தமது கடைகளையும் அலுவலகங்களையும் மூடிவிட்டு, சிவில் சமூக அமைப்பு ஏற்பாடு செய்த வன்முறையற்ற அமைதிப் பேரணிக்கு ஒற்றுமையுடன் ஆதரவளித்தனர். உள்ளூர் மட்டத்தில் கவனம் செலுத்துவதன் மூலமும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை கொண்டிருப்பதன் மூலமும், சிவில் சமூக அமைப்பு உண்மையான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. அரசு சாரா அமைப்புகளை கட்டுப்படுத்தும் சட்ட அச்சுறுத்தல் காணப்படுகின்றது. ஆனால், அதன் ஆரம்ப முயற்சியை சிவில் சமூக அமைப்பு தோற்கடித்தது

## பிரச்சாரத்திற்கான கால அளவு:

நீண்ட காலம் அல்லது குறுகிய காலத்தை வரையறுக்கும் விதிகள் எதுவும் கிடையாது. வகைகள் தற்சார்புடையவை மற்றும் அரசியல் கட்டமைப்பின் வெளிப்படைத் தன்மை, குறிக்கோளின் சிக்கலான தன்மை, கிடைக்கக்கூடிய வளங்கள் ஆகியவற்றை பெரிதும் சார்ந்துள்ளது. ஒரு உத்தேச கால அளவு காணப்படலாம்:




- நீண்ட கால நோக்கங்கள் 3-5 வருடங்களில் நிறைவேற்றப்படும்

உதாரணம் - பங்குதாரர் பகுப்பாய்வின் முக்கிய செயற்பாட்டாளர்களிடம் பரப்புரை செய்தல்.

- இடைக்கால நோக்கங்கள் 1-2 வருடங்களில் நிறைவேற்றப்படும்

உதாரணம் - பரப்புரை கருத்துக்களை வழங்குதல், கூட்டணிகள் மற்றும் வலையமைப்புகளின் ஒரு பகுதியாக இருத்தல்.

- குறுகிய கால நோக்கங்கள் 6 மாதங்கள் தொடக்கம் 1 வருட காலத்திற்குள் நிறைவேற்றப்படும்.

உதாரணம்.: இரண்டாம் நிலை ஆய்வு, முக்கிய பங்குதாரர்களுடனான ஆலோசனை.

### நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

தகவல் அறியும் உரிமை தொடர்பான கொள்கை உருவாக்கத்திற்கு தேவைப்பட்ட கால அளவை கீழ்காணும் விடயத்தில் பார்க்கவும். நீங்கள் 1995இல் வாழ்பவர் என வைத்துக்கொண்டால், குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களாக நீங்கள் எவற்றை கருதுவீர்கள்?

**1994:** 'அரசாங்கத்தின் ஊடகக் கொள்கை' என்ற தலைப்பிலான அமைச்சரவைப் பத்திரத்தை போக்குவரத்து, தகவல் மற்றும் விமானசேவை அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்க அறிமுகப்படுத்தினார்

**1995:** ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் சட்டங்களை சீர்திருத்துவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஆர். கே. டபிள்யூ குணசேகர தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்க இக்குழு பரிந்துரைத்தது.

**1996:** நீதியரசர் ஏ. ஆர். பி. அமரசிங்க தலைமையிலான இலங்கை சட்ட ஆணைக்குழு, தகவல் அறியும் சட்ட வரைபை தயாரித்தது.

**1998:** இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை பத்திரிகை சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் தலைமையிலான ஊடக சுதந்திரம் மற்றும் சமூகப் பொறுப்பு தொடர்பான கொழும்பு பிரகடனம், இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியது.

**2000:** 2000ஆம் ஆண்டு அரசியலமைப்பு முன்வரைபில் 'தகவல் அறியும் உரிமை' பிரிவும் உள்ளடங்கியிருந்த போதும், குறித்த சட்டமூலம் ஒருபோதும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை

**2004:** 2004ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைபை பிரதமர் குழு உருவாக்கியது. இது அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்ற பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2010:** 2010ஆம் ஆண்டு நீதியமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடவின் முயற்சியால், குறித்த சட்டமூலம் 2010இல் திருத்தப்பட்டது.

**2011:** 2011ஆம் ஆண்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட திரு.கரு ஜயசூரிய, 2004இல் உருவாக்கப்பட்ட தகவல் அறியும் சட்டமூலத்தை தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றில் சமர்ப்பித்தார். ஆனால் அது பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. பின்னர், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க

ஆணைக்குழு (LLRC) 2011ஆம் ஆண்டு வெளியிட்ட தனது இறுதி அறிக்கையில், தகவல் அறிவும் உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்துமாறு அரசுக்கு பரிந்துரைத்தது.

**2013:** கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 2013ஆம் ஆண்டு தேசிய செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடாக இதனை உள்ளடக்கியது

**2015:** அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான அரசியலமைப்பு உரிமையை மக்கள் பெறுகின்றனர்.

**2016:** ஜூன் 23 அன்று, இலங்கைப் பாராளுமன்றம், ஒரு புகழ்பெற்ற நடவடிக்கையாக, குடிமகனின் தகவல் அறியும் அடிப்படை உரிமைக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இயற்றியது.

## தொகுதி 11

### பரப்புரை திட்டமிடல்

பரப்புரை திட்டமிடல் என்பது சுழற்சி முறையிலானது. அதாவது தெரிவுசெய்யப்பட்ட மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்களை மேலும் பிரச்சாரங்களில் இணைப்பதன் மூலம் வெற்றியை உருவாக்குகின்றது. பிரச்சாரங்களை வடிவமைக்கும்போது, தந்திரோபாயங்கள் மற்றும் உத்திகளை நாம் தொடர்ந்து மதிப்பீடு செய்து, சீர்செய்ய வேண்டும்.

**விடயங்களை பின்தொடர்தல், கருத்துக்கோரல், சீர்செய்தல்**

ஒரு பிரச்சாரத்தை ஆரம்பிக்கும்போது, நடைமுறையிலுள்ள செயற்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்களை முடிந்தளவு நீங்கள் பதிவுசெய்துகொள்வது அவசியம். இயல்பாகவே பிரச்சாரங்கள் கூட்டுப்பயனுடையதாக இருக்க வேண்டும் என்பதால், எதிர்கால செயற்பாடுகள் பற்றிய தகவல்களை வழங்கவும் வழிநடத்துவதற்கும், கடந்த கால செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் உதவும். இது உங்கள் பணியின் தாக்கத்தை மதிப்பிடுவது மற்றும் தடைகளுக்கு பதிலளிப்பதில் வெளிப்படையாக மற்றும் நெகிழ்வாக இருப்பது அல்லது கடந்தகால அணுகுமுறைகள் செயற்படாத சந்தர்ப்பத்தில் நடவடிக்கைகளை மாற்றுவது ஆகியவற்றை உள்ளடக்கும். எவ்வாறான தகவல்கள் பொருத்தமானவை மற்றும் எவ்வளவு தகவல்களை சேகரிக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்வது மிகவும் அவசியம். தரவு சேகரிப்பிற்கும் ஒழுங்கமைப்பிற்கும் நேரமும் வளமும் செலவாகலாம். ஆகவே, தரவு சேகரிப்பிற்காக மாத்திரம் தகவல் சேகரிப்பில் ஈடுபட வேண்டாம் என்பதை நாம் அழுத்தமாக தெரிவிக்கின்றோம். தொடர்புடைய தகவலை எவ்வாறு கண்டறிவது, தரவை எவ்வாறு சரியாக மதிப்பீடு செய்வது மற்றும் உங்கள் பரப்புரை செயற்பாடுகளை எப்போது சீர்திருத்துவது என்பது தொடர்பான தகவல்களை இந்த கருவித்தொகுப்பின் மூன்றாவது பிரிவு விளக்குகின்றது.






**பரப்புரை செயற்பாட்டை இலகுபடுத்த கீழ்வரும் இலகு வழியை பயன்படுத்தலாம்:**

- யார்: நீங்கள் யாரை சந்தித்தீர்கள்? போராட்டத்தை முன்னெடுத்தவர் மற்றும் பங்குபற்றியோர் யார்? சமூக ஊடக செயற்பாட்டில் கலந்துகொண்டவர் யார்?
- என்ன : என்ன நடந்தது? கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயம் என்ன? எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட விடயம் என்ன?
- எப்போது : கூட்டம் அல்லது செயற்பாடு எப்போது இடம்பெற்றது?
- எங்கே : கூட்டம் அல்லது செயற்பாடு எங்கே இடம்பெற்றது?
- ஏன் : கூட்டம், எதிர்ப்பு நடவடிக்கை அல்லது செயற்பாட்டின் நோக்கம் என்ன?
- எப்படி : செயற்பாடு எவ்வாறு இடம்பெற்றது? இந்தக் கூட்டம் மூன்றாம் தரப்பினரால் நடத்தப்பட்டதா? எதிர்ப்பு நடவடிக்கை தன்னிச்சையானதா அல்லது ஏற்கனவே திட்டமிடப்பட்டதா?

# பிரிவு இரண்டு

## கொள்கை உருவாக்கம்

## அறிமுகம்

முக்கியமான பிரச்சினைகள் தொடர்பான கொள்கை நிலைகளை, பரப்புரை செயற்பாட்டு அமைப்புகள் உருவாக்க வேண்டும். பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களைக் கொண்டு சாத்தியமான கொள்கை நிலைகளை நிறுவனங்கள் உருவாக்குகின்றன. தமது சூழலை நன்கு மதிப்பீடு செய்வதன் மூலம், தமது உறுப்பினர்கள் அல்லது தொகுதிகளிலுள்ள முக்கிய பிரச்சினைகளை அமைப்புகள் புரிந்துகொள்வதோடு, சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

நிறுவனங்கள் தமது உள்ளக கொள்கை வகுப்பின்போது கருத்திற்கொள்ள பின்வரும் முக்கிய காரணிகள் தொடர்பாக இந்த பிரிவில் நாம் ஆராய்வோம்:

- **கவல் சேகரிப்பு – நிறுவனங்கள் தங்கள் கொள்கை நிலைகள் குறித்து சிறந் ீர்மானங்களை மேற்கொள்ள இது உதவும்.**

- பெற்றுக்கொண்ட தகவல்களை பயனுள்ள வகையில் நிர்வகிக்க மற்றும் பயன்படுத்துவதற்கான கட்டமைப்புகளை கொண்டிருத்தல்
- அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் காலத்திற்கேற்ற ஆலோசனை செயன்முறை ஒன்றை செயற்படுத்துகின்ற முறை.

## தொகுதி 1 தகவல் சேகரிப்பு

தற்கால நிகழ்வுகள் பற்றிய தகவல்களின் முக்கிய பகுதியாக தகவல் சேகரிப்பு காணப்படுகின்றது. பரப்புரை செயற்பாட்டை முன்னெடுக்கும் ஒவ்வொரு நிறுவனமும் செயற்படுத்தக்கூடிய மற்றும் நடைமுறை சாத்தியமான அணுகுமுறையை கொண்டிருக்க வேண்டும்.

### தரத்தின் அடிப்படையிலான தரவுகளை சேகரிக்கும் கருவிகள்

நடத்தை, அனுபவங்கள் அல்லது நம்பிக்கைகள் பற்றிய தகவல்களை விபரிப்பு அடிப்படையிலான (இலக்கமற்ற) தரவுகள் வழங்குகின்றன. அத்தோடு, எப்படி, ஏன் என்ற கேள்விகளுக்கும் பதிலளிக்கின்றது.

**கருவிகள்** : நேர்காணல்கள், இலக்குக் குழுக்களின் அளவை அடிப்படையாகக் கொண்ட கருவிகள்


### அளவைக்குரிய தரவு சேகரிப்பு கருவிகள்

இலக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகளை அளவிடலாம் மற்றும் புள்ளிவிபர ரீதியாக பகுப்பாய்வு செய்யலாம், காரணிகளுக்கு இடையே தொடர்பை ஏற்படுத்துகின்றது, என்ன, எத்தனை அல்லது யார் போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்கின்றது.

**கருவிகள்:** மதிப்பீடுகள், பரிசோதனைகள், ஆய்வுகள்

### பயிற்சி

தகவல் சேகரிப்பிற்கு தற்போது உங்களது நிறுவனம் பயன்படுத்தும் ஐந்து முறைகளை எழுதுங்கள். இந்த ஒவ்வொரு முறையிலும் நீங்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சவால்களை இப்போது குறித்துவைத்துக்கொண்டு, இந்தச் சவால்களை எவ்வாறு எதிர்கொண்டு அதிலிருந்து வெளிவருகின்றீர்கள் என்பதை உங்கள் சக ஊழியர்களுடன் கலந்துரையாடுங்கள்.



**பயனுள்ள தகவல் மூலங்கள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:**



1. அரசாங்க உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள்
2. வர்த்தமானி
3. ர்வதேச செய்திகள்
4. பொலிஸ் அறிக்கைகள்
5. பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகம்
6. ர்வதேச நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அறிக்கைகள்

உங்களது கொள்கைரீதியான தீர்மானங்களை தெரிவிப்பதற்கான உள்ளடக்கம், தரவுகள் மற்றும் புள்ளிவிபர நிலையை வழங்குவதற்கு இந்த மூலங்கள் பயனுள்ளதாக அமையும். எவ்வாறாயினும், அவை முதல்நிலை தகவல்களால் மேலதிகமாக கட்டமைக்கப்பட்டதாக அமைய வேண்டும்: கொள்கையால் பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாக பேசுதல். உங்களது நிறுவன உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட பிரஜைகள் அல்லது பொதுமக்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். பல்வேறு காரணங்களுக்கு மிகவும் முக்கியமானதாக முதல்நிலை தகவல் சேகரிப்பு அமைகின்றது.

1. உண்மைகளை சரிபார்க்க (ஏனையவற்றை விட சில உத்தியோகபூர்வ மூலங்கள் நம்பகத்தன்மை வாய்ந்தவை)
2. கொள்கைகள் மக்களை எவ்வாறு பாதிக்கின்றன மற்றும் அவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளுக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ளல்
3. உங்கள் கொள்கை நிலைப்பாட்டிற்காக தீவிரமாக செயற்படும்போது, சூழலுக்குப் பொருத்தமான மற்றும் பயனுள்ள நிகழ்வு ஆய்வுகளை வழங்குவதற்கான தூண்டலை இவை வழங்குகின்றன.

தற்போது காணப்படும் மூலங்களின் பட்டியலை மீண்டும் பார்க்கவும். இதில் எத்தனை முதல்நிலை மூலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன?

தரவு சேகரிப்பின் மாற்று முறைகளும் உள்ளன:

அத்தகைய சில மாற்று முறைகளுக்கு சிறந்த உதாரணங்களை மனித உரிமை சார்ந்த புதிய தந்திரோபாயங்கள் வழங்குகின்றன.

- வரைபடங்கள்:
- கையடக்க தொலைபேசிகள் மற்றும் குறுஞ்செய்திகள்:
- இணையம் மற்றும் கையடக்க தொலைபேசி விளையாட்டுக்கள்







## தொகுதி 2 தகவல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பகிர்ந்துகொள்ளுதல்



தகவல்களை நீங்கள் சேகரித்த பின்னர், அதனை உள்ளக ரீதியில் ஒழுங்கமைக்கவும் பகிரவும், பயன்படுத்தவும் ஒரு அமைப்பு இருக்க வேண்டும். தகவல்களை அர்த்தமுள்ள முறையில் பயன்படுத்த இது உங்களுக்கு உதவுகின்றது. திறந்த தகவல் பகிர்வு என்பது உங்கள் நிறுவனத்தின் உறுப்பினர்களிடையே தகவல்களைப் பகிர்வதற்கான ஒரு புதுமையான அணுகுமுறையாகும். இது இலவச பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் அதே சந்தர்ப்பத்தில், பொறுப்பற்ற பயன்பாட்டைத் தடுக்க உதவும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த நிறுவன மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை நிறுவுவது திறந்த தகவல் பகிர்வு எனப்படுகின்றது.

### எந்த வகையான தகவலை சேமிப்பது பயனுள்ளதாக இருக்கும்?

- உத்தியோகபூர்வ மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவு மற்றும் அறிக்கைகள் - உங்கள் கொள்கைகளை கட்டமைக்கும் போது அதற்கு உதவும் மூலங்களாக இவற்றை பயன்படுத்தலாம்.
- வெளிக்கள அலுவலக அறிக்கைகள்
- உறுப்பினர்கள் அல்லது பொதுமக்களுடனான நிகழ்வு ஆய்வுகள் மற்றும் தொடர்புகள். இவற்றில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் உள்ளடங்கும்
- தகவல் தொடர்பு மற்றும் ஆலோசனைக்கு பயனுள்ளதாக நீங்கள் கருதும் பங்குதாரர்களின் தரவுத்தளம்.

**விடயங்களை சேமிக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய சில கொள்கைகள்:**

***1. கவல் ஏற்கனவே பொதுத் தளத்தில் காணப்படுகின்றதா?*** பொதுவெளியில் பகிரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள், செய்தி அறிக்கைகள் மற்றும் தரவுகள், பகிரப்பட்ட கோப்புறையில்(களில்) (shared folders) சேமிக்கப்படும். உள்ளடக்கத்தை ஒழுங்கமைத்தல், அதைப் புதுப்பித்தல் மற்றும் கோப்புறைகளுக்குள் சென்று தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான அனுமதிகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு பொறுப்பாக ஒருவர் இருக்கவேண்டும். இங்குள்ள முக்கியப் பிரச்சினை என்னவென்றால், நிறுவனத்திலுள்ள சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தகவல்களை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதாகும். அவ்வாறு இடம்பெற்றால், தரவு தொடர்ந்து புதுப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் அதே சந்தர்ப்பத்தில் அவர்கள் தமது பணிக்காக அவற்றை பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பு: தரவுகளும் அறிக்கைகளும் உங்கள் கொள்கை நிலைகளை ஆதரித்தால், உங்கள் இணையத்தளத்திலுள்ள அசல் உள்ளடக்கத்திற்கான இணைப்புகளைப் பகிர்வதும் பயனுள்ளதாக இருக்கும்.

*2. கவல்களை நாம் எங்கு சேமிக்கின்றோம்?* பகிரப்பட்ட தகவல்களைச் சேமிப்பதற்கு பல்வேறு கட்டமைப்புகள் உள்ளன. Google, Dropbox, Box, Diligent மற்றும் Teams என்பன இதற்கு சில உதாரணங்களாகும். இந்த கட்டமைப்புகள் பாதுகாப்பானவை என்பதையும், ஒவ்வொரு கோப்புறையிலும் (Folder) உள்ளடக்கத்தைப் பராமரிப்பதற்கும் உட்செல்லும் அனுமதியை நிர்வகிப்பதற்கும் பொறுப்புவாய்ந்த பணியாளர் ஒருவர் உள்ளதையும், தகவல்களில் மாற்றம் செய்ய அனுமதிகளை வழங்கும்போது கவனமாக இருப்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள். உள்ளடக்கத்தின் மேலதிக காப்புப் பிரதி (backup) ஒன்றை எப்போதும் வைத்திருப்பது அவசியம். Cloud storage பயன்படுத்தப்பட்டால் பாதுகாப்பு நெறிமுறைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

*3. கவல்களுக்குள் பாதுகாக்கப்பட்ட தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா?* பிரச்சினைகளை புரிந்துகொள்வதற்கு முதல்நிலைத் தகவல் சேகரிப்பு இன்றியமையாதது. மற்றும் விளம்பர விடயங்களை விளக்குவதற்கும் பிரச்சாரங்களை உயிர்ப்பிப்பதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனினும், இந்தத் தகவலைச் சேமிப்பதில் நீங்கள் கவனம் செலுத்துவதும், தமது தகவலைப் பகிர்ந்துகொள்வதற்குச் சம்மதிக்காதவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து, தகவல் உரிமையாளரின் ஒப்புதலுடன் மட்டுமே பகிர்ந்து கொள்வதும் முக்கியம்.

தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து அறிக்கைகளைச் சேகரிக்கும் போது, எந்தத் தகவலைப் பகிரலாம், ஏன், யாருடன் பகிரலாம் என்பதைப் பற்றி வெளிப்படையாக இருக்கவும், மேலும் அவர்களின் சம்மதத்தை பெறவும். தனிநபருடன் உரையாடிய உங்கள் நிறுவனத்திலுள்ள நபரின் பெயர் மற்றும் அந்த உரையாடல் இடம்பெற்ற திகதி ஆகியவற்றைக் கொண்டு சரிபார்ப்புப் பட்டியலை உருவாக்குவது சிறந்த செயற்பாடாகும். சம்பந்தப்பட்ட நபரின் தொடர்பு விபரங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்திருப்பதை உறுதிசெய்துகொள்ளவும். அவ்வாறு செய்யும்போது பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவருடன் அந்த தகவல்களை சரிபார்த்துக்கொள்ள முடியும்.

நிகழ்வு ஆய்வுகளை பயன்படுத்தும் போது, சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்திற்குச் சென்று, அவர்களின் கதை பகிரப்படுவதில் அவர்கள் இன்னும் மகிழ்ச்சியடைகிறார்களா என்பதை மீண்டும் சரிபார்த்து, ஏதேனும் தொடர்புடைய விபரங்கள் இருக்குமாயின் அதனைப் பெற்று புதுப்பித்துக்கொள்வது சிறந்த முறையாகும்.

மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி எண்கள், வயது மற்றும் முகவரி போன்ற தனிப்பட்ட தரவைச் சேமிக்கும் போது, உரிய பாதுகாப்பு நெறிமுறைகளை கையாள்வதில் மிகவும் அவதானமாக செயற்படுங்கள். குறிப்பாக தனிநபர் ஒருவர் தனது அடையாளத்தை பாதுகாக்குமாறு குறிப்பிட்டால் அதுகுறித்து மிகவும் அவதானமாக செயற்படுங்கள்.



**பயிற்சி**

நிறுவனத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடன் உங்கள் நிறுவனத்திற்கான சிறந்த தகவல் சேகரிப்பு, சேமித்தல் மற்றும் பகிர்தல் திட்டத்தை உருவாக்கவும்.

# தொகுதி 3

## ஆலோசனை

கொள்கை உருவாக்கத்திற்கு உள்ளக மற்றும் வெளிப்புற ஆலோசனையை உள்ளடக்கிய தெளிவான செயன்முறை ஒன்று அவசியமாகின்றது. கொள்கை உருவாக்கத்தை ஆராய்வதில் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய காரணிகளாக, நிறுவனத்தின் தலைமைத்துவ போக்கு மற்றும் கலாச்சாரம் என்பன காணப்படுகின்றன.

### உள்ளக ஆலோசனை - சிறந்த நடைமுறைகள்

1. உங்கள் நிறுவனத்தின் கொள்கை உருவாக்கத்திற்கு யார் பொறுப்பு என்பதும், உறுப்பினர்கள்/ஊழியர்கள்/தன்னார்வத் தொண்டர்கள் தமது யோசனைகளைப் பரப்புரை செய்வதற்கு எவ்வாறான நடைமுறை காணப்படுகின்றது என்பது பற்றியும் தெளிவாக இருக்க வேண்டும். பின்வரும் கேள்விகளை கேளுங்கள்:
   - வழமையான கூட்டங்கள் நடைபெறுகின்றனவா?
   - கல உறுப்பினர்களுடனும் கலந்தாலோசிக்கப்படுகின்றதா?
   - ஏனையோர் முன்வைக்கும் பரப்புரைகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு காணப்படும் நடைமுறை என்ன?
   - தமது பரப்புரைகள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கான விளக்கத்தை சம்பந்தப்பட்ட நபர்கள் பெறுகின்றனரா? அவர்களின் பரப்புரைகள் செயற்படுத்தப்படும்போது பாராட்டப்படுகின்றனரா?
2. மக்களுடன் கலந்தாலோசிக்கும்போது, கொள்கை உருவாக்கத்தில் நீங்கள் அடைந்துள்ள நிலை குறித்து தெளிவாக இருங்கள். ஆக்கபூர்வமான மற்றும் அறிவார்ந்த உள்ளீட்டை எதிர்பார்க்கும் உங்களுக்கு இது பயனுள்ள யோசனையாக இது உள்ளதா? அல்லது கொள்கை உருவாக்கப்பட்டு, அதற்காக மிகவும் திட்டவட்டமான கருத்தை எதிர்பார்க்கும் இடத்தில் உள்ளீர்களா?
3. மற்றவர்களை அணுகும்போது நீங்கள் எதைச் சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதில் தெளிவாக இருங்கள். அவர்களின் பதிலைப் பற்றி நீங்கள் உண்மையிலேயே வெளிப்படையாக உள்ளீர்களா? கொள்கை நிலை பற்றி நீங்கள் கலந்துரையாட வேண்டுமா அல்லது முன்மொழியப்பட்ட கொள்கைக்கான ஆதரவைப் பெற விரும்புகிறீர்களா? ஒவ்வொரு விடயத்திற்கும் வெவ்வேறு அணுகுமுறை மற்றும் தொடர்பாடல் அமைப்பு அவசியம்.

### 2.3.2 வெளிப்புற ஆலோசனை



**கொள்கை உருவாக்கத்தின் போது கீழ்காணும் விடயங்கள், ஆலோசனையின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.**

- எமது அறிவு விருத்திக்கு
- முக்கியமான பிரச்சினைகளை தெரிந்துகொள்ள
- கொள்கை தொடர்பான எமது தீர்மானங்களை தெரிவிக்க
- பங்குதாரர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு எமக்கு உதவ



## திறன்வாய்ந்த கொள்கை ஆலோசனைக்கான கோட்பாடுகள்

அவுஸ்திரேலியாவின் தன்னார்வத் தொண்டு நிறுவனமானது அவர்களின் கொள்கை உருவாக்கச் செயற்பாட்டிற்கு அங்கீகரித்த சில வழிகாட்டும் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. நிறுவனங்கள் தமது ஆலோசனை செயன்முறையை மிகவும் திட்டவட்டமாக வரையறுத்துக்கொள்ள இதுபோன்ற தெளிவான வழிகாட்டுதல்கள் உதவும்.

**ஆலோசனைகள் பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும்:**

**செயலூக்கமுள்ளதாக இருத்தல்** – புதிய பிரச்சினைகளை அடையாளம் காணவும், நிறுவப்பட்ட விடயத்தைப் பற்றிய அறிவை அதிகரிக்கவும் ஆலோசனை முயல்கிறது.

**கால வரையறைக்குட்பட்டது** – ஆலோசனை செயற்பாடு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் இடம்பெறும். இக்காலப்பகுதியில், பெறுபேறுகளில் செல்வாக்கு செலுத்துவதன் மூலம் நிறுவனங்கள் பெறுபேறுகளைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும். ஆலோசனை செயன்முறை பற்றிய தகவல்கள் சரியான நேரத்தில் மற்றும் தொழில்சார் ரீதியாக வழங்கப்படும்.

**தொடர்ச்சியாக செயற்படுகின்றமை** – எமது பங்குதாரர்களின் அறிவு மற்றும் அனுபவங்கள் மாறுகின்றன. ஆகவே கொள்கை குறித்த ஆலோசனைகள் தொடர்ந்து நடைபெறும்.

**அடையக்கூடியது** – எமது செயற்பாடுகள் நெறிப்படுத்தப்படுவதால், அவர்கள் எமது பங்குதாரர்களிடம் அதிக விடயங்களை கேட்பதில்லை.

**ஏற்றுக்கொள்ளல்** – ஆலோசனை செயற்பாட்டில் பங்கேற்பது உரிய முறையில் அங்கீகரிக்கப்படும்

**தொடர்புகொள்ளப்பட்டது** – கொள்கை செயற்பாடுகளின் பெறுபேறுகள் பற்றிய கருத்துகள் ஆலோசனை நடத்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.

### 2.3.3 ஆலோசனை செயன்முறையை ஒழுங்கமைப்பது எவ்வாறு?

தேவைக்கேற்றவாறு உங்களது சொந்த ஆலோசனை செயற்பாட்டை நீங்களே வடிவமைக்கலாம்

**நீண்ட கால அளவை உள்ளடக்கிய ஆலோசனை நடவடிக்கைகளை உருவாக்குதல் (ஒரு மாதம் வரை):**

- முக்கிய பிரச்சினைகள் குறித்த எழுத்துபூர்வ சமர்ப்பிப்புகளை வழங்குமாறு பங்குதாரர்களை கேட்டல்.
- சுருக்கமான கருத்துக் கணிப்பொன்றை நடத்துதல் (இந்த தகவல்களை பங்குதாரர்கள் நிர்வகிக்கக்கூடியதாக வைத்திருப்பதற்கு கருத்துக் கணிப்பின் அதிர்வெண்ணை கண்காணிக்கவும்).
- பிரச்சினைகளை ஆராயவும், கொள்கை ஏற்புத்தன்மையை உருவாக்கவும் பங்குதாரர்களிடையே ஆலோசனை குழுக்களை உருவாக்கவும்.

**விரைவான தீர்மானங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய ஆலோசனை செயற்பாட்டை உருவாக்குதல்:**

- கேள்விகளை கேட்க / முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை தெரிவுசெய்ய இணையவழி கருத்துக்கணிப்புகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள்



- ம்பந்தப்பட்ட பங்குதாரர்களை கண்டறிந்து, அவர்களுடன் தொலைபேசி ஊடாக கலந்தாலோசிக்கவும்
- பிரச்சினைகள் துறைசார்ந்ததாக இருக்கும் பட்சத்தில், இலக்கிடப்பட்ட முறையில் குறித்த துறைக்குள் பலவிதமான முன்னோக்குகளை நுணுக்கமாக ஆராயவும் – சிறிய அமைப்புகள், பெரிய (தேசிய ரீதியான அமைப்புகள் உள்ளடங்களாக) அமைப்புகள் மற்றும் பரப்புரை செயற்பாட்டை முன்னெடுக்கும் அமைப்புகள்.

இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மற்றும் பிரதான தகவல் வழங்குவோர் நேர்காணல்கள் போன்ற பாரிம்பரிய ஆலோசனை உத்திகளை ஆலோசனை செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளலாம்.

**இலக்குக் குழு கலந்துரையாடலை எவ்வாறு திட்டமிடுவது?**

ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி கலந்துரையாடுவதற்காக ஒரே மாதிரியான பின்னணி அல்லது அனுபவங்களைச் சேர்ந்தவர்களை ஒன்றாக இணைப்பது இலக்குக் குழு கலந்துரையாடலாகும். இது தரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் (qualitative research) ஒரு வடிவமாகும். இதில் உணர்வு மனப்பான்மை, நம்பிக்கைகள், கருத்துகள் அல்லது யோசனைகள் குறித்த கேள்விகள் கேட்கப்படும். இலக்குக் குழு கலந்துரையாடலில் பங்கேற்பாளர்கள், ஏனைய குழு உறுப்பினர்களுடன் சுதந்திரமாக கலந்துரையாடலாம். இது பொதுவாக ஒரு சிறிய குழுவினரை உள்ளடக்கியதாகும் (8 முதல் 12 பேர் வரை). பல்வேறு விருப்பத் தலைப்புகளின் கீழ் தளர்வான கட்டமைப்பில் இந்த கலந்துரையாடலை மதிப்பீட்டாளர் (நேர்காண்பவர்) ஒருவர் வழிநடத்துவார்.

மேலதிக தகவல்களை இங்கு பெறறுக்கொள்ளுங்கள்.

**பிரதான தகவல் வழங்குவோர் நேர்காணல்கள்**

விருப்பத் தலைப்புகளின் கீழ் முதல்நிலை தகவல்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட நபர்களின் தரமான, ஆழமான நேர்காணல்கள், பிரதான தகவல் வழங்குவோர் நேர்காணல் எனப்படுகின்றது.

மேலதிக தகவல்களை இங்கு பெற்றுக்கொள்ளுங்கள்.

## நிகழ்வு ஆய்வு 5

**ஆசியானின் மனித உரிமைகளுக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு (AICHR)**

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பினால் 2009இல் மனித உரிமைகளுக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு ஆசியாவின் மேலோட்டமான பிராந்திய மனித உரிமை நிறுவனமாக செயல்படும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இது ஒரு நல்ல ஆரம்பம் போல தோன்றினாலும் கூட, ஆசியான் உறுப்பு நாடுகள் இந்த ஆணைக்குழுவின் 10 பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதால் இந்த அமைப்பின் சுயாதீனத் தன்மைக் குறித்து சிவில் சமூக அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன. ஆசியான் நாடுகளின் அரசாங்கங்கள் ஒரு நடுநிலையான மற்றும் வெளிப்படையான தேர்வு பொறிமுறையை எதிர்க்கின்றன. இதன் விளைவாக, ஆசியான் பிரதிநிதிகள் தங்களைத் தேர்ந்தெடுத்த அரசாங்கத்திற்கு மட்டுமே பொறுப்புக்கூறினால் போதும் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்று நம்புகிறார்கள். இந்த நிலையில் இன்றுவரை ஆசியான் பிரதிநிதிகள் ஏனைய உறுப்பு நாடுகளின் இறையாண்மையில் தலையிட முடியாது என சாக்குபோக்குச் சொல்லி ரோஹிங்கியா நெருக்கடி மற்றும் பிலிப்பைன்ஸில் இடம்பெறும் நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற பிராந்தியத்தில் உள்ள மிக பாரதூரமான மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதைத் தவிர்த்து வருகின்றனர். மிக முக்கியமான மனித உரிமைப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதன் காரணமாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வினைத்திறனைக் குறைக்கிறது.

**குறிக்கோள்**: ஆசியாவில் மனித உரிமைகள் குறித்த பிரச்சினைகள்இ போதுமான அளவுக்கு அதன் பிராந்திய பொறிமுறையால் கவனிக்கப்படுவதை உறுதி செய்தல்.

**மூலோபாயம்** : AICHRஇன் சுயாதீனத்தன்மையை விரிவாக்குவதற்கு ஆசியான் நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் ஊடாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அர்த்தமுள்ள பங்கினை வகிப்பதும்.

**தந்திரோபாயம்** : பெங்கொக்கை தளமாகக் கொண்டு இயங்கும் உறுப்பினர் அடிப்படையிலான ஃபோரம் - ஏசியா (FORUM-ASIA) என்ற மனித உரிமைகள் அமைப்பானது, AICHR பிரதிநிதிகளின் சுயாதீனத்தன்மையை கணிப்பிடுவதற்கான உறுதியான குறிகாட்டிகளை உள்ளடக்கிய பிரதிநிதிகள் தேர்வு பொறிமுறையை உருவாக்குவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் கூட்டணியை ஏற்படுத்த உதவியது. இந்த சிவில் சமூக அமைப்புகளின் கூட்டணி பின்னர் ஆசியானின் வெளியுறவு அமைச்சுக்கள், ஆசியாவின் செயலகங்கள் மற்றும் ஆசியானின் அரசாங்கங்களுக்கு இடையிலான மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. இது இந்தோனேஷியா, மலேசியா மற்றும் தாய்லாந்தில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு மேலதிகமாக தொடர்புடைய வெளியுறவு அமைச்சுக்களுடன் தொடர்புகொண்டு, சுதந்திரமான தேர்வு பொறிமுறைக்கான அழைப்பை ஆதரிக்குமாறு அழுத்தம் கொடுத்தது. ஃபோரம் ஏசியா மற்றும் அதன் பங்காளிகள் மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான ஃபோரம் ஏசியாவின் வருடாந்த செயல்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்பாட்டு பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தன. இதில் மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகளின் பகிரங்க மற்றும் சுதந்திரமான தேர்வு செயல்முறைக்கான மீளுறுத்தப்பட்ட பரப்புரையும் அடங்கும் என்றாலும் இதை இந்தோனேசியா மட்டுமே அமுலாக்கியது.

**விளைவு** : மலேசியாவின் மறுசீரமைப்பு அலையையும், தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவில் நிலவிய ஊடக அழுத்தங்களையும் பயன்படுத்திக்கொண்டு, ஃபோரம் ஏசியா மற்றும் அதன் இணை அமைப்புகள், ஆணைக்குழுவுக்கான பிரதிநிதிகளை மிகவும் வெளிப்படையாகவும் மற்றும் சிவில் சமூகம் நோக்கியதுமான தேர்வு பொறிமுறையை நோக்கி ஆசியான் அரசாங்கங்களை வெற்றிகரமாக உந்தின. அவற்றின் முயற்சிகள் சில உறுதியான பெறுபேறுகளை அடைந்தன. தற்போதைய நிலைவரப்படி, 30 சதவீதமான ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இந்த வெளிப்படையான செயல்முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், சிவில் சமூக அமைப்புகளின் கரிசனைகளை சுயாதீனமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 2019ஆம் ஆண்டில், ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் ஆணைக்குழுவின் ஆய்வெல்லையை மீளாய்வு செய்து ரோஹிங்கியா நெருக்கடி குறித்து அவதானம் செலுத்தும் வகையில், அதன் பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்தினர். மனித உரிமைகள் ஆணைக்குழு இறுதியாக தமது ஆய்வெல்லையை மீளாய்வு செய்வதற்கான செயல்முறையை மேற்கொள்ள பத்து வருடங்கள் எடுத்தன. இதற்கு மேலதிகமாக, இந்தோனேஷியா மற்றும் மலேசியாவைச் சேர்ந்த ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் 2019இல் கருத்துச் சுதந்திரம் குறித்த பிராந்திய கலந்துரையாடலை ஒழுங்கமைக்க ஐ.நா பொறிமுறைகளுடன் ஆலோசித்து வருகின்றனர். இது இந்த பிரச்சாரத்திற்கு முந்திய காலப்பகுதியில் சாத்தியமற்ற ஒன்றாகும்.

**நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு**

பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வு ஆய்வை பயன்படுத்தவும். இந்த சந்தர்ப்பத்திற்கு சாத்தியதான பங்குதாரர்களை முதலில் அடையாளம் காணவும். அதன் பின்னர் கீழ்காணும் அளவுகோல்களின் பிரகாரம் பகுப்பாய்வு செய்யவும்.

1. அவர்களது நோக்கம் என்ன?
2. உங்கள் பணியில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் என்ன? அதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும்?
3. உங்கள் அமைப்பு பற்றிய அவர்களது நிலைப்பாடு என்ன?
4. கேள்விக்குரிய பிரச்சினை தொடர்பான அவர்களுடைய கருத்து என்ன?
5. உங்கள் பங்குதாரரின் கருத்தை யார் அல்லது எது பாதிக்கிறது?
6. அவர்கள் யார் மீது தாக்கம் செலுத்துகின்றனர்?
7. அவர்கள் உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் தகவல்கள் என்ன? எந்த முறையில் எந்த தகவலை வழங்க நீங்கள் தயாராக உள்ளீர்கள்?
8. ஒரு பங்குதாரர் சாதகமான கண்ணோட்டத்தை கொண்டிருந்தால், அவர்களின் நேரடி ஈடுபாட்டிற்கான விருப்பம் என்ன, அவர்கள் எவ்வாறான பங்கை வகிக்க வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கின்றனர்?
9. பங்குதாரர்கள் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருக்காவிட்டால், அவர்களது அந்த நிலைப்பாட்டை மாற்றியமைக்க நாம் என்ன செய்ய முடியும்?
10. அவர்களது நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியாவிட்டால், அவர்களை எவ்வாறு மாளிப்பீர்கள் மற்றும் எதிர்ப்பை குறைப்பீர்கள்?
11. உங்களது வாதத்திற்கு பங்குதாரர்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்?

# பிரிவு மூன்று

## வளங்களை நிர்வகித்தல்

## தொகுதி 1

### வளங்களின் வகைகள்

பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் பல்வேறு வகைப்படும். சில நிறுவனங்கள் முழுமையான பணியாளர்களை கொண்டிருக்கும் அதேவேளை, ஏனையவை முழுமையாக தன்னார்வ தொண்டர்களைக் கொண்டு இயங்குகின்றன. நிறுவனங்கள் எந்த வகையாக இருந்தாலும், வளங்களை திட்டமிட்டு முன்னுரிமை மற்றும் நடைமுறை சாத்தியமான இலக்குகளை கட்டமைப்பது அவசியமாகும். சிறந்த திட்டமிடல் மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை பின்பற்றுவதன் ஊடாக, பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடும் சிறிய நிறுவனங்கள்கூட நிதி மூலங்களை தேடுவதன் மூலமும் ஆதரவைப் பெறுவதன் மூலமும் திறன்மிக்கதாக அமையும்.

பரப்புரை செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வளங்களை பல்வேறு வகைகளாக பிரிக்கலாம்:

**ஊழியர்:** பெரும்பாலும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் மனித உழைப்பு அவசியமாகின்றது. உழைப்பு என்பது, உங்கள் நிறுவனத்திற்காக பணியாற்றும் சகலரையும் உள்ளடக்குகின்றது. அத்தோடு, தன்னார்வமாகவோ சம்பளம் பெற்றோ செய்யும் சகல தொழில்களையும் குறிக்கின்றது.

**நிர்வாகம்:** பல நிறுவனங்கள் சரியான வழிகாட்டுதல்கள் இன்றி சிறியளவிலான விடயங்களையே அடைந்துகொள்கின்றன. ஆகவே, நிர்வாகத் திறன்களும் செயற்படுத்தும் திறனும் இன்றியமையாத வளங்களாகும்.

**நிபுணத்துவம்:** ஒரு நிறுவனம் வெற்றிபெற உண்மையாகவே உதவ வேண்டுமாயின், தொழிலாளர் மற்றும் முகாமைத்துவம் என்பன நிபுணத்துவத்துடன் நிர்வகிக்கப்பட வேண்டும். உங்கள் தளம் மற்றும் நீங்கள் வெற்றிபெற உதவும் நடைமுறைகள் பற்றிய அறிவு அவசியம்..

**உபகரணங்கள்:** நிறுவனங்கள் தமது பணியை முன்னெடுப்பதற்கு தேவையான சிறப்புக் கருவிகள் அவசியம். அது சிறப்பு வன்பொருள், தனிப்பட்ட மென்பொருள் அல்லது ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய வடிவமைக்கப்பட்ட இயந்திரமாக இருக்கலாம்.

**நிதி:** ஒரு நிறுவனத்தின் நிதி அதன் ஏனைய பல்வேறு வளங்களைப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது. வருமான மூலங்களை பொறுத்தவரையில் உறுப்பினர்களின் நிதி, ஒதுக்கீடுகள் மற்றும் நிதியுதவிகள் போன்றவற்றை உள்ளடக்கலாம்.

**காலம்:** எந்தவொரு வியாபாரத்திலும் அதன் பெறுபேற்றை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, ஒவ்வொரு வியாபாரமும் காலத்தை ஒரு வளமாக கருதவேண்டும்.

உங்கள் சொந்த வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் வளங்களைப் பற்றி சிந்திக்கும்போது, அவை நாளாந்தம் மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக செயற்பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ள முயற்சியுங்கள்.





பயிற்சி

உங்கள் நிறுவனத்தில் காணப்படும் வளங்கள் என்ன? மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டியை பயன்படுத்தி ஒரு பட்டியலை தயாரிக்கவும்

## தொகுதி 2

### வள முகாமைத்துவ உத்திகள் மற்றும் நுட்பங்கள் : வருடாந்த திட்டத்தை கொண்டிருத்தல்

வள முகாமைத்துவத்தில் சில சவால்கள் காணப்பட்டாலும், இப்பிரச்சினைகளை சமாளிப்பதற்கான நுட்பங்களும் உத்திகளும் உள்ளன. அத்தோடு, இவை திறமையான வள ஒதுக்கீட்டை நோக்கி உங்களை வழிநடத்தும்.

வருடாந்த திட்டத்தை உருவாக்குவது இந்த நுட்பங்களில் ஒன்றாகும். முன்கூட்டியே எதிர்பார்க்கக்கூடிய நிகழ்வுகள் மற்றும் நடவடிக்கைகளைப் பற்றிய பதிவுப்புத்தகத்தை வைத்திருங்கள்.

- உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான செய்திமடல்கள் (வாராந்த, மாதாந்த)
- ஆண்டறிக்கைகள்
- குழுக் கூட்டங்கள்
- வருடாந்த உறுப்பினர் கூட்டங்கள்
- தன்னார்வலர்களை உள்ளீர்க்கும் செயற்பாடு
- மாநாட்டில் கலந்துகொள்கின்றமை
- ட்டமியற்றும் காலக்கெடு

• விளம்பர பிரச்சாரங்கள்

• நிதியளிப்பாளர்களின் அறிக்கை

• நிதி வழங்கல் செயற்பாடு

வருடம் முழுதும் இடம்பெறக்கூடிய செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளை பட்டியல்படுத்திக்கொண்டு, அதிக வளங்களால் பயன்பெறக்கூடியவை எவை மற்றும் போதுமான வளங்களைக் கொண்டிருப்பவை எவை என்று அவதானம் செலுத்துக. செயற்பாடுகள் பொருந்தும் போது ஒத்திசைவுப் புள்ளிகள் உள்ளனவா? அப்படியானால், செயற்பாடுகளை புறநீட்டம் செய்ய முடியுமா? அல்லது கடமைகளை மீளொதுக்க முடியுமா என்பதைக் கவனியுங்கள். ஒரு பயனுள்ள வருடாந்த திட்டமானது, காலக்கெடுவையும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான முன்மொழியப்பட்ட "உரிமையாளர்களையும்" கொண்டிருக்கும்.





## செயற்பாட்டுத் திட்டமொன்றின் உதாரணம்

| வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாடு | பொறுப்பாளர் | கருவி/படிவம் | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஓகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | மார்ச் | ஏப்ரல் | மே |
| செயற்திட்டத்திற்கான பங்குதார்களை அடையாளம் காணவும் | செயற்திட்ட உத்தியோகத்தர் | கூட்டங்கள் மற்றும் குழு கலந்துரையாடல்கள், பூர்வாங்க மதிப்பீடு | | | | | | | | | | | | | |
| அபாயங்களைப் பற்றிய மதிப்பீடு | விரிவாக்கல் தலைமையதிகாரி | இடர் மதிப்பீட்டு சரிபார்ப்பு பட்டியல் | | | | | | | | | | | | | |
| நிறுவனங்களின் விண்ணப்பங்கள் | செயற்திட்ட உத்தியோகத்தர் | கையொப்பத்துடன் கூடிய விண்ணப்பம் | | | | | | | | | | | | | |
| நிறுவனங்களின் ஒப்பந்தம் | நிதியியல் உத்தியோகத்தர் | ஒப்பந்தம், உள்ளக விதிமுறைகள் | | | | | | | | | | | | | |

## தொகுதி 3

### 3.3.1 வளங்களை திட்டமிடுதல்

குறிக்கோள்கள் பற்றிய கால அட்டவணையை உருவாக்குமாறு முதலாவது பிரிவில் நாம் குறிப்பிட்டிருந்தோம். உத்தேச கால வரையறை பின்வருமாறு அமையலாம் என நாம் குறிப்பிட்டிருந்தோம்:

- நீண்ட கால நோக்கங்கள் 3-5 வருடங்களில் நிறைவேற்றப்படும்
- இடைக்கால நோக்கங்கள் 1-2 வருடங்களில் நிறைவேற்றப்படும்
- குறுகிய கால நோக்கங்கள் 6 மாதங்கள் தொடக்கம் 1 வருட காலத்திற்குள் நிறைவேற்றப்படும்



வளங்கள் யதார்த்தமான முறையில் ஒதுக்கப்படாத காரணத்தால், செயற்பாட்டு காலப்பகுதியிலேயே பல மூலோபாயங்கள் தோல்வியடைகின்றன. உங்கள் மூலோபாயத்தை செயற்படுத்துவதில், ஒவ்வொரு குறிக்கோளையும் எடுத்து, இலக்கை அடைய என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் கவனியுங்கள். பின்வரும் கேள்விகளை கேளுங்கள்:

என்ன செய்ய வேண்டும்?
தேவையான வளங்கள் என்ன?
நபர்கள்
தொழிநுட்பம்
- எவ்வளவு நேரம்
நிதி
அலுவலகத்திற்கான இடவசதி
பயிற்சி
உதவி (தலைமைத்துவம் அல்லது ஏனையவை)
ஒவ்வொரு விடயத்திற்கும் பொறுப்பேற்கக்கூடிய நபர் யார்?
செயற்பாடு எப்போது பூர்த்தியடையும்?



**உதவிக்குறிப்பு**


- ஒவ்வொரு செயலுக்கும் பொறுப்பேற்கக்கூடிய ஒருவர் உள்ளார் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அனைவரும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என குறிப்பிட்டால், யாருமே பொறுப்புக்கூற மாட்டார்கள் என நீங்கள் நிச்சயமாக குறிப்பிடலாம்.
- செயற்திட்டத்தை உருவாக்கி வளங்களை வழங்கும்போது வேலையைச் செய்வதற்குப் பொறுப்பானவர்களை நீங்கள் ஈடுபடுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மக்களை உள்வாங்கும்போது, செயற்பாடுகள் வெற்றிபெறும் சாத்தியக்கூறுகள் அதிகம்
- பணிகளை இலகுவானதாகவும் அடையக்கூடியதாகவும் வைத்திருங்கள். பேராவலுடையதாகவும் ஆரம்பத்திலேயே தோல்வியை தழுவுவதும், உங்களை நிலைகுலையச் செய்வதோடு, உங்களது மூலோபாயத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். சிறிதாக ஆரம்பித்து வெற்றிக்கனியை

### 3.3.2 ஆபத்து நிலைமைகளை கையாளுதல்

செயற்பாட்டுக் காலப்பகுதியில் ஏற்படும் எதிர்பாராத சம்பவங்கள், வளங்களை நிர்வகிப்பதில் சவால்களை ஏற்படுத்தலாம். திட்டமிடல்களை மேற்கொள்ளும் காலகட்டத்தில், சாத்தியமான அபாயங்களை கருத்திற்கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இவற்றை தணிக்க முடியும். சில விடயங்கள் உங்கள் கட்டுப்பாட்டிற்கு உட்படாதவை. (அரசாங்க சட்டவாக்கம் அல்லது உலகளாவிய தொற்றுநோய்) ஆனால் பணியாளர்கள் வராமை அல்லது அதிகரித்த செலவுகள் போன்ற விடயங்களை கையாள முடியும். குறிப்பாக உங்கள் மூலோபாயத்தின் வெற்றிக்கு முக்கியமான நோக்கங்களுக்காக, குறைந்தபட்சம் நீங்கள் எவ்வாறான சாத்தியமான அனுமானங்களை முன்வைக்கலாம் என கலந்துரையாடுவது சிறந்தது.

**பயன்படுத்துவதற்கான ஒரு கருவி**

இடர் மதிப்பீடு என்பது ஒரு செயல்பாடு, திட்டம் அல்லது வணிகத்திற்கான ஏற்படக்கூடிய அபாயங்களை முறையாக மதிப்பீடு செய்வதாகும். அபாயங்கள் கண்டறியப்பட்டு, அவை நிகழக்கூடிய தன்மை (சாத்தியப்பாட்டின் அடிப்படையில்) மற்றும் அவற்றின் விளைவுகளின் தீவிரத்தன்மை (தாக்கம்) ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கான முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இடர் மதிப்பீட்டு நடவடிக்கை, இடர் பகுப்பாய்வு அல்லது இடர் வரைவு என குறிப்பிடப்படுகின்றது. இடர் மதிப்பீடுகள், பிரச்சாரத்தை பாதிக்கக்கூடிய அபாயங்கள், பாதிப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி, ஒரு நிறுவனமானது, செலவுகள் மற்றும் ஆபத்துக் குறைப்பு மற்றும் கட்டுப்பாட்டு மூலோபாய எத்தனிப்புகளை முன்னுரிமைப்படுத்தலாம்.



## நிகழ்வு ஆய்வு
## பகுப்பாய்வு

முன்னர் நாம் பார்த்த நிகழ்வு ஆய்விற்குச் செல்வோம். இந்த பிரச்சாரம் பற்றிய ஆபத்துநிலை மதிப்பீட்டை மேற்கொள்ள முடியுமா?

**ஆசியானின் மனித உரிமைகளுக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு (AICHR)**

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பினால் 2009இல் மனித உரிமைகளுக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு ஆசியாவின் மேலோட்டமான பிராந்திய மனித உரிமை நிறுவனமாக செயல்படும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இது ஒரு நல்ல ஆரம்பம் போல தோன்றினாலும் கூட, ஆசியான் உறுப்பு நாடுகள் இந்த ஆணைக்குழுவின் 10 பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதால் இந்த அமைப்பின் சுயாதீனத் தன்மைக் குறித்து சிவில் சமூக அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன. ஆசியான் நாடுகளின் அரசாங்கங்கள் ஒரு நடுநிலையான மற்றும் வெளிப்படையான தேர்வு பொறிமுறையை எதிர்க்கின்றன. இதன் விளைவாக, ஆசியான் பிரதிநிதிகள் தங்களைத் தேர்ந்தெடுத்த அரசாங்கத்திற்கு மட்டுமே பொறுப்புக்கூறினால் போதும் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்று நம்புகிறார்கள். இந்த நிலையில் இன்றுவரை ஆசியான் பிரதிநிதிகள் ஏனைய உறுப்பு நாடுகளின் இறையாண்மையில் தலையிட முடியாது என சாக்குபோக்குச் சொல்லி ரோஹிங்கியா நெருக்கடி மற்றும் பிலிப்பைன்ஸில் இடம்பெறும் நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற பிராந்தியத்தில் உள்ள மிக பாரதூரமான மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதைத் தவிர்த்து வருகின்றனர். மிக முக்கியமான மனித உரிமைப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதன் காரணமாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வினைத்திறனைக் குறைக்கிறது.

**குறிக்கோள்** : ஆசியாவில் மனித உரிமைகள் குறித்த பிரச்சினைகள், போதுமான அளவுக்கு அதன் பிராந்திய பொறிமுறையால் கவனிக்கப்படுவதை உறுதி செய்தல்.

**மூலோபாயம்** : AICHRஇன் சுயாதீனத்தன்மையை விரிவாக்குவதற்கு ஆசியான் நாடுகளுக்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் ஊடாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அர்த்தமுள்ள பங்கினை வகிப்பதும்.

**தந்திரோபாயம்** : பெங்கொக்கை தளமாகக் கொண்டு இயங்கும் உறுப்பினர் அடிப்படையிலான ஃபோரம் - ஏசியா (FORUM-ASIA) என்ற மனித உரிமைகள் அமைப்பானது, AICHR பிரதிநிதிகளின் சுயாதீனத்தன்மையை கணிப்பிடுவதற்கான உறுதியான குறிகாட்டிகளை உள்ளடக்கிய பிரதிநிதிகள் தேர்வு பொறிமுறையை உருவாக்குவதற்கான சிவில் சமூக அமைப்புகளின் கூட்டணியை ஏற்படுத்த உதவியது. இந்த சிவில் சமூக அமைப்புகளின் கூட்டணி பின்னர் ஆசியானின் வெளியுறவு அமைச்சுக்கள், ஆசியாவின் செயலகங்கள் மற்றும் ஆசியானின் அரசாங்கங்களுக்கு இடையிலான மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. இது இந்தோனேஷியா, மலேசியா மற்றும் தாய்லாந்தில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு மேலதிகமாக தொடர்புடைய வெளியுறவு அமைச்சுக்களுடன் தொடர்புகொண்டு, சுதந்திரமான தேர்வு பொறிமுறைக்கான அழைப்பை ஆதரிக்குமாறு அழுத்தம் கொடுத்தது. ஃபோரம் ஏசியா மற்றும் அதன் பங்காளிகள் மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான ஃபோரம் ஏசியாவின் வருடாந்த செயல்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்பாட்டு பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தன. இதில் மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகளின் பகிரங்க மற்றும் சுதந்திரமான தேர்வு செயல்முறைக்கான மீளுறுத்தப்பட்ட பரப்புரையும் அடங்கும் என்றாலும் இதை இந்தோனேசியா மட்டுமே அமுலாக்கியது

**விளைவு** : மலேசியாவின் மறுசீரமைப்பு அலையையும், தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவில் நிலவிய ஊடக அழுத்தங்களையும் பயன்படுத்திக்கொண்டு, ஃபோரம் ஏசியா மற்றும் அதன் இணை அமைப்புகள், ஆணைக்குழுவுக்கான பிரதிநிதிகளை மிகவும் வெளிப்படையாகவும் மற்றும் சிவில் சமூகம் நோக்கியதுமான தேர்வு பொறிமுறையை நோக்கி ஆசியான் அரசாங்கங்களை வெற்றிகரமாக உந்தின. அவற்றின் முயற்சிகள் சில உறுதியான பெறுபேறுகளை அடைந்தன. தற்போதைய நிலைவரப்படி, 30 சதவீதமான ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் இந்த வெளிப்படையான செயல்முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், சிவில் சமூக அமைப்புகளின் கரிசனைகளை சுயாதீனமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 2019ஆம் ஆண்டில், ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் ஆணைக்குழுவின் ஆய்வெல்லையை மீளாய்வு செய்து ரோஹிங்கியா நெருக்கடி குறித்து அவதானம் செலுத்தும் வகையில், அதன் பாதுகாப்பு பொறிமுறையை வலுப்படுத்தினர். மனித உரிமைகள் ஆணைக்குழு இறுதியாக தமது ஆய்வெல்லையை மீளாய்வு செய்வதற்கான செயல்முறையை மேற்கொள்ள பத்து வருடங்கள் எடுத்தன. இதற்கு மேலதிகமாக, இந்தோனேஷியா மற்றும் மலேசியாவைச் சேர்ந்த ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் 2019இல் கருத்துச் சுதந்திரம் குறித்த பிராந்திய கலந்துரையாடலை ஒழுங்கமைக்க ஐ.நா பொறிமுறைகளுடன் ஆலோசித்து வருகின்றனர். இது இந்த பிரச்சாரத்திற்கு முந்திய காலப்பகுதியில் சாத்தியமற்ற ஒன்றாகும்.

## 3.3.3 மதிப்பீடு மற்றும் எதிர்வுகூறல்

பிரிவு ஒன்றில் மதிப்பீடு என்பது அமுலாக்களின் பெரும்பகுதி என்று எம்மால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஒரு சிறந்த நிகழாய்வு குறிப்பானது, மதிப்பீடு மற்றும் எதிர்வுகூறலாகும். திறமையான வள ஒதுக்கீட்டிற்கு, வழங்கப்பட்ட வளங்களில் எவ்வளவு தேவைப்படும் என்பதை முகாமையாளர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும். உதாரணமாக பணியாளர்களால் வழங்கப்படும் வேலை நாட்களின் எண்ணிக்கையை சொல்லலாம். எவ்வாறாயினும், இந்த வகையான அறிவு, வேலைத்திட்டம் முடிந்த பின்னர் மட்டுமே கிடைக்கும்.


எனவேதான், தேவைப்படும் வளத்தின் அளவை மதிப்பிடுவதும், பயன்படுத்தப்பட்ட உண்மையான வளத்தைக் கண்காணிப்பதும் சிறந்த நடைமுறையாகும். இதனை ஒரு சாதாரண விரிதாளைப் பயன்படுத்தி, வாரந்தோறும் அல்லது மாதாந்தம் வளங்களைக் கண்காணிப்பதன் ஊடாக மேற்கொள்ளலாம். இவ்வாறான வழியில் செயற்படுவது பல நன்மைகளை வழங்குகின்றது.

- உண்மையில் என்ன வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள இது உதவும்.
- செயற்பாட்டை வேறு வழியில் கொண்டு செல்ல முடியுமா என்பது பற்றிய கலந்துரையாடலுக்கு வழிவகுக்கும்.
- அடுத்த முறை மிகவும் துல்லியமாக கணிப்பீடு செய்ய இது உதவும்.
- நிதியளிப்பவர்களுடனான கலந்துரையாடலின்போது செயற்திட்டங்களுக்கான வளங்கள் எப்படி கிடைத்ததென அவர்கள் கேள்வியெழுப்பினால், ஒரு காத்திரமான கலந்துரையாடலுக்கு வழிவகுக்கும்.

### வள ஒதுக்கீடு பட்டியல் பற்றிய உதாரணம்

| வளம் | Project | 01 Jan | 02 Jan | 03 Jan | 04 Jan | 05 Jan | 06 Jan | 07 Jan | 08 Jan | 09 Jan |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சி அதிகாரி 01 | Project A | √ | | | √ | √ | √ | | | |
| | Project B | | | | | | | | | |
| | Project C | | | | | | | | | |
| | Project D | | | | | | | | | |
| | Project E | | | | | | | | | |
| நிகழ்ச்சி அதிகாரி 02 | Project A | | | | | | | | | |
| | Project B | √ | | | √ | √ | √ | √ | √ | |
| | Project C | | | | | | | | | |
| | Project D | | | | | | | | | |
| | Project E | | | | | | | | | |
| நிகழ்ச்சி அதிகாரி 03 | Project A | | | | | | √ | √ | | |
| | Project B | | | | | | | | | |
| | Project C | | | | | | | | | |
| | Project D | | | | | | | | | |
| | Project E | | | | | | | | | |
| நிகழ்ச்சி அதிகாரி 04 | Project A | | | | | | | | | |
| | Project B | | | | | | | | | |
| | Project C | | | | | | | | | |
| | Project D | √ | | | √ | √ | √ | √ | √ | |
| | Project E | | | | | | | | | |
| நிகழ்ச்சி அதிகாரி 05 | Project A | | | | | | | | | |
| | Project B | | | | | | | | | |
| | Project C | | | | | | | | | |
| | Project D | | | | | | | | | |





## 3.4.1 நிதி திரட்டுதல்

பரப்புரை செயற்பாட்டை முன்னெடுக்கும் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவை பாரம்பரியாக, தனிநபராக இருந்தாலும் நிறுவனங்களாக இருந்தாலும் பெரும்பாலும் உறுப்பினர்களின் பங்களிப்புகளிலேயே தங்கியுள்ளன. நிதியளிப்பவர்களின் பங்களிப்பினால் சில நிறுவனங்கள் நன்மையடைகின்றன. நிதியளிப்பவர்களைப் பொறுத்தவரை சர்வதேச, பிராந்திய மற்றும் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் அறக்கட்டளைகள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் உட்பட அரச நிறுவனங்கள் என்பன இதில் உள்ளடங்கலாம். சில அரச சாரா நிறுவனங்கள், அரச நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுகின்றன. ஆகவே, நீங்கள் ஒரு இடைத்தரகர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

அண்மைய வருடங்களில் ஏனைய சில நிதி பங்களிப்புகளும் வெளிவந்துள்ளன. அவையாவன:



- நிகழ்வுகள் மற்றும் செய்தி மடல்களின் வர்த்தக அனுசரணை
- ஒன்லைன் விளம்பரம்
- GoFundMe மற்றும் KickStarter போன்ற ஒன்லைன் தளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் நிதிதிரட்டும் செயற்பாடு
- நன்கொடைகள் - நேரடியாகவோ அல்லது Patreon போன்ற தளங்கள் மூலமாகவோ நிர்வகிக்கப்படும். புலம்பெயர் தேசங்களிலுள்ள உதவியாளர்களுடன் இணைய இது வழிகாட்டியாக அமையும்.
- ஆடை, பைகள் மற்றும் எழுதுகருவிகள் போன்ற வர்த்தகப் பொருட்கள்.

ூல நிறுவனங்கள் பகுதிநேரமாக அல்லது சுயாதீன அடிப்படையில் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர்களை பணிக்கமர்த்துகின்றன. அவர்கள் தமக்குரிய இலக்கை அடைகின்ற சந்தர்ப்பத்தில், அதில் ஒரு பகுதியை சம்பளமாக பெறுகின்றனர். இவர்களில் சிலருக்கு நன்கொடையாளர்கள் நிதியளிக்கலாம். காரணம், நிறுவனங்கள் சுயமாக நிலைத்திருப்பதற்கு நிதியளிக்கவே அவர்கள் அதிகமாக விரும்புகின்றனர்.

## 3.4.2 நிதியுதவிக்கு விண்ணப்பித்தல்

ஊடக பரப்புரை செயற்பாட்டு நிறுவனங்கள் நிதியுதவிகள் மூலம் அதிக நன்மையடையலாம். நன்கொடையாளர் நிதிகளின் கிடைக்கும் தன்மை பிராந்தியத்திற்கு பிராந்தியம் மற்றும் நாட்டிற்கு நாடு வேறுபடும். சில நிதியளிப்பாளர்கள் குறிப்பிட்ட பிராந்தியங்களில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றனர். (உதாரணம் - சோவியற்றிற்கு பின்னரான பிராந்தியங்கள்) அல்லது குறிப்பிட்ட விடயதானங்களை கொண்டிருக்கின்றனர். (போலிச்செய்திகளுக்கு எதிராக செயற்படுதல் அல்லது சிவில் சமூகத்தை கட்டியெழுப்புதல்)

அநேகமான விண்ணப்பங்களில் நீங்கள் ஒரு “கருத்துக் குறிப்பை” (Concept note) பூர்த்திசெய்வது அவசியமாகும். உதவி தேவைப்படுவதற்கான அவசியம், நிதியளிக்கப்படும் விடயதானங்கள் மற்றும் எதர்பார்க்கப்படும் பெறுபேறுகள் போன்ற விடயங்கள் இதில் கேட்கப்படும்.

துன்புறுத்தல்களுக்கு எதிரான கொள்கைகள் அல்லது பணமோசடியை தடுக்கும் நடைமுறைகள் போன்வற்றை சில நிதியளிப்பவர்கள் உங்களிடம் கேட்கலாம். பொதுவாக

எவ்வாறான தகவல்களை கோருகின்றனர் என்பதை புரிந்துகொண்டு, இந்த கொள்கைகளை உருவாக்குவது சிறந்தது. நிதி வழங்குவோரும் சில சந்தர்ப்பங்களில் உங்களுக்குத் தேவையான கொள்கைகளை உருவாக்க உதவுவார்கள்.

### 3.4.3 நிதி நிர்வாகம்

முறையான நிதி வள நிர்வாகம் சில சந்தர்ப்பங்களில் ஒரு ஊடக பரப்புரை நிறுவனத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலான வித்தியாசமாக இருக்கலாம்.

## அடிக்கடி வினவப்படும் வினாக்கள்

| | |
|---|---|
| கிடைக்கப்பெறும் நிதியுதவியின் வகைகள் | • தீர்மானிக்கப்பட்ட நிலையான தொகை - முன்னதாக தீர்மானிக்கப்பட்ட நிதியொதுக்கீடானது கட்டம் கட்டமாக மற்றும் தொடர்புடைய வழங்கல்கள் அடிப்படையில் பிரிக்கப்படும். செயற்பாடுகள் நிறைவடைந்து, கோரப்பட்ட ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே நிதி வழங்கப்படும்<br>• இலகு நிதி - இந்த கொடுப்பனவின் கீழ், செயற்பாடுகளுக்கு ஏற்பட செலவீனங்கள் பட்டியல்படுத்தப்படுகின்றன. அத்தோடு, நிதியுதவியை பெற்றுக்கொள்ள, ரசீதுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை நிதி பெறுபவர் சமர்ப்பிக்க வேண்டும்.<br>• அடிப்படை நிதியுதவியாக இருக்கும்போது இலகு நிதி மிகவும் பொருத்தமானது. அடையக்கூடிய விடயங்களை எளிதாக அடையாளம் காணக்கூடிய வகையில் அமையும் செயற்றிட்டங்களுக்கு, தீர்மானிக்கப்பட்ட நிலையான தொகை பொருத்தமானதாக அமையும். |
| நிதியுதவிகள் பற்றி அறிந்துகொள்வது எவ்வாறு? | தாம் நிதியளிக்கும் செயற்திட்டங்களுக்காக ஏனைய கூட்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் நிதி வழங்கும் நிறுவனங்கள், அவை தொடர்பான விளம்பரங்களை பத்திரிகைகள் மற்றும் சம்பந்தப்பட்ட வலைத்தளங்களில் விளம்பரம் செய்கின்றன. |
| நிதியளிப்பவர்கள் உங்களது விண்ணப்பத்தில் எதிர்பார்க்கும் விடயம் என்ன? | நிதியுதவியை பெற்றுக்கொள்பவர் கொண்டுள்ள அந்தஸ்து அல்லது நற்பெயர், அவர்களின் கடந்தகால செயற்பாடுகள், உருவாகிய முறை, நிறுவனத்தின் பணியாளர்கள், விண்ணப்பத்தில் பிரச்சினையை அறிக்கை செய்திருக்கும் விதம், செயற்பாடுகளின் சாத்தியக்கூறுகள், கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றியின் விகிதம் மற்றும் நிதியொதுக்கீடு என்பவற்றை கவனத்திற்கொள்வார்கள். |

| | |
|---|---|
| வழமையான செயன்முறை என்ன? | • விண்ணப்பங்களுக்கான கோரிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில், விண்ணப்பங்கள் யாவும் ஒரு குழுவினரால் மதிப்பீடு செய்யப்படும்.<br>• குறித்த குழுவினரின் மதிப்பீடுகளின் பிரகாரம் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்படும்.<br>• விண்ணப்பத்தை ஒரு திட்ட முன்மொழிவாக மாற்றவும் ஒத்திசைவான நிதியொதுக்கீட்டை மேற்கொள்ளவும் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.<br>• உரிய பரிசீலனைகளை மேற்கொண்டு விண்ணப்பதாரரிடமிருந்து தகவல்கள் பெறப்படும்.<br>• பரிசீலனையின் போது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நிதியளிப்பிற்கு முன்னரான கணக்காய்வு நடத்தப்படுகின்றது.<br>• விண்ணப்பதாரர் சமர்ப்பித்த முன்மொழிவு மற்றும் நிதியொதுக்கீட்டின் அடிப்படையில், திட்டச் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் மற்றும் நிதியொதுக்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.<br>• ஒப்பந்தம் இறுதிசெய்யப்படும். |
| வழமையான செயன்முறை என்ன? | • பிரச்சினை அறிக்கையை குறிப்பிடாமை : பிரச்சினை தொடர்பான அறிக்கையை விண்ணப்பத்தில் குறிப்பிடும்போது, அதனை கையாளும் நடைமுறை சாத்தியமான தீர்வை நேரடியாக குறிப்பிட வேண்டும்.<br>• நடைமுறை சாத்தியமற்ற செயற்பாடுகள் மற்றும் இலக்குகள்: குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் செயற்பாடுகள் மற்றும் இலக்குகள் யதார்த்தமானதாகவும் அடையக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.<br>• யதார்த்தமற்ற நிதியொதுக்கீடு : நிதியொதுக்கீடு யதார்த்தமாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும். |

**உதவிக்குறிப்பு:**

நன்கொடையாளர் நிதியளிப்பானது மீளாய்வுக்கு உட்பட்டது என்பதை நினைவிற்கொள்க. உதாரணமாக, வெளிநாட்டு உதவி செலவீனங்கள், ஏற்றுக்கொள்ளும் தன்மை, அரசாங்கங்களால் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட நாட்டின் ஊடகங்கள் மற்றும் குடிமக்கள் கரிசனை கொண்டது. (எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது வரிகளே நிதியாக வழங்கப்படுகின்றன). அதாவது, நிதியை பெற்றுக்கொள்பவர்கள் இழையளவும் நெறி தவறாத மற்றும் வெளிப்படைத்தன்மையை கொண்டிருக்க வேண்டுமென நிதிவழங்குவோர் எதிர்பார்க்கின்றனர். இவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்:

- வழமையான அறிக்கைகள் (பொதுவாக மாதாந்தம்)
- இலக்குகளை அடைதல் (உங்களது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கக்கூடிய விடயங்களை கொண்டமையும்)
- உங்கள் ஒப்பந்தத்தில் முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு நிதியொதுக்கீடு செய்யப்படுவதை உறுதிசெய்தல். உதாரணமாக, நன்கொடையாளர் நிதியளிக்கும் திட்டத்திற்கு ஊழியர் ஒருவர் நியமிக்கப்படுகின்றார் என வைத்துக்கொள்வோம். அந்த ஊழியர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டால், நீங்கள் ஒப்பந்தத்தை மீறி செயற்படுகின்றீர்கள் என பொருளாகும்.

நிதி முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பான விடயங்களை, உங்களிடமிருந்து நிதி வழங்குவோர் எதிர்பார்க்கின்றனர். உதாரணமாக:

- உங்கள் நிறுவனத்தில் பொருளாளர் போன்ற பதவிகளுக்கு நபர்களை நியமித்துள்ளமை
- வர்த்தக நடவடிக்கைகளுக்கான வங்கிக் கணக்கை கொண்டிருத்தல்

- நிறுவன மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் வருமானம் மற்றும் செலவீனங்களைக் கண்காணித்தல்
- வழமையான சுயாதீன கணக்காய்வுக்கான அறிக்கைகளை தயாரித்தல்

## தொகுதி - 5

## தன்னார்வ தொண்டாளர்களை சேர்த்துக்கொள்ளுதல்

பல நிறுவனங்கள் தங்களது பெரும்பாலான நடவடிக்கைகளுக்காக, தன்னார்வத் தொண்டர்களையே சார்ந்துள்ளன. தான் சேவை செய்யும் சமூகத்துடன் தொடர்புடையதாக இருக்கும் பொருட்டு அவை பல தன்னார்வத் தொண்டர்களை இணைத்துக் கொள்வது மட்டுமல்லாது தனது நேரத்தையும் திறம்பட உபயோகிக்கின்றன. இதன்போது பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுபான்மை குழுக்கள் என பலதரப்பட்ட ஆதரவாளர்களை இணைத்துக் கொள்கின்றமையை உறுதி செய்தல் அவசியம்.

***மக்கள் ஏன் தன்னார்வத் தொண்டில் ஈடுபடுகின்றனர்?*** அவர்கள் குறிப்பிட்ட சில காரணம் குறித்து மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பதோடு அது தொடர்பில் அவர்களது நேரத்தை செலவிடுவதில் விருப்பம் உள்ளவர்களாக இருத்தல். அல்லது புதிய திறன்களை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுதல் மற்றும் தனது தொழிலில் முன்னேறிச் செல்லத்தக்க அனுபவத்தை பெறும் நோக்கில் செயற்படுதல்.

தன்னார்வத் தொண்டர்களின் பங்கு தொடர்பில் கருத்திற் கொள்வோம் : சந்தைப்படுத்தல் குறித்த அறிவுள்ள ஒருவர், சமூக வலைத்தளம் சார்ந்த அறிவுடையவர், கிராபிக் வடிவமைப்பு செய்பவர், வணிக மேம்பாட்டு நிபுணர் அல்லது திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவர் தேவைப்படுகின்றனரா? அவ்வாறெனில் அவர்களது தொழில் பங்கு தொடர்பில் ஒரு சிறிய விளக்கத்தை எழுதுங்கள். பின்னர் ஆட்சேர்ப்பு தொடர்பான மூலோபாயத் திட்டத்தை உருவாக்குங்கள்.

தன்னார்வ தொண்டாளர்களை சேர்த்துக்கொள்ளும் முறைகள்:



- கல்வி நிறுவனங்களில்
- உங்கள் இணையதளம் மற்றும் சமூக ஊடக தளங்கள் (படைப்புத்திறன் கொண்டவராக இருங்கள்!)
- உள்ளூர் பத்திரிகைகள் அல்லது வானொலி நிலையங்களில் பதிவுசெய்யப்படும் விவரணங்கள் மற்றும் நேர்காணல்கள்
- மூக நிகழ்வுகள் மற்றும் திருவிழாக்களில் விற்பனை நிலையங்களைப் போன்ற சிறு நிலையங்களை அமைத்தல்
- உள்ளூரிலுள்ள கடைகள், கலை நிலையங்கள் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் மற்றும் பதாதைகளை வைத்தல்
- மூக குழுக்களை சந்தித்து பேசுதல்

## எதிர்பார்ப்புக்களை கட்டமைத்தல்

வேலை நேரம், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் ஏனைய பணியாளர்களை அறிமுகப்படுத்தல் போன்ற நடைமுறைகளை செயற்படுத்தல். இதன் மூலம் தாமும் அந்தக் குழுவின் அங்கத்தவர்கள் எனும் மனநிலையை அவர்கள் பெறுவர். தன்னார்வ பணியாளர் ஒருவரிடமிருந்து வேறு என்ன விடயங்களை எதிர்பார்க்கலாம்?

- இரகசியத்தன்மையை பாதுகாத்தல், பாதுகாப்பு, உள்ளடங்கல் மற்றும் துன்புறுத்தலுக்கு எதிரான செயற்பாடு போன்ற உங்களது கொள்கைகளை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

- அவர்கள் உங்கள் நிறுவனத்தை சரியான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள், ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களை மதிக்கின்றனர்.

சில நிறுவனங்கள் கையொப்பமிடப்பட்ட தன்னார்வ ஒப்பந்தத்தில் எளிமையான, பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் பொறுப்புகளின் தொகுப்பைக் கொண்டுள்ளன.

- உங்களிடமிருந்து தன்னார்வலர்கள் எதனை எதிர்பார்க்கலாம்?
- பயிற்சி மற்றும் உதவிக்கான வாய்ப்புகள்
- கருத்து மற்றும் வழிகாட்டுதல்
- நன்றி!



**உதவிக்குறிப்பு**

நீங்கள் பணம் கொடுக்கின்றீர்கள் என்பதற்காக அன்றி, உண்மையாகவே அவர்கள் பணியில் ஈடுபடவேண்டும் என்பதற்காகவே தன்னார்வ பணியாளர்கள் உள்ளனர் என்பதை நினைவிற்கொள்க. தமது நேரத்தை அர்ப்பணிப்பவர்களுடன் பழகும்போது உளம்சார்ந்த ஒப்பந்தம் மிக முக்கியமானது. அந்த நேரத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக்கொள்வதோடு, அவர்களுக்கு நன்றி தெரிவிக்க மறக்காதீர்கள்.

## தொகுதி 6

### அறிக்கையிடல் மற்றும் மதிப்பீடு

பரப்புரை திட்டமிடல் சுழற்சியில் நாம் கலந்துரையாடியதன் பிரகாரம், உங்கள் பிரச்சாரத்தின் செயற்திறனை மதிப்பீடு செய்யவும், தேவையேற்படும் பட்சத்தில் உங்களது அணுகுமுறையை பரிசீலிக்கவும் தரவு சேகரிப்பு உதவியாக இருக்கும். சேகரிக்கவேண்டிய தகவல்களின் வகை தொடர்பான வழிகாட்டுதல்களை பல பிரச்சாரங்கள் ஏற்படுத்துகின்றன. அத்தோடு, தமது சொந்த தகவல்களை வழங்குமாறு பரப்புரை செயற்பாட்டாளர்கள் / ஊழியர்களிடம் கோரப்படுகின்றது. நீங்கள் சேகரிக்கவேண்டிய தகவல்கள் வருமாறு-

- முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் விபரம் (உள்நுழைவு படிவங்கள், கூட்டறிக்கைகள் போன்றவை.)
- செயற்பாட்டின் தாக்கத்தை அளவிடுதல்: இதனால் நீங்கள் பெற்றுக்கொண்ட மாற்றம் என்ன? (செயற்பாட்டிற்கு முன்னரான/பின்னரான கேள்விக்கொத்து, அடிப்படை ஆய்வுகள் போன்றன)
- வெற்றிக்கதைகள் தொடர்பான ஆய்வு (தரமான, நிகழ்வு சான்றுகள்)
- செயற்படாத விடயம் என்ன மற்றும் அதற்கான காரணம் என்ன? (பகுப்பாய்வு)
- செயற்பாடுகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை கண்காணித்தல். உதாரணமாக, புதிய கொள்கையொன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால், அது எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது, ஆரம்ப நிலையில் எந்தளவுக்கு சிறப்பாக செயற்படுகின்றது? என்பதை கண்காணித்தல் (செயற்படுத்தப்பட்ட முயற்சிகளை பின்தொடர்ந்து அவதானியுங்கள், கருத்துக்களை பெற்றுக்கொள்ளுங்கள்)
    - எதிர்காலத்தில் பயனுள்ளதாக அமையும் தொடர்புகள் மற்றும் பங்குடைமை. (வலையமைப்பு)



பதிவுகளை மேற்கொள்வதற்கு பொறுப்பானவர்கள், களத்திலிருந்து தரவைச் சேகரித்து பாதுகாப்பான முறையில் சேமித்து, அது பயன்படுத்தக்கூடிய வடிவத்தில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இது நிர்வாக மற்றும் செயற்பாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு உள்ளக மற்றும் வெளியக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படலாம்:

- நிதி வழங்குவோருக்கு தெரிவிப்பதற்காக
- செய்திமடல்கள் அல்லது வருடாந்த அறிக்கைகளில் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்காக
- விளம்பரம் மற்றும் பிரச்சார நோக்கங்களுக்காக
- உள்ளக மதிப்பீடு மற்றும் விடயங்கள் பற்றி அறிந்துகொள்வதற்காக: அடுத்த தடவை வித்தியாசமாக எதனைச் செய்யலாம் என சிந்திக்கலாம்.

## செயற்பாடு

உங்கள் நிறுவனத்தில் பதிவுகளை கையாள்வதற்கு தற்போது பொறுப்பாக உள்ள நபர் யார்?

பதிவுகளை கையாள்வதில் மிகவும் திறன்வாய்ந்த கட்டமைப்பை உங்களுக்குஏற்படுத்த முயுமா?



# பிரிவு நான்கு

## திறனுள்ள பிரச்சாரம்

## தொகுதி 1

### பரப்புரை தொடர்பாடல்

பரப்புரை செயற்பாட்டில் தொடர்பாடல் மிகமுக்கியமானது. அதிக செயற்திறன் கொண்ட நிறுவனங்களை பொறுத்தவரை, கூட்டங்களை நடத்துவதன் மூலமும் கடிதத் தொடர்பு ஊடாகவும் அரச அதிகாரிகள் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள் போன்ற தீர்மானம் எடுக்கக்கூடிய அதிகாரிகளுடன் செயற்திறனுடனும் நேரடியாகவும் ஈடுபடுகின்றன. அதேபோன்று, மற்றவர்களையும் இதே செயற்பாட்டை கடைப்பிடிக்க ஊக்குவிக்கின்றனர். சமூக அல்லது பொதுக் கொள்கை நோக்கத்தை முன்னேற்ற அல்லது ஒரு முக்கியமான பொது விடயத்தின் போக்கில் தாக்கம் செலுத்த டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்கள் உட்பட பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி அவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். ஊடக பரப்புரை தொடர்பாடலில் பாரம்பரிய மற்றும் புதிய ஊடகங்கள் இரண்டுமே முக்கிய பங்கினை வகிக்கின்றன.

#### பாரம்பரிய ஊடகம்

- **அச்சு (பத்திரிகை, சஞ்சிகை, இதழ்கள், செய்திமடல்கள்)**
- **தொலைக்காட்சி**
- **வானொலி**
- **ிரைப்படம் (சினிமா, ஆவணக்கதைகள்)**

இணைய ஊடக நிறுவனங்கள் (புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இணைய ஊடகங்கள் மற்றும் ஏற்கனவே காணப்படும் அச்சு மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களுக்கும் இப்போது இணையத்தளங்கள், சமூக ஊடக கணக்குகள் மற்றும் பொட்காஸ்ட் போன்ற டிஜிட்டல் தளங்கள் உள்ளன)
பாரம்பரிய ஊடக நிறுவனங்களின் இரசிகர்களை ஈர்க்கும் வகையில் தகவல்களை வழங்குவதன் ஊடாக, பாரம்பரிய ஊடக நிறுவனங்களுடன் பிரச்சாரங்கள் உறவுகளை உருவாக்குகின்றன
எனினும், தமது நிலைப்பாட்டிற்கு முரணான தகவல்களை வெளியிடும் செய்தி நிறுவனங்களுக்கு அரசாங்கம் கடுமையான கட்டுப்பாடுகள் அல்லது அபராதம் விதிக்கலாம். எனவே பிரச்சாரத்திற்கு இது பயனுள்ள வகையில் அமையுமா என்பதையும் அதில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை எவ்வாறு கட்டமைப்பது என்பது பற்றியும், குறித்த ஊடகத் தளங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் பற்றி பரப்புரை செயற்பாட்டாளர்கள் மிகக் கவனமாக ஆராய வேண்டும்

#### பாரம்பரிய ஊடகம்

ஊடக நிறுவனங்களுக்கு விளம்பர வெளியீட்டிற்கான உள்ளடக்கத்தைத் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்திற்கொள்க:

நீங்கள் வழங்கும் தகவலில் கவனமாகவும் தெளிவாகவும் இருங்கள். தகவல்களை விரைவாக உள்வாங்க ஊடகவியலாளர்கள் விரும்புகிறார்கள்.. ஊடகவியலார்கள் செய்தி வழியை (newsline) தேடுகின்றனர். நடைமுறையில் பேசுபொருளாக உள்ள விடயங்கள், உண்மையான புதிய தகவல்கள் அல்லது சக்திவாய்ந்த மனித ஆர்வக் கதைகளில் கவனம் செலுத்துங்கள்

நேரடி மேற்கோள்கள், ஒளிப்படங்கள் (image), வரைபடங்கள்(graphs) அல்லது நிலப்படங்களை (maps) சேர்ப்பதன் மூலம் உங்கள் உள்ளடக்கத்தை கவர்ச்சிகரமானதாக்குங்கள்.

அடிக்கடி தொடர்புகொண்டு ஊடகவியலாளர்களை சங்கடத்திற்கு உள்ளாக்காதீர்கள்

உங்கள் உள்ளடக்கத்திற்கு உகந்த தளத்தைப் பற்றி, சகல வழிகளிலும் நின்று சிந்தியுங்கள் - சிறந்த நேர்காணல், பொட்காஸ்ட் ஊடாக அதிதி ஒருவரை சந்தித்தல் அல்லது விவரணம் என்பன செய்திகளைப் போலவே தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சங்களாகும்



இணையத் தளங்கள், சமூக ஊடகங்கள் (பேஸ்புக், டுவிட்டர்), நேரடி மற்றும் பதிவுசெய்யப்பட்ட வீடியோ (YouTube) மற்றும் தொலைபேசித் தொழில்நுட்பங்கள் (WhatsApp) போன்ற இணைய அடிப்படையிலான ஊடகங்கள் கடந்த தசாப்தத்தில் தொடர்பாடல் கட்டமைப்பை மாற்றி இடைத்தரகர் அற்ற நேரடித் தொடர்பாடலுக்கு வழிவகுத்துள்ளது. அத்துடன் தரவுகள் மற்றும் தொழிநுட்பத்தை அணுகக்கூடியதாக இருத்தல், திறமையான தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களை கொண்டிருத்தல் என்பன ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய டிஜிட்டல் தொழில்துட்பத்திற்கு மிக முக்கியமானவை ஆகும். மேற்குறிப்பிட்ட அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும் பட்சத்தில், ஊடகத்தை பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறிப்பிடத்தக்கதாக அமையும்.



EGi
Editors Guild of India

August 13, 2020

The Editors Guild of India has unequivocally condemned recent attacks on journalists while they were on duty.

Three journalists working with *The Caravan* were allegedly assaulted while they were in northeast Delhi's North Ghonda neighbourhood on August 11 to report on a complainant in the recent communal violence case in the Capital. They also say they were subjected to communal slurs, threatened with murder and sexually harassed.

On the same day in Bengaluru, as many as four journalists belonging to *India Today, The News Minute* and *Suvarna News 24X7* were reportedly attacked by the city police. These journalists at that time were on duty, reporting on the vandalism and police shooting in the wake of a mob violence in the city.

Both attacks are reprehensible. The freedom of the media to discharge its responsibilities without fear or harassment is an important and indispensable attribute of a functioning democracy. The case of assault on journalists working with *The Caravan* shows a dangerous trend where communally inspired people can assault and harass journalists with impunity in the presence of an indifferent police. The Bengaluru incident also highlights the failure of the law enforcement agencies in maintaining an environment where the media can function freely and without fear.

The Editors Guild of India demands that the police authorities in Delhi and Bengaluru take cognizance of both the cases and quickly take necessary steps to initiate action against the guilty.

Shekhar Gupta, President — AK Bhattacharya, General Secretary — Sheela Bhatt, Treasurer

## பிரச்சார நடவடிக்கைகளுக்கு நீங்கள் ஏன் சமூக ஊடகங்களை பயன்படுத்த வேண்டும்?

- வலையமைப்பிற்கான ஒரு பாரிய தளத்தை வழங்குகின்றது
- பொதுவான விடயமொன்றை விளம்பரப்படுத்த, ஏனையோருடன் இணைவதற்கான செலவு குறைந்த வழியை வழங்குகிறது
- பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்திற்கு விடயங்களை வழங்கவும் ஆதரவை பெற்றுக்கொள்ளவும் திறமையான வளங்களை வழங்குகின்றது
- மூக ஊடகங்களை பயன்படுத்தும் ஒவ்வொரு சட்டமியற்றுபவர்களுடனும் உங்களை இணைக்கின்றது. பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான மற்றுமொரு வழி இதுவாகும்.

- மூக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஒவ்வொரு ஊடகவியலாளர்களுடனும் உங்களை இணைக்கிறது. பரப்புரைக்கான மற்றுமொரு வழி இதுவாகும். அமெரிக்காவில், பிளாக் லைவ்ஸ் மேட்டர் (Black Lives Matter) போன்ற இயக்கங்கள் வெற்றிகரமான சமூக ஊடக பிரச்சாரங்களின் காரணமாக தேசிய முக்கியத்துவம் பெற முடிந்தது. தற்போது இது சகல தளங்களிலும் செயற்பாட்டில் உள்ளதோடு, மில்லியன் கணக்கான மக்களை இதற்குள் கொண்டுவந்துள்ளது.

#MeToo இயக்கமும் சர்வதேச அளவில் பேசப்படுவதற்கு சமூக ஊடகங்களை பயன்படுத்தியுள்ளது.

இந்த இரண்டு இயக்கங்களும் எவ்வாறு வெற்றிபெற்றன என்பது பற்றி சிந்திக்க முடியுமா? இதுவரை நீங்கள் பெற்ற அறிவைப் பயன்படுத்தி, அவர்களின் பங்குதாரர்கள், உத்திகள், தந்திரோபாயங்கள் போன்றவற்றை ஆராய்ந்து, அவர்கள் ஏன் இந்தளவு முக்கியத்துவம் பெற்றனர் என்பதை தீர்மானிக்க முடியுமா? இவ்வாறான கற்றுக்கொண்ட பாடங்களில் ஏதேனும் உங்கள் நிறுவனத்திற்கு பொருந்துமா?

## சமூக ஊடக பிரச்சாரத்திற்கான முதன்மை தெரிவுகள்

- உங்களை பின்தொடர்பவர்களுடன் 140 அல்லது அதற்கும் குறைவான எழுத்துக்களில் உங்கள் எண்ணங்களை பகிர்ந்துகொள்வதற்கான ஒரு தளமாகும்
- (@) நபர்கள்/குழுக்களுக்கு நீங்கள் டுவீட் செய்யலாம். குறிப்பிட்ட ஒரு விடயத்திற்காக ஒரு இயக்கத்தை உருவாக்கவும் அல்லது இணைந்துகொள்ளவும் ஹேஷ்டெக் ((#) பயன்படுத்த முடியும். அத்தோடு, வெவ்வேறு கண்ணோட்டங்களை பெற்றுக்கொள்ள நபர்களை/குழுக்களை பின்தொடரலாம். புதிய விடயங்களை கற்றுக்கொள்ளலாம், உடனடி செய்திகளை பெற்றுக்கொள்வதோடு, ஏனையோரின் செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்ளலாம். உங்களைப் பின்தொடர்பவர்களுடன் யோசனை அல்லது செய்தியைப் பகிர்ந்துகொள்ள மற்றவர்களின் இடுகைகளை ரீ டுவீட் செய்யலாம்.
- டுவிட்டரில் நீங்கள் அடிக்கடி டுவீட் செய்து ஆராய்ந்தால், உங்களைப் பின்தொடர்வோரின் எண்ணிக்கை மற்றும் விடயதானத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கும். உங்கள் கருத்துக்களை அதிகளவான மக்களிடம் கொண்டுசேர்க்கும்.

- உங்கள் எண்ணங்களை நண்பர்களுடனும் உங்களை பின்தொடர்வோருடனும் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு தளமாகும். ஏனைய குழு உறுப்பினர்களுடன் தொடர்புகொள்வதற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட இயக்கத்திற்கான ஆதரவை அதிகரிப்பதற்கு பல நிறுவனங்கள் பயன்படுத்தும் "குழு தளம்" (group platform) இங்குள்ளது.
- புதிய தகவல்கள், இணைய இணைப்புகள், அறிவிப்புகள், புகைப்படங்கள், ஆவணங்களை நீங்கள் பகிர முடியும்.
- டுவிட்டரை போன்று இங்கும் ஹேஷ்டெக் கட்டமைப்பு உள்ளது. இது குறிப்பிட்ட விடயத்தை உள்ளடக்கிய இயக்கத்தை உருவாக்க அல்லது சேர்ந்துகொள்ள உங்களுக்கு வழிவகுக்கின்றது.
- ஏனைய தளங்களை விட, இங்கு செயற்பாட்டில் உள்ள பயனாளர்களின் எண்ணிக்கை அதிகம்

- காணொளிகள், ஒளிப்படங்கள் மற்றும் நிறுவனம்சார்ந்த அறிவிப்புகளை பகிர்வதற்கான சிறந்த தளமாகும்.

## சமூக ஊடகம் செய்யவேண்டிய விடயங்கள்

சமூக ஊடகங்கள் பலவற்றிலும், சகல மட்டங்களிலும் **கொள்கை வகுப்பாளர்களைப் பின்தொடருங்கள்.** சமூக ஊடகங்களில் கொள்கை வகுப்பாளர்கள் கூறும் விடயங்களை புரிந்துகொள்வதன் ஊடாக, உங்களது பிரச்சினைகள் தொடர்பாக அவர்களிடம் பேசவேண்டிய விடயம் மற்றும் கருத்துத் தெரிவிக்க உதவியளிக்கும். அவர்கள் என்ன செய்கின்றனர், எவ்வாறான விடயங்களை பேச/டுவீட் செய்ய விரும்புகின்றனர் மற்றும் அவர்களது நிலைப்பாடு என்ன என்பதில் அவதானம் செலுத்தி அவர்களை உன்னிப்பாக கண்காணியுங்கள்.

**முகப்புத்தகத்தில் குழுக்களை உருவாக்குங்கள்.** பரப்புரை கூட்டணிகளை கட்டியெழுப்ப, கீழ்மட்டத்திலிருந்து ஆதரவை பெற்றுக்கொள்ள மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் தொடர்பை ஏற்படுத்த இது உதவும்.

**ஊடக நண்பர்களுடன் தொடர்பினை ஏற்படுத்த சமூக ஊடகங்களை, குறிப்பாக டுவிட்டரை பயன்படுத்துங்கள்.** ஊடகவியலாளர்களை பின்தொடர்வோரின் எண்ணிக்கை அதிகம். அவர்களை பின்தொடர்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க அவர்கள் எப்போதும் சிறந்த அம்சங்களை தேடுகின்றனர். உங்கள் கதையைச் சொல்லவும், உங்கள் சமூகத்துடன் சிறந்த செய்திகள் மற்றும்/அல்லது கரிசனைகளை பகிரவும் இந்த தொடர்புகளை பயன்படுத்தவும்.

## உதாரணங்கள்

மோசடியில் ஈடுபடும் அரசாங்கங்களுக்கு எதிராக, 2011 அரபு வசந்தத்தின் போது மத்திய கிழக்கில் கூட்டாக போராட்டங்களை ஏற்பாடு செய்து கூட்டு எதிர்ப்பை வெளிப்படுத்துவதில் டுவிட்டர் முக்கிய பங்கு வகித்தது. எகிப்து மற்றும் சிரியா போன்ற நாடுகளில் உள்ள ஆர்வலர்கள் தமது செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பரப்பவும், மக்களை ஒன்றுதிரட்டவும் மைக்ரோ பிளாக்கிங் (microblogging) தளத்தைப் பயன்படுத்தினர். அரசாங்கத்தின் மோசடி நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக ஊடகத் தளங்களையும் பயன்படுத்தினர்.



இலங்கையின் சமூக ஊடகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவது பற்றிய உதாரணம்

**Hashtag Generation ஹேஷ்டெக் ஜெனரேசன் (#தலைமுறை)**

இளைஞர்கள் தலைமையில் இயங்கும் ஒரு அமைப்பாக ஹேஷ்டெக் ஜெனரேசன் காணப்படுகின்றது. இது, உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் இளைஞர்களின் முழுமையான மற்றும் பயனுள்ள பங்கேற்பிற்காக பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடுகின்றது

**அவர்களது சமூக ஊடகம்**


இணையத்தளம் http://www.hashtaggeneration.org/

முகப்புத்தகம் (1) Hashtag Generation | Facebook

இன்ஸ்டாகிராம் Hashtag Generation (@hashtaglka) • Instagram photos and videos

## கூறவேண்டிய விடயத்தை நேரடியாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுங்கள்.


அநேகமாக, முதல் வரியையும், ஆரம்ப சொற்கள் சிலவற்றையும் மாத்திரமே வாசகர்கள் பார்க்க விரும்புகின்றனர். உங்களது பார்வையாளர்கள், தமது தேவைகள் அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் சாவல்கள் குறித்து தொடர்புகொள்ள எந்த மொழியை பயன்படுத்துகின்றனர் என்பது பற்றிய ஆராய்ந்து அறிந்துகொள்ளுங்கள். உங்கள் உள்ளடக்கம் பார்வையாளர்களில் தாக்கம் செலுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்த, அந்த மொழியை பயன்படுத்தி பதிவுகளை இடுங்கள். அவர்களையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் நீங்கள் உண்மையிலேயே புரிந்துகொள்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு காட்டுவதற்கு இது உதவும்.




### தரவு மற்றும் கதைகளைப் பயன்படுத்தவும்

வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்களைப் பயன்படுத்தி ஹேஷ்டெக் ஜெனரேசன் அர்த்தமுள்ள தரவுகளை வழங்குகின்றது

https://fb.watch/6MZ5KDwdZG/




### திறன்மிக்க, கௌரவமான மற்றும் முரணற்ற கருத்துக்களை உள்ளடக்குதல்

அனைத்து சமூக ஊடக பதிவுகள் மற்றும் சமூக ஊடக தளங்களிலும் நிறுவனங்கள் வலுவான கருத்தை பயன்படுத்துவது அவசியமாகும்.






## இலங்கையில் சமூக ஊடகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவது பற்றிய உதாரணம்

### நேரமும் ஈடுபாடும்










**உதவிக்குறிப்பு - பின்வரும் சமூக ஊடக விதிமுறைகளை நினைவிற்கொள்க**

- நீங்கள் ஒரு கருத்தைக் கூறலாம்; எனினும், எந்தவொரு டுவீட், ரீடுவீட் அல்லது பதிவுகளில் தெளிவாகவும் தொழில்முறை சார்ந்தும் செயற்படுங்கள்.
- பொதுவாக, நீங்கள் கல்வி அல்லது வர்த்தக நோக்கத்திற்காக தனிப்பட்ட சமூக ஊடக கணக்குகளைப் பயன்படுத்தக்கூடாது. தொழில்சார் பயன்பாட்டிற்கான பிரத்தியேக கணக்குகளை உருவாக்கவும்.
- விடயங்கள் எதிர்மறை விளைவை ஏற்படுத்தினால், தொடர்புபடாமல் இருப்பதில் தவறில்லை.
- மூக ஊடகத்தில் நீங்கள் பதிவிடும் எந்த விடயங்களும், வெளியிட்ட நேரத்திலிருந்து பொதுவெளியில் காணப்படும் என்பதை நினைவிற்கொள்க

எதிர்மறையான மற்றும் சர்ச்சைக்குரிய பதிவுகளை இடுவதற்கு முன்னர் இரு தடவைகள் சிந்தியுங்கள்.

## தொகுதி 2

## வலையமைப்புகளை உருவாக்குதல்

அரசாங்க அதிகாரிகள், சக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் நன்கொடையாளர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர் குழுக்களுடன் இணைவதன் மூலம், உங்கள் நிறுவனத்தின் கொள்கைகளை மேம்படுத்தலாம் மற்றும் உங்கள் நிறுவனம் தொடர்பான பொது சுயவிபரத்தை உருவாக்கலாம்.

வலையமைப்பு என்பது நிறுவன வளங்கள், தொடர்புகள் மற்றும் ஆய்வுகள் போன்ற பல்வேறு கூறுகளை சிறந்த முறையில் மாற்றும் ஒரு தந்திரோபாயமாகவும் பயன்படுத்தலாம். வலையமைப்புகளையும் கூட்டணிகளையும் உருவாக்குவதும் பிரச்சார அமைப்புகளின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் பங்காளர்களுடன் வலையமைப்புகளை அல்லது கூட்டணிகளை உருவாக்க நிறுவனங்கள் முயற்சிக்கும்போது சவால்களையும் எதிர்கொள்ளலாம். உதாரணமாக, கூட்டணி பங்காளிகள் அனைத்து நோக்கங்களிலும் உடன்படாமல் இருக்கலாம், மேலும் சில அமைப்புகள் ஆதரவு தெரிவிக்காமல் இருக்கலாம்.

### நிகழ்வு ஆய்வு பகுப்பாய்வு

**குற்றவியல் அவதூறுக்கு எதிராக இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரம் தொடர்பான விடயத்தை மீண்டும் பார்ப்போம்:**

2002ஆம் ஆண்டுவரை, ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்படும் வரை, இலங்கையில் அவதூறு ஒரு குற்றவியல் குற்றமாக காணப்பட்டதோடு, குற்றவியல் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தெற்காசிய பிராந்தியத்தில் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நீக்கிய முதலாவதும் ஒரே நாடும் இலங்கையாகும்.

இலங்கையில் ஊடக சங்கங்கள் மற்றும் பரப்புரை குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான, தசாப்த கால பிரச்சாரத்தைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு ஜூன் 18ஆம் திகதி நாட்டின் சட்டப் புத்தகங்களில் இருந்து குற்றவியல் அவதூறுச் சட்டங்கள் நீக்கப்பட்டன. சர்வதேச பத்திரிகை நிறுவனம் (IPI), சர்வதேச PEN அமைப்பு, உலக பத்திரிகைகள் சங்கம், பொதுநலவாய ஊடக ஒன்றியம் (CPU), பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ), பிரிவு XIX மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் அவதூறுச் சட்டங்கள் ஏற்படுத்தும் "மோசமான விளைவை" வன்மையாக கண்டித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் கருத்துச் சுதந்திரம் குறித்த சிறப்பு அறிக்கையாளர் உட்பட பல சர்வதேச அமைப்புகள் இந்த பிரச்சாரத்திற்கு ஆதரவு வழங்கின.

குற்றவியல் அவதூறுச் சட்டத்தை நீக்குவது தொடர்பான பரப்புரைக்கான சில உள்ளூர் ஊடக பரப்புரை நிறுவனங்களும் ஒன்றிணைந்தன. இந்த கூட்டணியானது, அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுப்பதற்காக தமது சர்வதேச வலைப்பின்னல்களை சிறந்த முறையில் பயன்படுத்தியது. உள்ளூரில் ஊடக பரப்புரை செயற்பாட்டில் ஈடுபடும் நிறுவனங்களின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய சர்வதேச ஊடக பரப்புரை செயற்பாட்டு வலையமைப்புகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை உங்களுக்கு உருவாக்க முடியுமா?

### ஏற்கனவே உள்ள கூட்டணியில் இணைந்து கொள்ளல்

**கூட்டணிகள் இருப்பதன் நன்மைகள் வருமாறு-**

1. நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டணிகள் அனைத்து ஆலோசனை நடவடிக்கைகளிலும் பன் மடங்கு விளைவைக் கொண்டிருக்கின்றன. ஒரு பிரச்சாரத்தின் முயற்சிகள் மற்றொரு உறுப்பினரால் வலுப்படுத்தப்பட்டு கட்டமைக்கப்படலாம்.

2.வெவ்வேறு குழுக்கள் ஒரு நோக்கத்திற்கு ஆதரவாக பொதுவாக குரல் எழுப்பும்போது அவர்களின் அரசியல் மூலதனம் பெரும்பாலும் அவர்களின் தனிப்பட்ட பகுதிகளின் தொகையை விட அதிகமாக இருக்கும்.

3. கூட்டணிகள் பரந்த பார்வையாளர்களை அடையலாம் மற்றும் சனத்தொகையில் பெரும் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

4. உறுப்பினர் நிறுவனங்கள் வெவ்வேறு நிபுணத்துவம் அல்லது தனிப்பட்ட திறன் தொகுப்பினைக் கொண்டிருக்கலாம். அவை கூட்டணி முழுவதும் பகிர்ந்து கொள்ளப்படலாம் மற்றும் கற்பிக்கப்படலாம்.

5. கடினமான சூழ்நிலைகளில் சக நிறுவனங்கள் பிரச்சாரத்திற்கு தார்மீக ஆதரவையும் ஒற்றுமையையும் வழங்கலாம் மற்றும் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களை ஊக்குவிக்க உதவலாம்.

6. ஒரு கூட்டணியாக ஒருங்கிணைப்பதன் மூலம் ஆலோசனை பிரச்சாரங்கள் முயற்சிகளின் நகல் தன்மை,போட்டி மற்றும் குறுக்கு செய்திகளையும் குறைத்திடலாம்.

## நிகழ்வு ஆய்வு

**ஊடக சுதந்திரக் கூட்டணி: உலகளாவிய கூட்டாண்மை**

### மேலோட்டப் பார்வை

ஊடக சுதந்திரத்திற்கான உலகளாவிய மாநாட்டில் ஜூலை 2019இல் ஊடக சுதந்திரக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது மற்றும் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பிற்காக வாதிடுவதற்கும், பத்திரிகையாளர்களுக்குத் தங்கள் வேலையைச் செய்வதற்குத் தீங்கு விளைவிப்பவர்களைக் கணக்குப் போடுவதற்கும் இணைந்து செயற்படும் நாடுகளின் கூட்டமைப்பு ஆகும். ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இடங்களில் அதனை பாதுகாப்பதே கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

உள்நாட்டில் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கும் சர்வதேச அளவில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் எழுத்துப்பூர்வ உறுதிமொழியான ஊடக சுதந்திரம் குறித்த உலகளாவிய உறுதிமொழியில் கூட்டணியின் உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். தனிப்பட்ட வழக்குகளில் வற்புறுத்துதல், துஷ்பிரயோகம் செய்பவர்களைக் சட்டத்தின் முன் கொண்டு வரல், ஊடகங்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்த கூட்டணி மற்றும் பிற நாடுகளின் உறுப்பினர்களை ஆதரித்தல் மற்றும் பலதரப்பு மன்றங்களில் கூட்டறிக்கைகளை வெளியிடுதல் ஆகியவற்றின் மூலம் கூட்டமைப்பு ஊடக சுதந்திரத்தை ஊக்குவிக்கும். அனைத்து கூட்டணி உறுப்பினர்களின் மூத்த அதிகாரிகளின் முதல் முழு கூட்டம் 2020 ஜனவரி 29-30 தினங்களில் ஜெனீவாவில் கூடி குறிப்பு விதிமுறைகள் (கூட்டணியில் இணைவதற்கான பொறிமுறைகள் உட்பட), பரப்புரை வழிமுறைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டது. கூட்டமைப்பு உறுப்பினர்கள் இறுதி அறிக்கையை ஏற்றுக்கொண்டனர். கொரோனா வைரஸ் தொற்றுநோயின் பரவலினை அடுத்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஊடக சுதந்திரக் கூட்டணியின் நிர்வாகக் குழுவின் பிற உறுப்பினர்கள் ஏப்ரல் 6, 2020 அன்று ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அவ்வறிக்கை ஊடக சுதந்திரத்தின் அடிப்படை முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு அனைத்து மாநிலங்களையும் சுதந்திர ஊடகத்திற்கான அணுகலை பாதுகாக்க அழைப்பு விடுத்துள்ளது.

**உறுப்பினர்கள்**

ஊடக சுதந்திரக் கூட்டணியில் இதுவரை 47 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, ஊடக சுதந்திரம் தொடர்பான உறுதிமொழியில் அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர்.

ஊடக சுதந்திரக் கூட்டணி: ஒரு மேலோட்டமான பார்வை - GOV.UK (www.gov.uk)

**கூட்டணிகள் அபாயகரமானதா?**

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகள் என கூட்டணிகளை குறிப்பிட முடியாது. ஏனெனில் கூட்டணியுடன் இணைந்த தனிப்பட்ட நிறுவனங்களின் அடையாளங்கள் பிற்காலத்தில் கூட்டணியிலிருந்து இல்லாமல் போகலாம். அல்லது ஒழுங்கமைப்புகளின் கொள்கைகள் மாற்றமடையலாம்.

அதேபோல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய கூட்டணிகளுடன் இணைந்து காணப்படலாம். எனினும் அவர்களின் கருத்துக்களை குறித்த கூட்டணி முன்னெடுத்துச் செல்லாதிருக்கலாம் அல்லது சிறிதளவிலேனும் அவர்கள் எதிர்பார்க்கும் கருத்துக்களை முன்னெடுக்காதிருக்கலாம்.

## கூட்டணியுடன் இணைந்திருப்பதன் மூலம் எழக்கூடிய ஆபத்துக்களுக்கான உதாரணங்கள்

**காலநிலை மாற்றம்**

**பாரிஸ் உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா விலகியது**

காலநிலை மாற்றத்தின் விளைவுகள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் முயற்சியை வலுப்படுத்தும் வகையில் கடந்த 2015ஆம் ஆண்டு பாரிஸ் காலநிலை மாற்றம் குறித்த உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸுக்குக் குறைப்பதும் காலப்போக்கில் அதனை 1.5 டிகிரி செல்சியஸ் வரை கொண்டு வருவதும் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். இருப்பினும் இந்த உடன்படிக்கையில் இருந்து 2017ஆம் ஆண்டு ஜுன் மாதம் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியேறியது. இதன் விளைவாக ஏனைய நாடுகள் தீவிர ஈடுபாட்டை மேற்கொள்வது குறைவடைந்தது. ஏனெனில் காலநிலை மாற்றம் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவே முக்கிய பங்களிப்பை மேற்கொண்டு வந்தது. அதுமட்டுமின்றி அமெரிக்காவின் வெளியேற்றம் அதிகார வெற்றிடத்தையும் உருவாக்கியது.

# தொகுதி 3

## பரப்புரை செய்தல்

அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஆகியோர் மீது நேரடியாக ஆதிக்கம் செலுத்தும் நடவடிக்கையே இதுவாகும். பொதுக் கொள்கைகளை வகிப்போர் அரசாங்க அதிகாரிகளாக இருக்கும் பட்சத்தில் செல்வாக்கு செலுத்தும் செயற்பாடானது அரச உறவுகளின் ஒரு பகுதியாகின்றது. அத்துடன் உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் நேரடி தொடர்புகளை மேற்கொள்வதன் மூலம் தீர்மானங்கள் மேற்கொள்வோருடனான நல்லுறவை கட்டியெழுப்பவும் வழிவகுக்கின்றது.

பரப்புரை செயற்பாடு என்பது ஒரு சக்தி வாய்ந்த தந்திரோபாயமாகும். எனினும் இது வளத்தை முதன்மையாகக் கையாளும் உபாயமொன்றாகும். நல்லுறவை கட்டியெழுப்புதல் இதன் முக்கிய அங்கமாக காணப்படினும் அது ஒரு சிக்கலான செயற்பாடு என்றே குறிப்பிடலாம். இதில் வெற்றியை அடைய வேண்டும் எனில் நேரம் மற்றும் சக்தி என்பன அவசியம்.

**பரப்புரையின் போது கவனிக்க வேண்டியவை**

**நம்பிக்கை** - தனிப்பட்ட, தொழில் ரீதியான அல்லது அரசியல் ரீதியான என அனைத்து உறவுகளுக்கும் நம்பிக்கை அத்தியாவசியமான ஒன்றாகும். மற்றைய தரப்பினர் தங்களை திசைதிருப்ப அல்லது மறைமுகமாக ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என சந்தேகம் எழும் பட்சத்தில் குறித்த தரப்பினர் அவர்களுடன் ஒத்துழைக்க மறுப்பு தெரிவிக்கலாம். ஆதிக்கம் செலுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவர் எந்த நேரத்திலும் பொய் பேசாது, தகவல்களை மறைக்காது நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். அதேநேரம் தமக்கு தெரிவிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் உண்மையானது என எதிர்த்தரப்பினரும் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதன்போது இரு தரப்பினரும் பொறுப்புடனும், கண்ணியமாகவும் போதிய விளக்கம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**நம்பகத் தன்மை** - தீர்மானம் மேற்கொள்வோருடன் நேர்மறையான உறவுகளை கட்டியெழுப்ப வேண்டுமெனில் முறையானதும், ஊக்குவிக்கும் வகையானதுமான பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். "முறையானது" எனும் போது, குறித்த பிரச்சார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட சமூகத்திடம் இருந்தே பிரதிபலிக்கப்பட வேண்டும் எனலாம். ஏனெனில், பிரச்சார நடவடிக்கை மூலம் கோரப்படும்/ தெரிவிக்கப்படும் விடயங்களுடன் தொடர்பு மற்றும் தலைமைத்துவம் என்பன காணப்படும் போதே குறித்த விடயம் முறைப்படி ஏனையோரை சென்றடையும். பிரசார நடவடிக்கையானது மந்த கதியில் செல்கிறது அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றது என தீர்மானம் மேற்கொள்பவர்களால் முடிவெடுக்கப்படும் பட்சத்தில், அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து, அவர்கள் அலட்சியமாக இருந்து விடலாம்

பிரசார நடவடிக்கை முலம் கோரப்படும் விடயங்கள் சட்டத்திற்கு புறம்பானதாகவும் அடைய முடியாததாகவும் காணப்படும் பட்சத்தில் அதனை நிராகரிக்க முடியும்.

நம்பகத் தன்மையை கட்டியெழுப்ப வேண்டுமெனில் பிரச்சார நடவடிக்கைகள் தெளிவானதாகவும் சுருக்கமானதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் அது எவ்வாறு பிரச்சினைக்குரிய தீர்வாக அமைய வழிவகுக்கும் என்பது தொடர்பிலும் விளக்கத் தன்மை வேண்டும்.

நம்பகத் தன்மையை அதிகரிக்க வேண்டுமெனில் உள்ளூர் மட்டத்திலான தகவல் பரிமாற்றம் சீரான முறையில் நிகழ வேண்டும். அத்துடன், அது எவ்வாறு மற்றைய தரப்பை சென்றடைகின்றது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

**அரசியல் மூலதனம்** - பிரச்சார நடவடிக்கைகள் காலப்போக்கில் வெற்றிப் பாதையில் செல்ல ஆரம்பிக்கும் போது, மதிப்பும் பெருக ஆரம்பிக்கும். இதன் மூலம் அரசியல் ஆதரவும் கிடைக்க

ஆரம்பிக்கும். இது புதிய நட்புறவுகளை உருவாக்கவும் ஏற்கனவே கட்டியெழுப்பப்பட்ட உறவுகளை வலுப்படுத்தவும் உதவி புரியும். அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பலவீனமானவர்களிடம் இருந்து தங்களை தூர விலக்கிக் கொண்டு, அரசியல் செல்வாக்கு உள்ளவர்களிடமே பெருமளவில் அணுகுவார்கள். எனினும் அரசியல் செல்வாக்கிலும் பார்க்க நம்பகத்தன்மை உடையதும் விசுவாசம் மிக்கதுமான கீர்த்தி நாமத்தைப் பெறுவதில் கவனம் செலுத்தல் சிறந்தது.



## நிகழ்வு ஆய்வு ஐந்து : வெற்றிகரமான பரப்புரை

பல வருட காலங்களாக பல்வேறு ஆர்வமுள்ள தரப்பினர் முன்னெடுத்த பரப்புரை செயற்பாடு மற்றும் பரப்புரைக்குப் பின்னர் தகவல் அறியும் உரிமையை மக்களின் அடிப்படை உரிமையாக அங்கிகரித்தமை, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பங்கேற்பு ஆட்சியை நோக்கி நாட்டை கொண்டு செல்வதற்கு இலங்கை அரசு மற்றும் அதன் மக்கள் தரப்பில் உள்ள அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகிறது.

கனடாவில் உள்ள சட்டம் மற்றும் ஜனநாயக மையத்தின் உலகளாவிய தகவல் உரிமை மதிப்பீட்டில், இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்ட கட்டமைப்பானது 3வது இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆட்சியின் வெற்றியானது, அரசு மற்றும் சட்டத்தின் கீழ் உள்ள மற்ற நிறுவனங்களால் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள தகவல்களை வழங்குவது மற்றும் ஆட்சியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலைக் கோருவதற்கு மக்களால் அச்சட்டம் பயன்படுத்தப்படல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

உரிமைக்கான அரசியலமைப்பு அங்கீகாரம் மற்றும் அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் சட்டங்கள் இருந்தபோதிலும், இந்த சட்டமியற்றும் கட்டமைப்பை முழுமையாக செயற்படுத்துவதற்கு இன்னும் நிறைய விடயங்களைச் செய்ய வேண்டியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளுடன் முரண்படும் தற்போதைய சட்டங்களின் பலவும், அவற்றில் சில உரிமையின் நோக்கத்தை மட்டுப்படுத்தும் விதத்தில் காணப்படுகின்றமை சவாலான விடயமாகும்.

அரசியலமைப்பின் 14ஏ மற்றும் தகவல் உரிமைச் சட்டத்தின் (இனிமேல் கூட்டாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஆட்சி என குறிப்பிடப்படும்) சட்டப்பிரிவு 14ஏ விதிகளுடன் வெளிப்படையாக முரண்படும் சட்டமன்ற விதிகளின் பகுப்பாய்வு பற்றிய இந்த அறக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைக்கான இலங்கை நீதித்துறையின் அணுகுமுறை மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஆட்சி தொடர்பான வழக்குகளை கையாளும் போது நீதித்துறை பதிலளிக்க வேண்டிய சாத்தியமான சிக்கல்கள் மற்றும் கேள்விகள் குறித்தும் இந்த அறிக்கை சுருக்கமாக ஆராய்கிறது.




பரப்புரையை நடத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில பொதுவான விதிகள்

1. **உங்கள் இலக்குகள் தொடர்பில் ஆராயுங்கள்** - இலக்குக்கான ஊக்குவிப்பு, அரசியல் முன்னுரிமைகள் மற்றும் தனிப்பட்ட விருப்புகள் குறித்து ஆராயுங்கள். பரஸ்பர உடன்படிக்கை மற்றும் நேர்மறையான உறவு ஒன்றை ஆரம்பிப்பதற்கான அடித்தளமாக அல்லது ஆரம்பப் புள்ளியாக செயற்பட தகவல்கள் அவசியம். எவ்வளவு அதிகமான தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றனவோ, அந்த அளவு சுலபமாக தீர்மானங்களை யேறகொள்ளலாம்.

2. **பொறுமையாகவும் உறுதியாகவும் இருத்தல் வேண்டும்.** உங்கள் கோரிக்கையுடன் நேரடியாகத் தொடர்பற்ற அதேவேளை இலக்கினை ஈடுபடுத்துவதற்கான ஆக்கபூர்வமான வழிகள் தொடர்பில் சிந்தியுங்கள். அரச அதிகாரிகள் உட்பட, பொதுமக்கள் இனந்தெரியாத நபர்களிடமிருந்து உதவி பெறுவதை விரும்பமாட்டார்கள். எனவே இலக்கிற்கு பிரசாரம் தொடர்பில் போதிய அறிவை புகட்டிவிடுங்கள். உதாரணமாக, பாதிக்கப்பட்ட சமூகத்தை பார்வையிடும் பொருட்டு அரச அதிகாரியை அழைக்கலாம் அல்லது பிரச்சாரத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் நிகழ்வில் பேசுமாறு கோரலாம்.

3. **உள்ளூர் விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பாக அவதானத்துடன் செயற்படுங்கள்**. கவனக்குறைவின் காரணமாக குற்றம் இடம்பெறாமல் இருப்பதற்கும் அல்லது அவர்களின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தாமல் இருப்பதற்காக, பரப்புரை செயற்பாட்டாளர்கள் கலாச்சார விழிப்புணர்வு மற்றும் உள்ளூர் பழக்கவழக்கங்களுக்கு ஏற்பட செயற்படுவதும் அவசியமாகும்.

4. **கோரிக்கைகளுக்கு அப்பால் உறவுகளை வளர்த்துக்கொள்ளுங்கள்:** இலக்குடன் தொடர்புடைய தகவலை அவ்வப்போது பகிர்ந்து கொள்ளுங்கள். அது அவருக்கு/அவளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தலாம் அல்லது பிரச்சாரத்தை சாதகமாக காண்பிக்கும் நடவடிக்கைகளுக்கு அவரை/அவளை அழைக்கலாம்.

5. **நீங்கள் வழங்கும் தகவலை தனிப்பயனாக்குங்கள்.** மேலதிக ஆய்வின் மூலம், பரப்புரை இலக்கை நோக்கி பரப்புரைச் செய்தியைத் தனிப்பயனாக்கவும். இலக்கு மிகவும் அழுத்தமானதாக இருக்கும் வகையில் தரவுகளை பயன்படுத்தவும். இந்த குறிப்பிட்ட இலக்கை ஈர்க்கும் வகையில் தகவலை வழங்கவும்.

6. **உங்கள் கோரிக்கையை தெளிவுபடுத்துங்கள்.** அவன்/அவள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் மற்றும் ஏன் என்பது பற்றி இலக்கிற்கு விளக்கவும். ஒரு பக்க அல்லது குறிப்பு அட்டை அளவிலான கையேடுகளை உருவாக்குதல் மற்றும் பகிர்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளுங்கள்; இவை ஒற்றைப் பக்கம் அல்லது சிறிய ஆவணங்களாக இருக்க வேண்டும். தொடர்புடைய சகல விடயங்கைளையும் உள்ளடக்கி, கவர்ச்சிகரமான, வாசிக்க எளிதான வடிவத்தில் தொகுக்க வேண்டும்.

7. **பிரச்சினை பற்றியும் நீங்கள் முன்மொழிந்த தீர்வு பற்றியும் அறிந்து வைத்திருங்கள்.** கொள்கை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும் போது இலக்கின் கேள்விகளுக்கு

பதிலளிக்க தயாராக இருங்கள். உங்கள் அனுமானங்களை சவாலாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் நிலைப்பாட்டிற்கு எவ்வாறான எதிர்ப்பை இலக்கு வெளிப்படுத்தலாம் என்பதைப் பற்றி சிந்தித்து, அந்த சவால்களை மறுக்க அல்லது குறைப்பதற்கு ஏற்ற ஆதாரங்களையும் வாதங்களையும் தயார்ப்படுத்துங்கள்.

8. **பண்பாக நடந்துகொள்ளுங்கள்**. உங்கள் பரப்புரை இலக்குகளை அவர்கள் கடுமையாக எதிர்க்கும் பட்சத்திலும், நீங்கள் கடுமையாக நடந்துகொள்ளாதீர்கள். அல்லது அவர்களது கருத்தை நிராகரிக்காதீர்கள். அனைத்து பரப்புரை செயற்பாடுகளைப் போலவே பரப்புரை செயற்பாடும் ஒரு கூட்டுப்பயனுடையதாகும். இலக்கானது, ஒரு நாள் "இல்லை" என்று கூறுவதானது, அவர்/அவள் இன்னொரு நாள் "ஆம்" என கூறமாட்டார்கள் என அர்த்தமாகாது.

9. **செவிமடுங்கள்** - பரப்புரை இலக்குகளை அணுக, கோரிக்கைகள் மற்றும் உதவும் ஆதாரங்களின் பட்டியல்களுடன் செல்கின்றமை பரப்புரை செயற்பாட்டாளர்களின் பொதுவான தவறாகும். அத்தோடு, இலக்குகளை ஒருபோதும் கேட்பதும் இல்லை. கொள்கைப் பிரச்சினையில் பரப்புரை இலக்குகள் நேரடி செல்வாக்கு செலுத்துவதை நினைவிற்கொள்க. அவர்களது கருத்துக்கள் முக்கியமானது. மேலும், பரப்புரைகளை கடுமையாக எதிர்க்கும் இலக்குகளிடம் நெருங்கிச்சென்று அவர்களது கருத்துக்களை கேட்டறிய வேண்டும். எதிரணியினரின் கரிசனைகளை நிராகரிக்க வேண்டாம். அதை கடந்துசெல்ல வேண்டுமாயின், அதன் நோக்கை புரிந்துகொள்வதும் கவனத்திற்கொள்ள வேண்டியதும் அவசியம்.

10. **ஒருபோதும் பொய்யுரைக்காதீர்கள் அல்லது சோடிக்கப்பட்ட கதைகளை கூறாதீர்கள்**. பெரும்பாலான பரப்புரை செயற்பாடுகள் ஓரளவு அதிகாரம் உள்ள அல்லது அதிகாரம் அற்றவர்களால் நடத்தப்படுகின்றன. அரசியல் மூலதனத்தை குவிப்பது கடினம் மற்றும் வீணடிக்க எளிதானது. அதற்கு பதிலாக, பரப்புரை செயற்பாட்டாளர்கள் உண்மைக்குப் பாத்திரமான மற்றும் நம்பகத்தன்மை அடிப்படையில், நற்பெயரைப் பெற்ற தீர்மானம் எடுப்போருடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொய்யான தகவல்களும் சோடிக்கப்பட்ட கதைகளும், தமது நாணயத்தை விரைவாக அழிப்பதற்காக பெரும்பாலான பரப்புரை செயற்பாட்டாளர்களிடம் காணப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

## இறுதியாக சில வார்த்தைகள்:

**இந்த பரப்புரை கருவித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உங்களது செயற்பாடுகளை உங்களது வழியில் முன்னெடுப்பதில் மகிழ்ச்சியடைந்திருப்பீர்கள் என நம்புகின்றோம். குறிப்பாக உங்களது சொந்த பரப்புரை பிரச்சார நடவடிக்கைகளை எவ்வாறு திறன்மிக்க வகையிலும் பயனுள்ளதாகவும் மாற்றலாம் என்பதை பற்றிய உதவிக்குறிப்புகளை பெற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம்.**

**பரப்புரை செயற்பாடுகளை நீங்கள் முன்னெடுக்கும்போது உங்களுடன் இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம்**

**ஸ்மார்ட் குறிக்கோள்களை கொண்டிருங்கள் !**



## பின்னிணைப்பு

பங்குதாரர் முகாமைத்துவம் மற்றும் பரப்புரை தொடர்பாக ஃப்ரீடம் ஹவுஸ் பின்வரும் தந்திரோபாயங்களை அறிமுகப்படுத்துகிறது.

### நிகழ்வு ஆய்வு

### அ. வடகிழக்கு சிரியாவின் குர்திஷ் பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் அதிகாரிகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு மாற்று வழியைப் பயன்படுத்துதல்

சிரியாவின் சிவில் சமூக அமைப்புகள், 2011ஆம் ஆண்டு தொடக்கம் சிரிய அரசாங்கம் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளன. 2017இல் வடகிழக்கு சிரியாவில் உள்ள குர்திஷ் பிராந்தியத்தின் ஒப்பீட்டளவில் மிகவும் அனுமதிக்கப்பட்ட சூழலில் கூட, சிவில் சமூக அமைப்புகள் கட்டுப்பாடுகள் மற்றும் தலையீடுகளை எதிர்கொள்கின்றன. 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம், உள்ளூர் குர்திஷ் அதிகாரிகள் ஒரு புதிய அரச சார்பற்ற நிறுவன சட்டத்தைப் பயன்படுத்தி 50 இற்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் உரிமங்களை எவ்வித விளக்கமும் இன்றி மீளப்பெற்றனர்.

**குறிக்கோள்:** உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தினரிடையே மனித உரிமைப் பணிகளுக்கு அதிக அங்கீகாரத்தை உருவாக்குதல் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தடையின்றி செயற்படுவதை அனுமதித்தல்.

மூலோபாயம்: 2018 ஆம் ஆண்டில், குர்திஷ்-சிரிய மனித உரிமைகள் அமைப்பு இந்த பிரச்சினையில் ஒரு உத்தியை உருவாக்கியது. இதில் சிவில் சமூக அமைப்புகளின் மீதான அதிகாரிகளின் தன்னிச்சையான துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டுவர, சட்டத்தின் பயன்பாட்டை மேற்பார்வையிடும் அரசாங்க அதிகாரிகள் மீது அவர்கள் செல்வாக்கு செலுத்துவர்.

**தந்திரோபாயங்கள்:** அமைச்சின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அவர்கள் முன்னோக்கிச் செல்ல மாட்டார்கள் என்பதை அமைப்பு அடையாளம் கண்டது. எனவே அவர்கள் உள்ளூர் மட்டத்தில் நுழைவதற்கான மாற்று வழிகளை கண்டறிந்தனர். அவர்கள் அரசு சார்பற்ற துறை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மேற்பார்வையிடும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் தொடர்பை வலுப்படுத்திக்கொண்டனர். சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இந்த அதிகாரிகளுடன் தொடர் பயிற்சிப்பட்டறை நடத்தி, உள்ளூர் ஒழுங்குமுறைகளைக் குறிப்பிடுவதன் மூலம் அவர்கள் எவ்வாறு தங்கள் அதிகாரத்தை மீறினார்கள் என்பதைப் பற்றி அமைச்சின் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த, பங்குதாரர்களுக்கு முடிந்தது. சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளின் (சட்டங்கள் மற்றும் நிலையான நடைமுறை) அடிப்படையில், மோதலுக்கு அப்பாற்பட்ட உரையாடலை நோக்கிச் செயற்படுவதன் மூலம், மாற்றத்திற்கான வழியைத் திறக்க பங்குதாரர்களுக்கு முடிந்தது.

**விளைவு:** இந்த உபாய நடவடிக்கை மற்றும் உறவைக் கட்டியெழுப்பியதைத் தொடர்ந்து, ஐந்து சிவில் சமூக அமைப்புகளின் வழக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் அதிகாரசபை தனது முடிவை மாற்றிக்கொண்டது. ஐந்து நிறுவனங்களின் உரிமங்கள் மீட்டெடுக்கப்பட்டதோடு, அவர்கள் தமது செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்கொண்டுசெல்ல முடிந்தது.




• Source: syria.chathamhouse.org

**ஆ.** சீனாவில் பெண் உரிமைகளுக்காக 'ஓய்வறைகளை ஆக்கிரமித்திருக்கும்' அவர்களின் குறைந்த உணர்திறன் மிக்க பிரச்சினைகளை அடையாளம் காணுதல்

**நிகழ்வு ஆய்வு**

சீனாவில் பெண்ணிய இயக்கமானது ஒரு மேல்வர்க்கப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றது. பிரச்சினைகள் தொடர்பில் முன்னரங்கத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பெண்கள் உரிமைகளுக்கான குழுக்கள் பெரும்பாலும் மேற்கத்தைய நோக்கங்களைக் கொண்டவை என விமர்சிக்கப்படுவதுடன், நம்பகத் தன்மையைப் பெறுவதற்காக அவை போராடுகின்றன. சமூக ஊடகங்களின் எழுச்சியானது கோரிக்கைகளை முன்நிறுத்துவதற்கும், சமத்துவம் மற்றும் ஆணாதிக்க அதிகாரத்திற்கு சவால் விடுப்பதற்கும் ஒரு மகத்தான தளத்தை வழங்கியுள்ளன. எனினும், பெண்ணிய குழுக்கள் மேல் வர்க்கத்திற்கு வெளியே அதிக எண்ணிக்கையிலான பெண்களுடன் இணைந்து சமமாக நடத்துவதற்கான கோரிக்கைகளை உறுதியான மற்றும் நடைமுறை ரீதியாக மாற்றுவதற்கும் வழியைக் கண்டறிவதற்காகப் போராட்டம் நடத்தின. அதேவேளை, மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராக குரல் எழுப்புவது மிகவும் ஆபத்தானது என்பதுடன், செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளுக்கு சாதகமான சூழ்நிலைகளை பிரச்சார செயற்பாட்டாளர்களுக்கு கண்டறிவதும் ஆபத்துக்குரியதாகும். அண்மைய ஆண்டுகளில் சீனாவிலுள்ள பல பெண்ணிய செயற்பாட்டாளர்கள் - அவர்களில் பெரும்பாலானோர் வெளிப்படையாகப் பேசுகின்ற, சமூக ஊடக ஆர்வமுள்ள 20 வயதுடைய பெண்கள், சமகால சீன சமூகத்தில் செயற்படும் ஆண் பேரினவாதத்தின் விவகாரங்களுக்கு எதிராக ஆக்கபூர்வமான பிரசாரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**குறிக்கோள்:** ஆணாதிக்கத்தின் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வு வழங்குதல் மற்றும் பெண்களின் உரிமைகளைஆதரிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்

**மூலோபாயம்:** சீனப் பிரஜைகளுடன் இணைந்துகொள்வதற்கும், பெண்களை வலுவூட்டுவதற்காக அடிமட்டத்தில் மக்களின் ஒத்துழைப்பை உருவாக்குதல்

**தந்திரோபாயம்:** 2012இல், இளம் பெண்ணியவாதிகள் குழுவொன்று சர்ச்சையற்ற பிரச்சினையொன்றை அடையாளம் கண்டு பெண்களுக்கு சம உரிமைகளுக்கான கோரிக்கையுடன் தொடர்புபடுத்தக்கூடிய தோழைமையை உருவாக்கும் விதத்தில் நகைச்சுவையைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்தது. நன்கு பிரசித்திபெற்ற பெண்ணிய செயற்பாட்டாளரான லி டிங்டிங் தலைமையிலான இருபது பெண்கள், பொது இடங்களில் பெண்களுக்கான கழிவறைகளின் அவசியத்தை எடுத்துக்காட்டும் வகையில் ஆண் கழிவறைகளை ஆக்கிரமிப்பதற்குத் தீர்மானித்தனர். முதல் "ஆக்கிரமிப்பு" 2012 பெப்ரவரி 19 ஆம் திகதியன்று குவாங்சோவில் இடம்பெற்றது, மற்றுமொரு ஆக்கிரமிப்பு பெய்ஜிங்கில் ஒரு வாரம் கழித்து நடத்தப்பட்டது. பெண்ணியக் காரணங்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக லியின் விளையாட்டுத்தனமான "கலைத் திறன்" மிகு ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்துவதை இந்தப் பிரச்சாரம் பிரதிபலித்தது.

**விளைவு:** சீனாவில் டுவிட்டர் போன்ற வெய்போ எனும் தளத்தில் இந்த இயக்கம் வைரலானதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்களின் பெரும் கவனத்தையும் ஈர்த்துக்கொண்டது. இறுதியில், குவாங்சோவில் உள்ள மாகாண அதிகாரிகள் பெண்கள் கழிப்பறைகளின் எண்ணிக்கையை 50 சதவீதம் அதிகரிக்க ஒப்புக்கொண்டதாக போராட்டத்திற்குப் பிறகு உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்தன. அத்தகைய ஆக்கபூர்வமான ஆலோசனைகளின் பிரதிபலன்களை அடைந்துகொள்ள முடிந்தாலும், அதில் ஆபத்து இல்லாமலும் இல்லை. 2015 இன் பிற்பகுதியில் லீ துன்புறுத்தலுக்கு இலக்கானதுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனினும் இறுதியில் அவரது செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்றார்




• Source: https://www.bbc.com/news/world-asia-china-32313650

### இ. தேசிய நிறுவனங்கள் மீதான அழுத்தத்தை அதிகரிக்க சர்வதேச அல்லது பிராந்திய சாதனங்களைப் பயன்படுத்துதல்

### நிகழ்வு ஆய்வு

பல வருடங்களாக மாலியில் தொடர்ந்து வந்த வன்முறை மற்றும் நிலையற்ற தன்மையை தொடர்ந்து, கடந்த 2015 ஆம் ஆண்டு சமாதான நல்லிணக்க உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையானது அரசாங்க அதிகாரிகள், வடக்கிலுள்ள ஒரு கிளர்ச்சிக் கூட்டணி மற்றும் அரசாங்க சார்புக் கூட்டணி ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 18 மாதங்களுக்குள் 600 க்கும் மேற்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐ.நா அறிவித்துள்ளது. மாலியின் நிலைமை இவ்வாறிருக்க அங்குள்ள மனித உரிமைப் பாதுகாவலர்கள் தாக்குதலுக்கும் உள்ளாகி வருகின்றனர். அத்துடன் அங்கு காணப்படும் நிலையற்ற தன்மை மனித உரிமை பாதுகாவலர்களின் பணிக்கு இடையூறாக அமைந்துள்ளது. தொடர்ச்சியான மிரட்டல்கள், வன்முறை மற்றும் தண்டனை என்பன அவற்றுள் சிலவாகும்.

**குறிக்கோள்** சட்டபூவர்மானதும் முறையானதுமான நீதித்துறை கட்டமைப்பை உருவாக்கி பழிவாங்கல்கள் மற்றும் தாக்குதல்கள் இன்றிய சூழலில் மனித உரிமை பாதுகாவலர்கள் பணியாற்றுவதை உறுதிசெய்தல்.

**மூலோபாயம்** - மனித உரிமைப் பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான பிரேரணை ஒன்றை மாலியின் நாடாளுமன்றில் முன்வைத்து அதனை ஏற்றுக்கொள்ளும் வகையிலான கோரிக்கையை மேற்கொள்ளல்.

**தந்திரோபாயம்** - மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றுவது குறித்து மாலியின் சிவில் சமூகமானது சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியிலான பொறிமுறைகளைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுத்தது. ஆபிரிக்காவின் துணை சஹரான் பகுதிகளில் உள்ள சிவில் சமூகமானது ஆபிரிக்காவின் ஆணையத்தால் பின்பற்றக் கூடிய வகையிலான சில தரங்களை உருவாக்கியது. அவை மனித உரிமைப் பாதுகாவலர்களின் பாதுகாப்பு கருதி சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறையை பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாவலர்கள் சர்வதேச ரீதியில் பங்கேற்கும் போது அவர்களுக்கான உரிமைகள் மற்றும் அவர்களின் நிதியுதவி குறித்த விடயங்களை மேற்குறித்த தரநிலைகள் உறுதி செய்கின்றன. அதுமட்டுமின்றி பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் வலது குறைந்தோர் ஆகியோருக்கான சிறப்பான ஏற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த பிரேரணையை வெற்றிகரமாக்குவதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புகளின் கூட்டணியானது பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுக்கவும் செய்தது. இதன் ஒரு அங்கமாக, வானொலி மட்டத்திலான பிரச்சார நடவடிக்கைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இதன்போது ஏறக்குறைய 56 உள்ளூர் வலையமைப்புக்களுடன் தொடர்புடைய வானொலி அமைப்பொன்றுடன் இணைந்து குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆறு மொழிகளில் இந்த பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்த கூட்டணியானது அமைச்சர்களுடனான பேச்சுவார்த்தையை வலுப்படுத்தியதோடு மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் குறிப்பாக காணி/நிலம் குறித்த சவால்களையும் முன்னிலைப்படுத்தி காண்பித்தது.

**விளைவு** - மாலியின் நாடாளுமன்றமானது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், மனித உரிமைப் பாதுகாவலர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பிரேரணைக்கு ஒப்புதல் அளித்தது. இத்தகைய சட்டத்தை உருவாக்குவது பல ஆண்டுகளுக்கு முன்னர் சாத்தியமற்ற ஒன்றாக காணப்பட்டிருக்கலாம். எனினும் சிவில் சமூகம் பரிந்துரைத்தமைக்கு ஏற்ப இந்த சட்டம் குறிப்பிட்ட தரநிலைகளுடன் ஆபிரிக்க ஆணையத்தின் மனித உரிமை விதிமுறைகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டது. உள்ளூர் மற்றும் சர்வதேச தலையீட்டின் காரணமாகவே மாலியின் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது எனலாம். அதாவது பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் வலது குறைந்தோருக்கான சிறப்பு சலுகைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாலியல் வன்புணர்வு மற்றும் பாகுபாடு காட்டுதல் போன்றவை தொடர்பிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.




• **Source:** ishr.ch

**ஈ. கம்போடிய ஆடை உற்பத்தி நிறுவனங்களை, ஆதரவளாளர்களாக கண்டறிதல்**

கம்போடியாவில் உள்ள சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் ஒருவிதமான அடக்குமுறை மற்றும் விரோதத்துடனான ஆட்சியை எதிர்கொள்கின்றனர். அதாவது பிரதமர் ஹன் சென் இன் தொடர்ச்சியான மூன்று தசாப்த கால ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், தந்திரோபாயத்துடனான முறைமையில் அடக்கப்படுகிறார்கள் எனலாம். 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளின் போது அந்நாட்டு அரசாங்கமானது சிவில் சமூகம், எதிர்க்கட்சியினர் மற்றும் சுயாதீன ஊடகம் ஆகியவை குரல் எழுப்ப முடியாதவாறு தனது பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்த காலகட்டத்தில் அடிப்படையான கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் மற்றும் கூட்டணி அமைத்தல் போன்றவற்றிற்கான சுதந்திரம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. அதுமட்டுமின்றி அந்நாட்டு அரசாங்கமானது சிவில் சமூகம் சுதந்திரமாக செயலாற்ற கட்டுப்பாடுகள் இருக்கும் வண்ணம் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் விதிகளை அமைத்தது. அதிலும் சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் (லாங்கோ) மற்றும் தொழிற்சங்கங்கள் மீது மிகக் கடுமையான சட்டங்கள் விதிக்கப்பட்டன. அதனால் தொடர்பு கொள்ளல், ஒன்றுகூடல் மற்றும் செயற்படல் என்பன மட்டுப்படுத்தப்பட்டன.

**குறிக்கோள்** -சிவில் சமூகம், சுயாதீன ஊடகங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன கம்போடிய சட்டத்தின் கீழ் தடையின்றி செயற்படுவதற்கான சூழலை உருவாக்கும் விதத்தில் சட்டதிட்டத்தை மாற்றியமைத்தல்.

**மூலோபாயம்** -கம்போடிய அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தல் மற்றும் தொழிற்சங்கங்கள், சுதந்திரமான சிவில் சமூகம், மற்றும் ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டுக் கொள்கைகளைப் பேணுவதற்கு அரசாங்கத்தால் எதிர்கொள்ளும் செலவுகளை உயர்த்துதல்.

**தந்திரோபாயம்** - சமூகம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பது குறித்து பன்னாட்டு நிறுவனங்களின் தலையீடு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது. இவ்வாறிருக்க, கம்போடிய சட்டத்தின் கீழ் அடிப்படை தரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு தொழிலாளர் உரிமை அமைப்புக்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பன, பல ஆண்டுகளாக H&M மற்றும் Addidas ஆகிய சர்வதேச தரத்தில்

அமைந்த வியாபாரக் குறிகளுடன் நல்லுறவை கட்டியெழுப்பும் பொருட்டு கடினமாக உழைத்தன. அதைத் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டு பிரதமர் ஹன் சென்னுக்கு அமெரிக்க ஆடை மற்றும் பாதணிகள் சங்கத்திடம் இருந்து கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதில் ஜனநாயக நிறுவனங்கள் கம்போடியாவில் அருகி வருகின்றமை குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து தங்களது கருத்துக்களை நேரடியாக கம்போடிய அரசாங்கத்திடம் தெரிவிக்கும் பொருட்டு உள்ளூர் அமைப்புக்கள் சர்வதேச அமைப்புக்களை பயன்படுத்திக் கொண்டன.

**விளைவு** - 2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொழிலாளர் உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக அரசியல் உள்நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுகளை அந்நாட்டு அரசாங்கம் முன்வைத்தது. எனினும் ஆடைத் தொழிற்சாலைகளின் தலையீடு காரணமாக முக்கிய ஆர்வலர்கள் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிடுமாறு தொழிலாளர் அமைச்சு நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டது.

அதைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் AAFA மற்றும் Fair Laour Association என்பன தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் கம்போடிய அரசாங்கத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தின. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் மீதான கட்டுப்பாட்டு சட்டத்தை மாற்றியமைக்குமாறும் கேட்டுக் கொண்டது. இருந்த போதிலும் கம்போடியாவில் உள்ள அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன தங்களது அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தும் பொருட்டு இன்னும் முயற்சித்துக் கொண்டுதான் இருக்கின்றன. எனினும் அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு வணிகத்தின் குரலைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் முயற்சி ஒரு சிறந்த உத்தியாகும்.



- **Source:** https://www.hrw.org/news/2016/10/24/secret-underbelly-cambodian-garment-industry

### உ. ஹங்கேரியில் அவதூறு மற்றும் களங்கத்தை கையாள முன்னெடுக்கப்பட்ட "Kella Tasz"

## நிகழ்வு ஆய்வு

2010 முதல், அதிகார துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்தும் சரிபார்ப்பு மற்றும் சமநிலைகளின் விரைவான தேய்மானத்தை ஹங்கேரி கண்டுள்ளது. 2010 இல் ஹங்கேரியில் விக்டர் ஓர்பனின் வெற்றியின் மூலம், அவரது சர்வாதிகார ஜனரஞ்சகத்தின் அடையாளம் நேரடியாக சிவில் சமூகத்திற்குப் பின்னால் சென்றது. வெளிநாட்டு நிதியுதவி பெறும் நிறுவனங்களை

கண்டிப்பாக கட்டுப்படுத்தும் வகையில் அவரது அரசாங்கம் 2017ஆம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றியது. இது அரச சார்பற்ற அமைப்புகளை 'பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்' மற்றும் 'வெளிநாட்டு முகவர்கள்' என்று முத்திரை குத்தியது. அரச சார்பற்ற அமைப்புகள் குறிப்பாக மனித உரிமைகள் அமைப்புகள், சராசரி மனிதனின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாததால், அவை சட்டப்பூர்வ தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பது அரசாங்கத்தின் பிரதான வாதங்களில் ஒன்றாகும். பெரும் களங்கப்படுத்தல் பிரச்சாரத்திற்கு பதிலளிக்கும் வகையில், ஹங்கேரிய சிவில் லிபர்டீஸ் யூனியன் (HCLU) ஹங்கேரிய மொழியில் ' HCLU தேவை' அல்லது Kell a TASZ "என்ற முயற்சியைத் தொடங்கியது

**குறிக்கோள்**: சிவில் சமூகத்திற்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை, சிவில் சமூகம் எதை அடைய விரும்புகிறது என்பதைப் பற்றிய நேர்மறையான, நம்பிக்கை நிறைந்த கதையாக மாற்றுவது.

**மூலோபாயம்:** சிவில் சமூக அமைப்புகள் நாட்டிற்கு சாதகமான பங்களிப்பை வழங்குகின்றன மற்றும் அனைத்து ஹங்கேரியர்களின் உரிமைகளுக்காகவும் வாதிடுகின்றன என்பதை ஹங்கேரியர்களுக்குக் காட்ட, பலதரப்பட்ட ஊடகங்கள் மற்றும் வெளிக்கள முயற்சியைத் தொடங்குதல்.

**தந்திரோபாயங்கள்** - சமூக ஊடக பிரச்சாரம் மற்றும் முக்கிய விடயத்தை வழங்குவதற்கான வெளிக்கள மூலோபாயம் ஊடாக, அவதூறு, மாறாத நிலைகொண்ட தன்மை மற்றும் களங்கத்தை HCLU நேரடியாக நிவர்த்திசெய்தது. சக்திவாய்ந்த குழுக்களின் சதித்திட்டங்களுக்கு எதிர்வினையாற்றுவதை விட அல்லது தாக்குதல் பிரச்சாரங்களை முன்னெடுப்பதை விட அவர்களது பதிலளிப்பு நேர்மறையாகக் காணப்பட்டது. ஹேஷ்டெக் குறியீட்டை பயன்படுத்தி ஒரு சமூக ஊடகப் பிரச்சாரமாகவே இது ஆரம்பமானது. ஆனால், பின்னர் வெளியீட்டு மூலோபாயமொன்றை உருவாக்கினர். இதன்மூலம், சிவில் சமூகக் குழுக்களுக்கு ஆதரவு தெரிவிக்காத ஹங்கேரிய சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுடன் நினைத்துப்பார்க்க முடியாத தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. இதன்போது, HCLU தலைவர்கள் இவ்வாறு எழுதினார்கள். "எமது பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை மனிதாபிமானமுள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் மனிதநேயமற்ற தாக்குதல்களுக்கு எதிர்வினையாற்ற நாம் விரும்புகின்றோம். தனிப்பட்ட கதைகள் மூலம் எமது குழுவினரை அறிமுகப்படுத்தினோம். இதனூடாக, அவர்கள் எம்மில் ஒருவர் என்பதையும் மனித உரிமைகள் அனைவரையும் பாதுகாக்கின்றது என்பதையும் பொதுமக்களுக்கு அறியப்படுத்தினோம்". போலி குற்றச்சாட்டுக்களை நேரடியாக சவாலுக்குட்படுத்தும் வகையில், ஏனைய ஹங்கேரியர்களுடன் பொதுவான விடயத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக, தமது பணியாளர்களினதும் அங்கத்தவர்களினதும் வாழ்க்கையின் உண்மையான கதைகளை HCLU பயன்படுத்தியது. மனித உரிமைகள் குறித்த பரப்புரை, தலைநகரில் உள்ள சிவில் சமூக அமைப்புகளுக்கு மட்டுமன்றி, நாடு முழுவதும் உள்ள அனைத்து ஹங்கேரிய குடிமக்களுக்கும் பயனளிக்குமென அவர்கள் வலியுறுத்தினர். இரண்டாவதாக, சமகால அரசியல்களின் பெருகிய முறையில் துருவப்படுத்தப்பட்ட பிரிவுகளுக்கு இடையே செயற்படும் "இணங்கச்செய்யக்கூடிய மனநிலையில் உள்ள மக்களின்" வெற்றிக்கான பிரச்சாரத்தை ஆரம்பித்தனர். ஓர்பனின் (Orban) ஆதரவாளர்கள் அல்லாத ஆனால், ஹங்கேரிய சிவில் சமூகத்துடன் அடிக்கடி தொடர்பைப் பேணாத பிரஜைகளை இது இலக்காகக் கொண்டது. நடுநிலையில் செயற்படும் மக்கள் தமது சொந்தக் கதைகள் மற்றும் பிரதிபலிப்புகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் ஹேஷ்டெக் (hashtag) பிரச்சாரத்தில் பங்கேற்கத் தொடங்கியதை அவர்கள் விரைவில் கண்டறிந்தனர். ஓர்பன் அரசாங்கமானது, சிவில் சமூகத்தை மூர்க்கத்தனமாக மாற்றி, அரசியல் ரீதியாக மக்களை பிளவுபடுத்திய பின்னணியில் பெற்றுக்கொண்ட இந்த வெற்றி கற்பனை செய்ய முடியாத ஒன்று.

**விளைவு:** இறுதியாக அவர்கள் எதற்காக செயற்படுகின்றனர் என்பதை செய்திகள் சுட்டிக்காட்டின. அவர்கள் எதிராக செயற்படவில்லை. அத்தோடு, அச்சவுணர்வை தூண்டாமல் அவர்களின் நோக்கம் மற்றும் நம்பிக்கையை விளக்கிக்கூறியது. ஹங்கேரிய சிவில் சமூகம் என்ன செய்கிறது என்பதை விளக்குவதற்காக எளிய மொழி மற்றும் நகைச்சுவைகளை பயன்படுத்தி மீம்கள், உத்வேகம் அளிக்கும் மேற்கோள்கள் மற்றும் வீடியோக்களுடன் கூடிய பதிவுகளை உருவாக்கினர். பல தொடர்பாடல் ஊடகங்களை

பயன்படுத்தினர். வரைகலை வரைஞர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் ஏனைய கலைஞர்களிடம் தமது வேலையைப் பற்றிய அறிக்கைகளை வெளியிடும்படி கோரி, வழக்கமான நபர்களுக்கு அப்பாற்சென்றனர். பொதுமக்களின் மிகப்பெரிய ஆதரவை அவர்கள் பெற்றுக்கொண்டனர். HCLUக்கு ஆதரவாக சாதாரண பொதுமக்களிடமிருந்து கிடைத்த நன்கொடைகள் மற்றும் எழுத்துப்பூர்வ சான்றுகள் மூலம் இதனை அறிந்துகொள்ள முடிகின்றது.




• **Source:** www.euractiv.com

**ஊ. "வீகர்" புலம்பெயர்**
**இயக்கத்துடன் பணிபுரிதல்**

**புலம்பெயர் இயக்கம்**

சீனாவில் உள்ள சிறுபான்மை முஸ்லிம் இனத்தவர்கள் மற்றும் வீகர் முஸ்லிம் இனத்தவர்களை தண்டிக்கும் பொருட்டும் அவர்களை கல்வி கற்கச் செய்யும் பொருட்டும் சீனாவின் சிங்ஜியாங் பிராந்தியத்தில் அந்நாட்டு அரசாங்கம் முகாம்களை உருவாக்கியதாக நிவ்யோர்க் டைம்ஸ் மற்றும் ஏனைய ஊடகங்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு செய்தி வெளியிட்டன. அதன் போது குழந்தைகள் உட்பட சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் அந்த முகாம்களில் இருந்ததாக தகவல்கள் வெளியாகின. சீனாவில் உள்ள வீகர் இனத்தவர்கள் மிகத் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வந்ததுடன் அரசாங்கத்திற்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்பொழுதும் சீன அரசாங்கத்தால் இது போன்ற சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீகர் இனத்தவர்களின் கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறைமை ஆகியவற்றுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை, உலகிற்கு எடுத்துக் காட்ட முடியாமைக்கு, வெளி உலகத்துடனான போதிய தொடர்பு இன்மையே காரணம் எனலாம்.

**குறிக்கோள்** - சீனாவில் உள்ள வீகர் இனத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தீவிரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் இந்த விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் மீது அழுத்தத்தை ஏற்படுத்தல்.

**மூலோபாயம்** - புலம்பெயர் குழுக்களுக்கும் தனிநபர்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஆவணப்படுத்துதல், துஷ்பிரயோகங்களை அம்பலப்படுத்தல் மற்றும் பலதரப்பு மனித உரிமை அமைப்புகள் மூலம் இவ்விடயத்தை வெளிச்சமிட்டு காட்டுதல்.

**தந்திரோபாயம்** - புலம்பெயர்ந்து வந்த வீகர் இனத்தவர்களின் எண்ணிக்கை சுமார் 1.6 மில்லியன்கள் என உலக வீகர் காங்கிரஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. வீகர் இனத்தவர்களுக்கு இழைக்கப்படும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பில் புலம்பெயர் வீகர் சிவில் சமூக அமைப்புகளின் ஆராய்ச்சி மற்றும் கட்டுரை தயாரித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தரப்பினரால் ஊடகங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக சொல்லப்போனால் அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் வீகர் மனித உரிமைகள் திட்டம் (2004 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது) மற்றும் வீகர் அமெரிக்கச் சங்கம் என்பன (1998 இல் உருவாக்கப்பட்டது) சின்ஜியாங்கில் உள்ள வீகர் இனத்தவர்கள் மற்றும் அழியும் தருவாயில் உள்ள ஏனைய சிறுபான்மை இனத்தவர்களின் மனித உரிமை தொடர்பில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை மேற்கொண்டன. இவ்விரு அமைப்புக்களும் உலக வீகர் காங்கிரஸ் மற்றும் ரேடியோ ப்ரீ ஏசியா ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து சீன அதிகாரிகளுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து அமெரிக்க காங்கிரஸில் உள்ள 17 அங்கத்தவர்களை சீன அரசாங்கத்தின் மீது அழுத்தம் ஏற்படுத்த வைக்கும் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொண்டன. அத்துடன் சீனாவின் தடுப்பு முகாம்கள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற அவசரத் தீர்மானக் குழுவையும் அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட வைத்தன.

**விளைவு** - பாரிய அளவிலான இந்த மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்த விடயம் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்தது. அதைத் தொடர்ந்து, புலம்பெயர்ந்தவர்களை அமைதிப்படுத்த சீன அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. மனித உரிமை மீறல்கள் ஏற்படினும் அதற்கு முகங்கொடுத்து எதிர்நீச்சல் போடும் புலம்பெயர்ந்தவர்களின் வல்லமையே இதற்கான காரணம் ஆகும். சீனாவின் நட்பு நாடுகளான எகிப்து, வியட்நாம் மற்றும் தாய்லாந்து என்பன சீனாவுக்கு சாதகமாக இருக்கும் வகையில் புலம்பெயர்ந்தவர்களை தடுத்து வைத்து, விசாரித்து பின்னர் திருப்பி அனுப்பி வைத்தன. எனினும் குறித்த நடைமுறைக்குள் சிக்காமல் சுதந்திரமாக வெளியே இருப்பவர்கள் தொடர்ந்தும் சர்வதேச சமூகம் மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன வீகர் இனத்தவரின் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என சீனா மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தன. திகிலூட்டும் சான்றுகள் மற்றும் செய்மதி மூலம் பெறப்பட்ட புகைப்படங்கள் என்பன காரணமாக சர்வதேசத்திலிருந்து சீனா மீது தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக புலம்பெயர்ந்தவர்களை ஏற்கும் நடவடிக்கையை சீனா ஆரம்பித்தது.




- **Source: pri.org**

## எ. டிஜிட்டல் தொழிநுட்பங்களில் புத்தாக்கமான பயன்பாடு

### சீனாவின் #METOO இயக்கம்

2018ஆம் ஆண்டில் சீனாவில் கடும் தணிக்கைகளை தாண்டி #MeToo பிரச்சாரம் சென்றடைந்ததோடு, இது பல சீன பெண்களை பாலியல் துன்புறுத்தல் தொடர்பான தமது அனுபவங்களை இணையவெளியில் பேசுவதற்கு வழிவகுத்தது. இப்பிரச்சினை தொடர்பாக ஊடகங்கள் ஆராயவோ அறிக்கையிடவோ இல்லை. பொலிஸாரும் கரிசனை கொள்ளவில்லை. இந்நிலையில், தமது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான ஒரே இடமாக இணையம் காணப்பட்டது. இந்த வெளிப்பாடுகளைச் சுற்றியுள்ள வேகம் இயற்கையானது மற்றும் தன்னிச்சையானது. இது எந்தவொரு அமைப்பினாலும் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால் கண்காணிப்பும் அழுத்தமும் நீடித்தால், கண்ணோட்டத்தை மாற்றவும் நடவடிக்கை எடுக்க வற்புறுத்தவும் சமூக ஊடகங்களுக்கு உள்ள சக்தியை நிரூபித்தது. அத்தோடு, பாரியளவு மக்களை சென்றடையும் என்பதையும் காட்டியது.

**குறிக்கோள்:** பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதன் ஊடாக, சீனாவில் பரவலாக காணப்படும் பாலியல் துன்புறுத்தல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றமை மற்றும் மீறி செயற்படுவோரை பொறுப்புக்கூற வைக்கின்றமை.

**தந்திரோபாயங்கள்:** #MeToo இயக்கம் சீனாவில் நுழைந்தவுடன், பாலியல் துன்புறுத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, பாதிக்கப்பட்ட பெண்கள் தாமாக முன்வந்து சமூக ஊடகங்களில் தமது அனுபவத்தை பகிர்ந்தனர். அத்தோடு, இவ்வாறான பாதிப்பை அனுபவித்தவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவும் இது கையாளப்பட்டது. இதில் முக்கியமான ஒரு சம்பவம் பதிவாகியது. அதாவது, தன்னை பேராசிரியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக, பெய்ஜிங்கில் உள்ள பெய்ஹாங் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரான Luo Qianqian என்பவர் சமூக ஊடகத்தில் பதிவிட்டார். குறித்த பதிவு விரைவாக தணிக்கை செய்யப்பட்டபோதும், அந்த பதிவு வைரலாகிவிட்டது. அதே பேராசிரியருக்கு எதிராக பெய்ஹாங் பல்கலைக்கழகத்தின் மேலும் ஐந்து மாணவர்கள் இதே குற்றச்சாட்டை முன்வைத்தனர். குறித்த குற்றச்சாட்டை மூடி மறைக்க அதிகாரிகள் முற்பட்டனர். எனினும், இறுதியில் பேராசிரியர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஏனைய பல்கலைக்கழகங்களில் இருந்தும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக வரவே, அதன் வேகம் தணியவில்லை.

**விளைவு:** பெய்ஜிங் பல்கலைக்கழகம், ஃபுடான் பல்கலைக்கழகம் மற்றும் வுஹான் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பல்கலைக்கழகங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுக்க கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துமாறு கல்விசார் அதிகாரிகளிடம் கோரிக்கையொன்றை முன்வைத்தனர். பல்கலைக்கழகங்களில் பாலியல் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான கொள்கை வழிகாட்டுதலை வழங்குமாறு கல்வி அமைச்சை வலியுறுத்தும் பிரகடனத்தில் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் 2018ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி கையெழுத்திட்டனர். அரசாங்கம் இன்னும் உறுதியான கொள்கையொன்றை அறிமுகப்படுத்தவில்லை. ஆனால், இந்த பிரச்சாரம் விரைவாக வலுப்பெற்றது. தணிக்கையாளர்களால் முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. சீனா போன்ற நாட்டிலும் இதனை வெற்றிகரமாக செயற்படுத்தியமை, இணையம் ஊடான பிரச்சாரம் நடவடிக்கையின் பலத்தை நிரூபிக்கின்றது.




• **Source:** www.restofworld.org

# ஊடக பரப்புரை கருவித்தொகுப்பு

**ஜனநாயக இலங்கைக்காக ஊடகங்களை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (MEND)**

